விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி


பக்கங்கள்: பதினாறு

Valampurii

சங்கு 11 வள்ளுவர் ஆண்டு 2043 புரட்டாதி 01 வெள்ளிக்கிழமை (17.09.2010) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 272

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

# ரணில் நியமித்தார்; சுமந்திரன் நிராகரித்தார்





(கொழும்பு)

**அண்மையில் கொண்டு வரப்பட்டுள்ள 18ஆவது அரசியலமைப்புச் சட்டத்தின் கீழ் அமைக்கப்படவுள்ள நாடாளுமன்ற சபை உறுப்பினர்களில் ஒருவராகத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனை எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க நியமித்துள்ளார். ஆயினும் இந்த நியமனத்தை சுமந்திரன் நேற்று நிராகரித்திருக்கின்றார்.**

18ஆவது அரசியலமைப்புச் சட்டமானது ஏற்கனவே நடைமுறையில் இருந்து வந்த 17 ஆவது அரசியலமைப்புத் திருத்தச்சட்டத்தை இல்லாமல் செய்கின்றது. அத்துடன் தேர்தல் (16ஆம் பக்கம் பார்க்க)

## பான் கீ மூனிடம் மகிந்த எதிர்ப்பை வெளியிடுவார்!

(கொழும்பு)

ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் குழு நியமனம் தொடர்பில் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ, பொதுச் செயலாளர் பான் கீ மூனிடம் கடும் எதிர்ப்பை வெளியிடுவார் என அரசாங்கத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

உள்நாட்டில் ஆணைக் குழுவொன்றினால் விசாரணைகள் நடத்தப்பட்டு வரும் வேளையில் இவ்வாறு ஐக்கிய நாடுகள் அமைப்பு விசாரணை நடத்துவதனை ஏற்றுக் கொள்ள முடியாது என ஜனாதிபதி தெரிவிக்க உள்ளதாகக் குறிப்பிடப்படுகிறது.

எதிர்வரும் 24ஆம் திகதி ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ ஐக்கிய (16ஆம் பக்கம் பார்க்க)

## வெளிநாடுகள் தலையிட உரிமையுள்ளது-ரணில்

(கொழும்பு)

இலங்கையில் ஜனநாயக உரிமைகள் மீறப்படும் போது அது தொடர்பில் மனித உரிமைகள் சாசனத்தில் கைச்சாத்திட்டுள்ள நாடுகள் என்ற அடிப்படையில் வெளிநாடுகளுக்கு இலங்கையிடம் கேள்வி எழுப்ப அதிகாரம் இருப்பதாக எதிர்க்கட்சித்தலைவர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

18ஆவது சீர்திருத்தம் தொடர்பாக மாகாண சபை உறுப்பினர் (16ஆம் பக்கம் பார்க்க)

## இராணுவ உறவைப் பலப்படுத்த சீனா-இலங்கை அரசு தீர்மானம்!

(கொழும்பு)

இராணுவ உறவுகளைப் பலப்படுத்துவதற்கு சீனாவும் இலங்கையும் நேற்று இணங்கியுள்ளன.

இலங்கை பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ தலைமையிலான தூதுக்குழுவினருக்கும் சீனாவின் மக்கள் விடுதலை இராணுவத்தின் (பி.எல்.ஏ) பிரதம பொது அதிகாரிகளின் தளபதி சென் பிங்டேவுக்கும் இடையிலான சந்திப்பின்போது இது குறித்து கலந்துரையாடப்பட்டது.

சீன-இலங்கை இராணுவ உறவுகள் அண்மைக்கால வருடங்களில் தொடர்ச்சியான ஐக்கியமும் அபிவிருத்தியும் காணப்பட்டதாக சென் பிங்டே கூறினார்.

தாய்வான், திபெத் விவகாரங்களில் சீனாவுக்கு இலங்கை ஆதரவு தெரிவிப்பது குறித்து அவர் நன்றி தெரிவித்தார்.

இரு நாடுகளின் ஆயுதப் படைகளுக்கிடையிலான பரஸ்பர நட்புணர்வு பரிமாற்றங்களையும் ஒத்துழைப்புக்களை யும் அதிகரிப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு சீனா விருப்ப ம் தெரிவித்துள்ளது. (ச-5)

## நாடாளுமன்ற சபை ஜனவரியில் ஆரம்பம்

(கொழும்பு)

18ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் கீழான நாடாளுமன்ற சபை ஜனவரி மாதம் செயற்பட ஆரம்பிக்கும் என அரசாங்கம் நேற்று தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமைச்சரவைப் பேச்சாளரான ஊடகத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல கூறுகையில், ஜனவரிமாதம் ஏழு சுயாதீன ஆணைக் குழுக்களும் நாடாளுமன்ற சபை (16ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சி வலய ஆசிரியர்களின் தற்காலிக இணைப்புக்கள் இரத்து

### புரட்டாதி மாதச் சம்பளம் கிளிநொச்சியில்

(கிளிநொச்சி)

யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் கிளிநொச்சி வலயப் பாடசாலை ஆசிரியர்களுக்கான தற்காலிக இணைப்புகள் இரத்து செய்யப்பட்டுள்ளதாக கிளிநொச்சி வலயக் கல்விப் பணிப்பாளர் த.குருகுலராஜா அறிவித்துள்ளார்.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளரினால் வழங்கப்பட்ட அறிவுறுத்தலுக்கு அமைய கடந்த 7 ஆம் திகதி முதல் தற்காலிக இணைப்புகள் நிறுத்தப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

இது தொடர்பில் அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு, (16ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ் கட்சிகளின் அரங்கத்தின் அடுத்த சந்திப்பு கிளிநொச்சியில்

(கொழும்பு)

தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தின் அடுத்த சந்திப்பு வன்னி மாவட்ட மக்களின் பிரதிநிதிகளின் பங்குபற்றலுடன் கிளிநொச்சியில் இடம்பெறவுள்ளதாக தமிழ்த் தேசிய விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் எம்.கே. சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

இச்சந்திப்புக்கு முதல் வன்னி பகுதி மக்களை சந்தித்து கலந்தரையாடியபின்னர் கிளிநொச்சி நகரில் சந்திக்கவுள்ளதாகவும் அவர் குறிப் பிட்டார்.

தமிழ்க் கட்சிகளின் அரங்கத்தின் அனைத்துத் தலைவர்களும் இக் கூட்டத்தில் கலந்து கொள்வார்கள் என எதிர்பார்ப்பதாக வும் எம்.கே சிவாஜிலிங்கம் தெரிவித்தார்.

தமிழ்க்கட்சிகளின் அரங்கம் தமிழ் மக்களுக்கான எவ்வாறானஒருதீர்வுத்திட்டத்தைமுன் வைக்கவுள்ளது (16ஆம் பக்கம் பார்க்க)

## யாழ்தேவியில் மோதி மாணவன் பலி


(கொழும்பு)

கம்பகா புலுகொட பிரதேசத்தில் தந்தையை புகையிரத நிலையத்தில் இறக்கிவிட்டு தனது துவிச்சக்கர வண்டியில் வீடு திரும்பிக் கொண்டிருந்த 16 வயது பாடசாலை மாணவன் ஒருவன் கொழும்பு கோட்டையிலிருந்து வந்த யாழ்தேவி கடுகதி ரயிலில் மோதி ஸ்தலத்திலேயே பலியான சம்பவம் ஒன்று நேற்றுக்காலை நிகழ்ந்துள்ளது.

கடவத்த கனேமுள்ள பிரதேசத்தை சேர்ந்த ஆர்.டீ.ரவிந்து (16ஆம் பக்கம் பார்க்க)

## இறுதிப் போரின் இறுதிநாள் வரை பிரபாகரன் சரணடைய விரும்பவில்லை

### பாதுகாப்புச் செயலர் பேட்டி





(புதுடில்லி)

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வே.பிரபாகரன் சரண் அடைய விரும்பி இருக்கவில்லை என்று பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் கோத்தபாய தெரிவித்தார்.

இந்தியாவின் த ஏசியன் எஜ் பத்திரிகைக்கு வழங்கிய பிரத்தியோக பேட்டி ஒன்றில் இதனைத் தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் அவர் முக்கியமாக தெரிவித்திருந்தவை வருமாறு, புலிகள் இயக்கத்தின் (16ஆம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# UNI-ICT CAMPUS

83,PALALY ROAD,
KANTHARMADAM,
JAFFNA.

JAFFNA ROAD,
MANIPAY.

*DIAL :0776110802*

*"THE ASSOCIATION OF BUSINESS EXECUTIVES (U.K)",DIPLOMA IN BUSINESS ADMINISTRATION* தகைமை உடைய ஆங்கிலத்தில் சரளமாக எழுதவும்,உரையாடவும்,வியாபாரத் தொடர்பாடல் நுட்பங்கள் *(BUSINESS COMMUNICATION & PRESENTATION TECHNIQUES)* உடையவரும் கொழும்பில் 10 வருடங்களுக்கு மேல் ஆங்கிலம் கற்பித்த ஆசிரியரால் கற்பிக்கப்படுகிறது.

**GENERAL ENGLISH LEADING TO SPOKEN**

அடிப்படை இலக்கணம், பிழையற்ற சொற்கள், பிழையற்ற வசனங்கள் ,வாசித்து கிரகித்தல் (READ & COMPREHEND), அடிப்படையில் இருந்து வாசித்து கதைத்து சம்பாசனை செய்யக் கூடியதாக கற்பிக்கப்படும்.

**BUSINESS ENGLISH.COMMUNICATION & PRESENTATION**

ஏற்கனவே சராசரியான ஆங்கில அறிவு உடையோருக்கும் அந்த ஆங்கில அறிவை தொழில் ரீதியாக உபயோகிப்போருக்கும் அதனை மேலும் மெருகூட்ட (TO ENHANCE,IMPROVE &DEVELOP) எண்ணியுள்ளோருக்கும் அரச,தனியார்,வங்கிகள் ,அரசு சார்பற்ற பல்தேசிய நிறுவனங்களில் தொழில்புரிவோர், எதிர்காலத்தில் இத்துறையில் பிரவேசிக்க உள்ளோருக்கும் கற்பிக்கப்படும்.

**இக்கற்கைநெறியின் சிறப்பம்சங்கள்**

- *மாணவர்களின் எண்ணிக்கை வரையறுக்கப்பட்டுள்ளது.*
- *பாடவேளைகள் 90 நிமிடங்கள் மட்டுமே (1.30 hrs)*
- *மாணவர்கள் , மாணவியர் தனிப்பிரிவுகள்.*
- *தொழிலுக்கு செல்பவர்களுக்கு சனி, ஞாயிறு வகுப்புகள் மட்டும்.*
- *ஒவ்வொரு மாத முடிவிலும் கணிப்பீடுகள், கலந்துரையாடல்களுடன் கூடிய பூரண விளக்கங்கள்*
- *நியாயமான மாதாந்தக் கட்டணமுறை* (2481)

**பதிவுகள் தற்போது ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.**
**வகுப்புகள் அனைத்தும் 01.10.2010இல் ஆரம்பம்.**


## வங்கியாளர் பரீட்சை இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கியாளர் சங்கத்தினால் நாளையும் நாளை மறுதினமும் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையில் நடைபெறவிருந்த வங்கியாளருக்கான (CBF,DBF) பரீட்சைகள் திருக்குடும்ப கன்னியார் மடத்துக்கு மாற்றப்பட்டுள்ளதாக மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரட்ணம் அறிவித்துள்ளார். (ச-3)

## தொண்டர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை செஞ்சிலுவை சங்க உடுவில் பிரிவுத் தொண்டர்களின் தகவல்களை கணனிமயப்படுத்தும் செயற்திட்டம் மற்றும் செயற்பாட்டு அறிக்கை தொடர்பான கலந் துரையாடல் நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 11.00மணிக்கு தாவடி இந்து தமிழ் கலவன் பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

இலங்கை செஞ்சிலுவைச் சங்க உடுவில் பிரிவின் அனைத்துத் தொண்டர்களையும் தவறாது கலந்துகொண்டு தங்களது வருகையினை உறுதிப்படுத்திக்கொள்ளுமாறு இலங்கை செஞ்சிலுவைச் சங்க உடுவில் பிரிவுத் தொண்டர் தலைவர் பா. கஜந்தன் அறிவித்துள்ளார். (ச)

## விஞ்ஞான கணித பாடங்களுக்கான இரு மொழிக் கல்விச் செயலமர்வு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மொழியில் கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் ஆசிரியர்களை ஆங்கில மொழி மூலம் மேற்படி பாடங்களைக் கற்பிக்கும் தேர்ச்சியை வழங்குவதற்கான செயலமர்வு வார இறுதி நாட்களில் தொடர் நிலையில் 12 நாட்கள்நடைபெறவுள்ளது.

வலிகாமம், வடமராட்சி, யாழ்ப்பாணம் வலயங்களுக்குரிய ஆசிரியர் மத்திய நிலையங்களில் இவை நடைபெறும். யாழ்ப்பாணம் மத்திய நிலையத்தில் எதிர்வரும் 22 ஆம் திகதி புதன் கிழமை ஆரம்பமாகும். எனவே பங்கேற்க விரும்பும் ஆசிரியர்கள் எதிர்வரும் 21 ஆம் திகதிக்கு முன் உரிய நிலையங்களில் தங்கள் பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகின்றனர். இடைநிலை வகுப்புக்களில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு பொருத்தமானது என யாழ். வலயக் கல்விப்பணிப்பாளர் திருமதி அ. வேதநாயகம் அறிவித்துள்ளார். (ச)


**வீடு வாடகைக்கு உண்டு**

யாழ்.பிரதான வீதிக்கு அருகிலுள்ள மவுண்கார்மேல் வீதியில் வாகனத்தரிப்பிடம் உள்ளடங்கியதாக வீடு வாடகைக்கு உண்டு. அரச அலுவலகங்கள் அல்லது அரச சார்பற்ற அலுவலகங்கள் விரும்பத் தக்கது.

**தொடர்பு:- 0770260404**

(2482)

**காணி விற்பனைக்கு**

சுதுமலை தெற்கில் வீடு காணி விற்பனைக்கு.
தரகர் தேவையில்லை.
**தொடர்பு:** காலை வேளைகளில்.
**தொடர்புகள் :-**
★ K சிவறட்ணம்,
Rigistrar சம்பந்தர் ஒழுங்கை,
சுதுமலை தெற்கு.
★ K. குணறட்ணம்,
எச்சாட்டி வைரவர் கோவிலடி,
சுதுமலை தெற்கு.

(2471)


# அரசாங்க அறிவித்தல்

## நிவாரண விநியோகத்திற்குரிய பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான கூறுவிலை கோரல்

யாழ்.மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களுக்கு மூன்று மாதங்களுக்குரிய நிவாரண விநியோகத்தை மேற்கொள்வதற்காகப் பின்வரும் பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான கூறுவிலைகள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபரினால் கோரப்படுகின்றன.

01. சிவப்பு நாட்டரிசி
02. கோதுமை மா
03. சீனி
04. பருப்பு

இப் பொருட்கள் கொள்வனவு செய்வதற்கான முத்திரையிடப்பட்ட (Sealed) கூறுவிலைகள் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபரினால் கோரப்படுகின்றது.

இப் பொருட்களை விற்பனை செய்ய விரும்புபவர்கள் மீளளிப்பு அற்ற பணமாக ரூபா.5000.00 உம், மீளளிக்கக் கூடியதான வைப்பாக ரூபா.50,000.00 உம் செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் புனர்வாழ்வுக் கிளையில் பெற்றுத் தபால் உறையின் மேல்மூலையில் 'நிவாரண விநியோகத்துக்குரிய பொருட்களுக்கான கூறுவிலை' எனக் குறிப்பிட்டு 27.09.2010 ஆம் திகதி முற்பகல் 10 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு புனர்வாழ்வுக் கிளையில் உள்ள கேள்விப் பெட்டியில் நேரடியாக அல்லது பதிவுத் தபால் மூலம் (Seal) இடப்பட்ட கடித உறையில் தங்களது கூறுவிலைகளைச் சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றார்கள்.

கூறுவிலைகள் சமர்ப்பிக்கப்படும்போது அப் பொருட்களுக்கான மாதிரி சமர்ப்பிக்கப்பட வேண்டும். பொருட்கள் கொள்வனவு செய்தல் தொடர்பாக பொருட்களின் தரம், கேள்வி, நிபந்தனைகள் மற்றும் விண்ணப்பப் படிவங்களை மாவட்டப் புனர்வாழ்வு புனரமைப்புச் செயலகத்துடன் தொடர்பு கொண்டு 20.09.2010 ஆம் திகதி முதல் பெற்றுக் கொள்ள முடியும்.

கூறுவிலைகள் 27.09.2010 ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்குத் திறக்கப்படும். இதில் கூறுவிலை சமர்ப்பித்தவர் அல்லது அவரின் அனுமதி பெற்ற பிரதிநிதி சமுகமளித்திருக்க முடியும். பொருட்களை விநியோகிப்பவர்கள் கோரப்படும் தொகையினைக் கொள்வனவு கட்டளை வழங்கப்பட்ட தினத்தில் இருந்து இரு வாரத்தினுள் நாவற்குழி களஞ்சியத்தில் இறக்கி ஒப்படைத்தல் வேண்டும்.

**கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.**

**திருமதி இமெல்டா சுகுமார்**
**அரசாங்க அதிபர்/மாவட்டச் செயலகம்,**
**யாழ்.மாவட்டம்.** (சி/1197)


◆ A/L பெறுபேறுகளை எதிர்பார்த்திருக்கும் மாணவியரே!
◆ வெளிநாடு செல்லவிருக்கும் மங்கையரே!
◆ உள்ளூரில் சுயமாகத் தொழில் புரிய விரும்பும் நங்கையரே!
◆ இல்லத்தரசிகளே! மற்றும் ஆர்வமுள்ள மகளீரே!

எமது 25 வருடகால சேவையில் எம்மிடம் பயிற்சிபெற்ற ஆயிரக்கணக்கானோர் உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் இத்துறையில் முன்னணியில் திகழ்கின்றனர். நீங்களும் அவ்வாறே ஆகவேண்டுமா?

**இதோ உங்களுக்கான 3 மாத சான்றிதழ் பயிற்சிகள்**

கிழமைநாள் பயிற்சிகள் ஆரம்பம்: 22-09-2010

கேக் ஐசிங் | உணவு தயாரித்தல் | கைவேலை
கூந்தல் அலங்காரம் | ப்ரிக் வர்ணம் தீட்டுதல் | பூவேலை

மேற்குறித்த பயிற்சிகளின் நடுப்பகுதியில் 15 நாள் Facial, மணப்பெண் அலங்காரம், Pedicure, Manicure, முடிஅயன்செய்தல், Perming, நிறமூட்டுதல், முடிவெட்டுதல் பயிற்சிகளும் நடைபெறும்.

**தையல் அறிவு அற்றவர்களுக்கான 6 மாத உடை தயாரித்தல் பயிற்சிகள்**
தையல் தெரிந்தவர்களுக்கான 15 நாள் சான்றிதழ் அற்ற சாறி பிளவுஸ், சுரிதார், சட்டை, Skirt தைக்கும் பயிற்சிகளும் ஆரம்பமாகின்றன.

மேற்குறிப்பிட்ட தையல் பயிற்சிகள் சனி, ஞாயிறு தினங்களிலும் நடைபெறவுள்ளன.
ஆரம்பம்: 19-09-2010 (ஞாயிறு)

மேலும் விபரங்களை தினமும் பி.ப 2.00 மணி வரை நேரில் அறிந்து கொள்ளலாம்.

25 வது ஆண்டில்
**கலாலயா** பயிற்சியகம்
பெருமாள் கோயிலுக்கு அண்மையில் - யாழ்ப்பாணம்

குறிப்பு : வடமராட்சி, தென்மராட்சி மாணவிகளுக்கு ஸ்ரீவல்லிபுர ஆழ்வார் பெருந்திருவிழா நிறைவுபெற்றபின்னர் பயிற்சிக்கான விசேட அனுமதி வழங்கப்படும் Guru

**காணி விற்பனைக்கு**

இணுவில் தியேட்டர் ஒழுங்கையில் கே.கே.எஸ் வீதிக்கு 50m தூரத்தில் சுற்றுமதில் கிணற்றுடன் கூடிய 6 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு. 3 பரப்பாகவும் பிரித்துக் கொடுக்கப்படும்.

தொடர்பு :-
0778445323 (2483)

**செல்லா சினிமா** 09.09.2010 முதல்



மம்முட்டி அர்ஜுன் சினேகா மற்றும் பலர் நடிப்பில்
ரம்ழான் பெருநாளை முன்னிட்டு இந்திய இலங்கை ஒரேதின வெளியீடு
**வந்தே மாதரம்**
அக்‌ஷன் காட்சிகள் நிறைந்த படம்
D.இமான் | ஹென்றி | அரவிந்த்.T.
பாடல்கள் : வைரமுத்து. நந்தலாலா. சினேகன். விவேகா.
காட்சி நேரம்:- 10.30, 2.30, 6.00, 9.00

# இன்று ஒரு தகவல்

## ஜீவ காருண்யம்

ஒருத்தருக்கு கத்தரிக்காய் மிகவும் பிடிக்கும் என்றால் இன்னொருத்தருக்குப் பூசணிக்காய் பிடிக்கும். ஒருத்தருக்கு கோயிலுக்குப் போக விருப்பமாயிருக்கும். இன்னொருத்தருக்கு ஹோட்டலுக்குப் போக விருப்பமாயிருக்கும்.

இவ்வளவு ஏன்?

எனக்குத் தெரிந்த ஒரு இணைபிரியாத தம்பதிகள் இருந்தார்கள். அவர் புடைவைக் கடைக்குப் போய் புடைவை வாங்கிக் கொண்டு வந்தார். வழியில் கண்டேன்.

"என்ன விடயம்?" என்று விசாரித்தேன்.

"எங்களுக்கு இன்றைக்குத் 'திருமணநாள்' அதற்குப் பரிசாக இந்தப் புடைவையை வாங்கிக் கொண்டு போகிறேன். எனக்குப் பிடித்த பச்சைக் கலர். திடீரென்று கொண்டு போய்க் கொடுத்து ஆச்சரியப்படுத்தப் போகிறேன்'' என்று சொல்லிவிட்டு அவசரமாக ஓடினார். அவர் மனைவியை ஆச்சரியப்படுத்தினாரோ இல்லையோ என்னை ஆச்சரியப்படுத்தினார். ஆமாம்! எவ்வளவு வேகமாக ஓடினாரோ அதை விட வேகமாக திரும்பி ஓடிவந்தார்.

"என்ன விடயம்?'' என்று விசாரித்தேன்.

''புடைவையின் கலர் பிடிக்கவில்லையாம். அதுதான் மாற்றிக் கொண்டு வரலாம் என்று கடைக்குப் போகிறேன்" என்று சொல்லி விட்டு ஓடினார்.

இதை எதற்குச் சொல்கிறேன் என்றால்...

ஒருவருடைய மனசு இன்னொருவருடைய மனசு போல இருப்பதில்லை. ஆனால் எல்லோருக்கும் ஒரு விடயத்தில் மட்டும் ஒரே மனசு.

அதாவது சந்தோஷமாக இருக்கவேண்டும் என்று எல்லோரும் ஆசைப்படுகிறார்கள்.

மனிதர் மட்டுமல்ல ; பறவை, விலங்கு எல்லாவற்றிற்கும் இது தான் அடிப்படையான நோக்கம்.

நோக்கம் சரி, ஆனால் எல்லோரும் சந்தோஷமாக இருக்கிறார்களா? எப்பொழுதும் கஷ்டப்படுவதாகத் தானே எல்லோரும் புலம்பிக் கொண்டிருக்கிறார்கள்.

இதற்கு என்ன காரணம்? வழி தெரியாதது தான் காரணம்.

என்ன விதைக்கிறோமோ, அது தானே விளையும்.

குசேலரைப் பற்றி உங்களுக்குத் தெரியும். வறுமையில் வாடிய அவர் கண்ணனைப் பார்ப்பதற்காக துவாரகைக்குப் போய்க் கொண்டிருக்கிறார். அவரிருக்கும் இடத்திலிருந்து துவாரகை மிகவும் தூரம்.

கடுமையான வெயிலில் நடந்து போய்க் கொண்டிருந்தார். குடை, செருப்பு எதுவுமேயில்லை. வீதியின் இரு மருங்கிலும் நிழல் தருமரங்கள் இருந்தன.

இருந்தாலும் இவர் நிழலில் போகவில்லை. வெயிலிலேயே போய்க் கொண்டிருந்தார்.

காலை நிலத்தில் வைக்க முடியாத அளவுக்கு சூடு இருந்தது.

இருந்தாலும் அவர் நிழலில் ஒதுங்காமல் நடு வீதியிலேயே போய்க் கொண்டிருந்தார்.

என்ன காரணமென்று நினைக்கிறீர்கள்? ஈ, எறும்பு, புழு போன்ற சிறிய உயிர்களெல்லாம் கடுமையான வெயில் தாங்காமல் நிழலில் ஒதுங்கியிருக்குமாம்.

"நாம் நிழலில் நடந்தால் அந்தப் புழு– பூச்சிகளின் மீது அடி வைக்கிறது போல ஆகிவிடுமே" என்று நினைத்தாராம்.

அதனால் வெயிலில் நடந்தாராம். எப்பேற்பட்ட கருணை.

சங்ககால தலைவன் ஒருத்தன் வெளியூர் போய்விட்டு திரும்பி வந்து கொண்டிருந்தான். தன் வீட்டிலிருக்கும் தலைவியை நினைத்துக் கொண்டே வந்து கொண்டிருந்தான். மணிகள் பூட்டிய தேரில் வருகிறான்.

வழியின் இரண்டு பக்கமும் பூஞ்செடிகள், ஏகப்பட்ட மலர்கள். அதில் ஆண் வண்டு– பெண் வண்டு எல்லாம் ஜோடியாக சேர்ந்து தேன் குடித்துக் கொண்டிருந்தன.

தலைவன் இதைப் பார்த்தான். தேரில் கட்டியிருக்கும் மணிகள், ஒலியெழுப்பிக் கொண்டே இருந்தன. இந்த சத்தத்தைக் கேட்டால் தேன் குடிக்கும் வண்டுகள் பயப்படுமாம். அது அந்த ஜோடி வண்டுகளுக்கு இடைஞ்சலாக இருக்குமே என்று நினைத்தான். உடனே தேரை நிறுத்தி அதிலிருக்கும் ஒவ்வொரு மணியினதும் நாக்கை அசையாத படிக்கு சின்னச் சின்னக் கயிறுகளால் கட்டி விட்டான்.

இனிமேல் சத்தம் கேட்காது. வண்டுக்கும் தொந்தரவில்லை. அதன் பின் தேரிலேறி தன் தலைவியைப் பார்ப்பதற்குப் போனானாம்.

எப்படிப்பட்ட கருணை பார்த்தீர்களா?

அதனால் கருணை என்பது மற்ற மனிதர்களிடம் காட்டுவது மட்டுமல்ல ; மற்ற உயிர்களிடமும் காட்ட வேண்டும்.

சங்ககாலத் தலைவனின் கதையை இந்த காலக் குடும்பத் தலைவர் ஒருவரிடம் சொன்னேன். அவர் சொன்னார்:

"அந்த ஆள் தேர்மணியிலிருக்கும் நாக்கையெல்லாம் சத்தம் கேட்கக் கூடாது என்பதற்காக கயிற்றால் கட்டி விட்டான்.

எனக்கு அந்தளவுக்கு அவசியமில்லை. ஒரே ஒருநாக்கை கட்டி விட்டால் போதும்! சத்தமிருக்காது" என்றார்.

"யாருடைய நாக்கை சொல்கிறீர்கள்?" என்றேன்.

"வம்பு வேண்டாம் சேர். வாழ்ந்தது வாழ்ந்து விட்டேன். சொச்ச காலத்தையும் இப்படியே ஓட்டி விடுகிறேன்" என்று சொல்லிவிட்டு ஓடிவிட்டார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# ஓலைச்சுவடிகளை பேணுதலும் பாதுகாத்தலும் பயிற்சிப் பட்டறை

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் மரபுரிமைச் சொத்துக்களில் ஒன்றானதும், இன்று அழிவடைந்து வருவதுமான ஓலைச் சுவடிகளைப் பேணிப் பாதுகாத்தலை அடிப்படையாகக் கொண்ட பயிற்சிப் பட்டறை ஒன்று நாளை சனிக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 4 மணிவரை யாழ். பல்கலைக்கழக கலைப்பீட புதிய மண்டபத்தில் நடத்தப்படவுள்ளது.

இந்நிகழ்வில்காலை8.30மணிக்கு ஓலைச் சுவடிகளைப் பேணுதலும் பாதுகாத்தலும் என்னும் தலைப்பில் யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் நா.சண்முகலிங்கன் தலைமையில் அங்குரார்ப்பண நிகழ்வு இடம்பெறவுள்ளது.

தொடர்ந்து காலை 10 மணிக்கு தமிழ் பண்பாட்டுச் சூழலில் ஓலைச் சுவடிகளின்முக்கியத்துவம் என்னும் விடயம் பற்றி யாழ். பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ். சிவலிங்கராசா, வரலாற்றைப் புரிந்து கொள் வதிலும் எழுதுவதிலும் ஓலைச் சுவடிகள் என்னும் விடயம் பற்றி யாழ்.பல்கலைக்கழக வரலாற்றுத் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் பேராசிரியர் செ.கிருஷ்ணராசா ஆகியோர் உரை நிகழ்த்திவுள்ளனர். தொடர்ந்து மூலச்சுவடிகளைப் பேணுதலுக்கும் பாதுகாத்தலுக்குமான அடிப்படைத் தந்திரோபாயங்கள் என்னும் விடயம் பற்றி யாழ்.பல்கலைக்கழக அரும் பொருளக எழுத்தாளர் ஜெ.ஜெயதிஸ் உரை நிகழ்த்தவுள்ளார்.

மேலும் இப்பயிற்சிப்பட்டறையை இந்திய செம்மொழி ஆராய்ச்சி மத்திய நிறுவனத்தைச் சேர்ந்த கலாநிதி ஜெ.அரங்கராஜன் வழி நடத்தவுள்ளதுடன் பிற்பகல் ஒரு மணி முதல் 4 மணி வரை செய்முறைப் பயிற்சியை வழங்கவுள்ளார்.

எனவே இப்பயிற்சிப் பட்டறையில் நூலகத்துறை சார்ந்தோர், ஓலைச் சுவடிகளைப் பேணிவரும் ஏனைய நிறுவனத்தார் மற்றும் தனிநபர்கள் பங்கேற்பதன் மூலம் எஞ்சியுள்ள ஏட்டுச் சுவடிகளை சரியான முறையில் மேலும் பல காலம் பேணிப்பாதுகாப்பதற்கான அடிப்படைப் பயிற்சியினைப் பெற முடியும் என யாழ்.பல்கலைக்கழக நுண்கலைத்துறை தலைவர் கலாநிதி அ.நோ.கிருஷ்ணவேணி அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# இராசி பலன்

*17.09.2010*
*(புரட்டாதி 01, வெள்ளிக்கிழமை)*
*தசமி முழுவதும்*
*பூராடம் முன்னிரவு 10.41 மணிவரை*
*இராகுகாலம் 10.33-12.03 மணிவரை*
*சுபநேரம் 6.03-7.33 மணிவரை*

**மேடம்** நேற்றைய பிரச்சினையொன்று இன்று நல்ல முடிவுக்கு வரும், ஆரோக்கியத்தில் ஏற்பட்ட அச்சுறுத்தல்கள் அகலும், வருமானம் திருப்தி தரும், ஆலய தரிசனம் உண்டு.

**இடபம்** கடவுளை வழிபட்டு காரியங்களைத் தொடக்க வேண்டிய் நாள், வரவு வருவதற்கு முன்னே செலவுகள் காத்திருக்கும், சிரித்து பேசும் நண்பர்களால் சிக்கல்கள் ஏற்படலாம்.

**மிதுனம்** கல்யாணக் கனவுகள் நனவாகும் நாள், நண்பர்கள் நம்பிக்கைக்குரிய விதம் நடந்து கொள்வர், வாழ்க்கைத் துணை வழியே வரவு வந்து சேரும் நாள்.

**கடகம்** ஆரோக்கியம் சீராகி ஆனந்தப்படும் நாள், உறவினர்களின் வருகையால் உற்சாகப்படும் நாள், வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், பண வருவாய் உண்டு.

**சிங்கம்** சிறப்பான நாள், பிள்ளைகள் வழியில் சந்தோசமான செய்திகளைக் கேட்கலாம், பூர்வீகச் சொத்து விற்பனையால் இலாபம் கிட்டும், பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமையடைவீர்கள்.

**கன்னி** சொன்ன சொல்லைக் காப்பாற்ற கொள்கைப்பிடிப்புடன் செயறபடுவீர்கள், தாய் வழியில் தனலாபம் உண்டு, சுப நிகழ்வுகளில் கலந்து கொண்டு புதிய நண்பர்களைச் சந்திக்கும் வாய்ப்பு உண்டு.

**துலாம்** புத்திசாதுரியமான செயற்பாடுகளால் புகழ் கூடும் நாள், நீண்ட நாளைய ஆசையொன்று நிறைவேறும் வாய்ப்புண்டு, உடன் பிறப்புக்கள் வழியில் உற்சாகமான தகவல் வந்து சேரும்.

**விருச்சிகம்** பல வழிகளில் பணம் வந்து சேரலாம், மிக பலமாக இருப்பவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கும் நாள், குடும்பத் தேவைகள் பூர்த்தியாகும், தெய்வ தரிசனமுண்டு.

**தனுசு** அம்பிகை வழிபாட்டால் இன்பம் காண வேண்டிய நாள், சவால்களை சாமர்த்தியமாக சமாளிப்பீர்கள், எதிர்பார்த்த காரியமொன்று நடைபெறாவிட்டாலும், எதிர்பாராத காரியமொன்று நடைபெறலாம்.

**மகரம்** சுப விரயம் அதிகரிக்கும் நாள், உறவினர் வீட்டு சுப நிகழ்வுக்காக கொடுத்துதவும் நிலை அமையும், இறை வழிபாட்டுச் சிந்தனை உருவாகும், பயணம் கைகூடும்.

**கும்பம்** செவி குளிரும் செய்தி வந்து சேரும் நாள், ஆடம்பரப் பொருட்கள் வாங்கும் எண்ணம் கைகூடும், அந்நிய தேசத் தொடர்பு எண்ணிய படியே கைகூடும்.

**மீனம்** உற்சாகமாகப் பணிபுரிவீர்கள், புதிய முயற்சிகள் கைகூடும், தொழில் முன்னேற்றம் கருதி முக்கிய முடிவுகளை எடுப்பீர்கள், நண்பர்கள் ஒத்துழைப்பு வழங்குவர்.

வளவன்

# ஆசிரிய பயிற்சி பெற்ற 3000 ஆசிரியர்களுக்கு நியமனம்

ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் பயிற்சிகளை முடித்துக் கொண்ட 3000 பேரை ஆசிரிய சேவையில் இணைத்துக் கொள்வதற்கு கல்வியமைச்சு நடவடிக்கை எடுத் துள்ளது. நாடு முழுவதிலும் வெற்றிடங்கள் நிலவுகின்ற பாடசாலைகளில் இவர்கள் நியமிக்கப் படவுள்ளனர்.

பாடசாலைகளில் நிலவுகின்ற வெற்றிடங்கள் தொடர்பில் தமக்கு அறியத்தருமாறு மாகாண அலுவலகங்களுக்கு அறிவிக்கப் பட்டுள்ளதாக அமைச்சின் செயலாளர் தெரிவித்துள்ளார். கணிதம், சிங்களம், விஞ்ஞானம், ஆங்கிலம் மற்றும் சங்கீதம் ஆகிய பாடங்களுக்கான வெற்றிடங்களுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

# மாபெரும் குறுந்திரைப்படப்போட்டி

ஏ.ஏ.ஏ மூவிஸ் இன்ரநஷனல் நிறுவனத்தினால் ஏ.ஏ.ஏ-2010 விருதுக்கான மாபெரும் குறுந்திரைப் போட்டி நடத்தப்படவுள்ளது.

இப்போட்டிகள் பாடசாலை மட்டப் பிரிவு,திறந்த பிரிவு என இரு பிரிவுகளாக தமிழ், சிங்களம், ஆங்கிலம் என மூன்று மொழிகளிலும் தனித்தனிப்போட்டியாக நடை பெறவுள்ளது.

அத்துடன் குறுந்திரைப்படம் மக்களின் வாழ்வியல் சமூகப் பிரச்சினை மையமாகக் கொண்ட தாக அமைதல் வேண்டும்.

மேலும் போட்டிக்கான குறுந்திரைப்படங்களை DVD அமைப்பில் மூன்று பிரதிகளும் திரைக்கதையின் மூன்று பிரதிகளும் இணைத்து அனுப்பி வைக்கப்படவேண்டும்.

இதில் விருதுக்கு தெரிவு செய்யப்படும் குறுந்திரைப்படங்களுக்கும் கலைஞர்களுக்குமான விருது வழங்கும் விழா டிசம்பர் மாதம் நடுப்பகுதயில் நடைபெறவுள்ள துடன் படைப்புக்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் நேரடியாகவோ அல்லது தபால் மூலமாக ஏ.ஏ.ஏ.மூவிஸ் இன்ரநஷனல் இல 92 ,பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பி வைக்கலாம் எனக் குறிப் பிடப்படுகிறது. (ஸ்ரீ-4)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | யாழ்ப்பாணம் | மருதனார்மடம் | சாவகச்சேரி |
|---|---|---|---|
| 1 Kg | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | -- | 100 | 90 |
| உருளைக்கிழங்கு | 70 | 90 | 70 |
| பச்சைமிளகாய் | 80 | 90 | 90 |
| தக்காளி | 90 | 80 | 100 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 40 | 50 |
| கோவா | 70 | 70 | 70 |
| கரட் | 100 | 40 | 40 |
| பூசணி | 40 | 40 | 40 |
| புடோல் | 50 | 25 | 30 |
| வாழைக்காய் | 70 | 40 | 60 |
| சின்ன வெங்காயம் | 70 | 60 | 60 |
| பெரிய வெங்காயம் | 70 | 60 | 80 |
| பாகற்காய் | 90 | 50 | 90 |
| வெண்டிக்காய் | 50 | 30 | 40 |
| கருணைக் கிழங்கு | 70 | 50 | 80 |
| பயற்றங்காய் | 70 | 40 | 70 |
| லீக்ஸ் | 130 | 120 | 100 |
| பீற்றூட் | 50 | 30 | 40 |
| கறிமிளகாய் | 80 | 40 | 80 |
| முருங்கைக்காய் | 120 | 80 | 90 |
| போஞ்சி | 120 | -- | 120 |
| கத்தரிதம்புள்ள | 80 | 50 | 60 |
| கீரை - 1 பிடி | 25 | 15-20 | 20 |
| தேசிக்காய் | 70 | 80 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 30 | 35-40 | 30 |






தென்மராட்சி கிழக்கு லயன் கழகத்தினால் "இயற்கை மூலிகையை நாடெங்கும் பரப்புவோம்" எனும் செயற்திட்ட நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் லயன் 306B1 இன் ஆளுநர் லயன் எஸ்.ஜெலவச்சலன் மங்கல விளக்கேற்றி நிகழ்வை ஆரம்பித்து வைப்பதையும் அருகில் அவரது பாரியார் லயன் சயந்தினி, கழகத் தலைவர் லயன் எஸ்.தேவகுமார், பிராந்தியத் தலைவர் மற்றும் கழக உறுப்பினர்கள் நிற்பதையும், லயன் டாக்டர் எஸ்.எஸ். அருளாநந்தம் சலரோகத்தைக் கட்டுப்படுத்தும் கட்டுப்படுத்தும் "குறிஞ்சா" செடியை பயனாளி ஒருவருக்கு வழங்கி மேற்படி திட்டத்தை தொடக்கி வைப்பதையும் படங்களில் காணலாம்.

## நாயன்மார் நால்வர் பவனி

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் மாதம் ஒரு கோயில் மாதம் ஒரு திருமுறை முற்றோதல் என யாழ்.குடாநாட்டு ஆலயங்கள் தோறும் நாயன்மார் நால்வரையும் திருமுறைச் சுவடிகளையும் வீதி உலாவாக எழுந்தருளச் செய்து பன்னிரு திருமுறை முழுவதும் முற்றோதி வருகின்றது.

இந்த வகையில் இன்று வெள்ளிக்கிழமை காலை 7 மணிக்கு நல்லை திரு ஞானசம்பந்தர் ஆதீனத்தில் பூசை வழிபாடு கள் நிறைவேற்றி வீதி உலாவாக நல்லூர்க் கந்தசாமி ஆலயத்தை வலம் வந்து பருத்தித்துறை வீதி ஊடாக நல்லூர் ஸ்ரீ சட்டநாத சுவாமி தேவஸ்தானத்தை அடைந்து ஆறாந் திருமுறை முற்றோதல் ஆரம்பித்து தொடர்ந்து காலைப் பூசையுடன் முற்றோதல் நடைபெறும். (ஸ்ரீ)

## நவக்கிரக ஹோமம் சனீஸ்வர வழிபாடு

யாழ். கச்சேரி நல்லூர் வீதியில் அமைந்துள்ள பாணன்குளம் நாச்சியம்மன் ஆலயத்தின் நவக்கிரக ஹோமம் சனீஸ்வர வழிபாடு புரட்டாதி மாத முதலாவது சனிக்கிழமையான நாளை காலை 8.30 மணிமுதல் இடம் பெறவுள்ளது.

இவ் வழிபாடுகள் இணுவில் காயத்திரி பீட குரு பிரம்மஸ்ரீ மகாதேவக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ளதாகவும் அடியார்கள் இதில் கலந்து நவக்கிரக சாந்தி பெற்றுய்யுமாறு தேவஸ்தான பிரதமகுரு யோகேஸ் வர சர்மா அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

## சனீஸ்வர தோஷ சாந்திஹோம பூஜைகள்

இணுவில் மருதனார்மடம் ஸ்ரீசுந்தர ஆஞ்சநேயர் ஆலயத்தின் சனீஸ்வர தோஷ சாந்தி ஹோம பூஜைகள் நாளை சனிக்கிழமை ஆரம்பமாகி புரட்டாதி மாதத்தில் வரும் ஒவ்வொரு சனிக்கிழமையும் நடைபெறவுள்ளது.

இதில் குறித்த நாளில் காலை 6 மணிக்கு பூசையும் தொடர்ந்து சங்கற்பம்,சனீஸ்வர ஹோமம்,பூசை அர்ச்சனை என்பன இடம் பெற்று மாலை 3.30 மணிக்கு அபிஷேகமும்,4.30 மணிக்கு சனீஸ்வர ஹோமமும் தொடர்ந்து பூசை,அர்ச்சனை என்பன இடம் பெறவுள்ளன. (ஸ்ரீ-4)

## புதிய யோகாசன தியான வகுப்புக்கள்

யாழ்.சிவானந்தா மகரிஷி யோக நிலையத்தினால் நடத்தப்பட்டு வரும் யோகாசன தியான வகுப்புக்களின் புதிய பிரிவுகள் நாளை சனிக்கிழமை காலை 6.30 மணிக்கு வேதாந்த மட தியான மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறவுள்ளது.

இப்பயிற்சி வகுப்புக்களில் வயது வேறுபாடின்றி அனைவரும் கலந்துகொள்ளலாம் எனவும் வெள்ளி,சனி, ஞாயிறு ஆகிய தினங்களில் குறித்த நேரத்தில் தொடர்ந்து நடைபெறும் எனவும் குறிப்பிடப்படுகிறது.

இணைய விரும்புவோர் அன்றைய தினமோ அல்லது அதற்கு முன்னரோ பதிவுகளை மேற்கொள்ளலாம் என நிலையப் பொருளாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

## கடையிற் சுவாமிகளின் குருபூசைத்தினம்

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீ வாலாம்பிகை சமேத வைத்திய நாதன் தேவஸ்தானத்தினால் அருட்குரு கடையிற் சுவாமிகளின் 119 ஆவது குரு பூசைத் தினம் எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெறவுள்ளது.

இதில் அன்றைய தினம் ஸ்ரீவாலாம்பிகா சமேத வைத்தீஸ்வரநாதருக்கும் கடையிற் சுவாமிகளுக்கும் விசேட அபிஷேகம், பூசைகள் இடம்பெற்று தொடர்ந்து கடையிற் சுவாமிகளின் சொற்பொழிவும் பிரார்த்தனையும் மகேஸ்வர பூசையும் இடம்பெறவுள்ளன. (ஸ்ரீ-4)




## மின்தடை பற்றிய அறிவித்தல்

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் மத்திய மின் நிலையத்தில் அவசர திருத்தவேலைகள் செய்யும் பொருட்டு நாளை சனிக்கிழமை முற்பகல் 8 மணி தொடக்கம் பிற்பகல் 2மணிவரை கரந்தன், நீர்வேலி,சிறுப்பிட்டி,கோப்பாய், இருபாலை, கல்வியங்காடு, நல்லூர், அரியாலை, தென்மராட்சிப் பிரதேசம், புன்னாலைக்கட்டுவன், அச்செழு, புத்தூர், ஆவரங்கால், அச்சுவேலி, இடைக்காடு, வடமராட்சிப் பிரதேசம் முழுவதும் மின்சாரம் தடைப்படும் எனவும் அத்துடன் ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்ததற்கமைய உரும்பிராய், கோண்டாவில் மருத்துவ பீடப் பிரதேசம், திருநெல்வேலிப் பிரதேசம், பட்டணப்பகுதி நீங்கலாக யாழ். மாநகர சபைப் பகுதி ஆகிய இடங்களிலும் நாளை காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரை மின்தடைஅமுலில் இருக்கும் என இலங்கை மின்சார சபையின் யாழ். பிரதேச மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

## சென்.ஜோன் அம்புலன்ஸின் தொண்டர் பயிற்சிக்கு ஆட்சேர்ப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதனா வைத்தியசாலையில் சென்.ஜோன் அம்புலன்ஸ் தொண்டர்களாக சேவை புரிவதற்கு ஆண்,பெண் இருபாலாரும் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இதில் சேர விரும்புவோர் நாளை சனிக்கிழமை காலை 10 மணிக்கு யாழ். போதனா வைத்தியசாலையில் இயங்கும் சென். ஜோன் அம்புலன்ஸ் காரியாலயத்திற்கு சமுகமளிக்குமாறும் பாடசாலைக் கல்வி கற்கும் போது சென்.ஜோன் அம்புலன்ஸ் அங்கத்தவராக செயற்பட்டோருக்கு முன்னுரிமை அளிக்கப்படும் எனவும் அத்துடன் ஊக்குவிப்புக் கொடுப்பனவும் வழங்கப்படும் என யாழ். சென். ஜோன் அம்புலன்ஸ் மாவட்ட ஆணையாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

## பனம்பொருள் உற்பத்தி நிலையமும் ஆலைகளும் திறந்து வைப்பு

நீர்வேலி மற்றும் சிறுப்பிட்டிப் பகுதிகளில் வலி. கிழக்குப் பகுதி ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தின் அரிசி அரைக்கும் ஆலைகளும் பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின் பனம் பொருள் உற்பத்தி நிலையமும் நேற்று முன்தினம் திறந்துவைக்கப்பட்டுள்ளன.

முன்னதாக பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கத்தின், பனம்பொருள் உற்பத்தி நிலையத்தை பாராளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவர் முருகேசு சந்திரகுமார் நாடாவை வெட்டித்திறந்து வைத்தார்.

பெயர்ப் பலகைக்கான திரைச்சீலையினை பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா அவர்கள் திறந்து வைத்ததுடன் ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி, மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி விஜயலட்சுமி உள்ளிட்டோர் பனம்பொருள் உற்பத்திகளைப் பார்வையிட்டனர்.

இதனை அடுத்து நீர்வேலியில் அமையப் பெற்றுள்ள வலி.கிழக்கு தென்பகுதி ப.நோ. கூட்டுறவுச் சங்கத்தின் கட்டடத்தில் புதிதாக அமைக்கப்பெற்ற புதிய அரிசி ஆலை நேற்று திறந்து வைக்கப்பட்டுள்ளது.

ஆலையை ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி திறந்து வைத்ததுடன் பெயர்ப்பலகையையும் திரைநீக்கம் செய்து வைத்தார்.


தொடர்ந்து அரைக்கும் ஆலை இயந்திரத்தை அமைச்சர், ஆளுநர் உள்ளிட்ட விருந்தினர்கள் அரிசியைப் போட்டு அதன் பணிகளை தொடக்கி வைத்தனர்.


இதேபோன்று சிறுப்பிட்டியில் அமையப் பெற்றுள்ள வலி.கிழக்கு ப.நோ.கூட்டுறவுச் சங்க கட்டடத்தில் புதிதாக அமையப்பெற்றுள்ள அரிசிஆலையும் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

அமைச்சர் டக்ளஸ் தேவாணந்தா நாடாவை வெட்டி அரிசி ஆலையை திறந்துவைத்ததுடன் பெயர்ப்பலகையினை ஆளுநர் திரை நீக்கம் செய்து வைத்தார். (ஸ்ரீ)

## படவரைஞரை பதிவு செய்தல்

வேலணைப் பிரதேச சபையின் எல்லைக் குட்பட்ட பகுதிகளில் கட்டட வரைபடங்களை வரைவதற்கு தகுதி வாய்ந்தவர்கள் தங்களை எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்னராக வேலணைப் பிரதேச சபையில் பதிவுசெய்து கொள்ளுமாறு வேலணைப் பிரதேச சபையின் செயலாளர் கெ.தவராசா கேட்டுக் கொள்கின்றார். (ஸ்ரீ)








யாழ்ப்பாண மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சொலமன் சூ.சிறில் பாராளுமன்றத்தில் ஆற்றிய உரைகளைத் தொகுத்து எழுதிய "நீதியின் குரல்" என்னும் நூலின் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது.இதில் நூலின் முதற் பிரதியை தொகுப்பாசிரியரும் கத்தோலிக்க கலை இலக்கிய வட்டத்தின் தலைவருமான துரை ஆரோக்கியதாசன் யாழ்ப்பாண மறை மாவட்டத்தின் ஆயர் மேதகு கலாநிதி இ.தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகைக்கு வழங்குவதையும் இரண்டாவது பிரதியை இணைப்பாளர் அ.பீற்றர்யேசுதாசன்(கனடா), யாழ்ப்பாணம் மறைமாவட்ட குருமுதல்வர் அருட்கலாநிதி யஸ்ரின் பேனாட் ஞானப்பிரகாசம் அடிகளாருக்கு வழங்குவதையும் நிகழ்வில் கலந்துகொண்டு ஆசிர் வழங்கிய மலர்க்குழுவின் தலைவரும் நெய்தல் தளம் இயக்குநருமாகிய அருட்கலாநிதி அ.பி.சே.ஜெயசேகரம் அடிகளார், ஆயர் இல்ல நிதி முகாமையாளர் அருட்பணி அன்ரனிதாஸ் அடிகளார், மன்னார் மறை மாவட்டத்தின் "மன்னா" பத்திரிகையின் ஆசிரியர் அருட்பணி தமிழ்நேசன் அடிகளார் மற்றும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சொலமன் சூ.சிறில் ஆகியோர் நிற்பதையும் படங்களில் காணலாம்.

மலரும் யாழ்ப்பாண அபிவிருத்திக்குப் புதிய உத்வேகம்



கொமர்ஷல் லீசிங் நிறுவனத்தின் அதிசிறந்த நிதிச் சேவை இப்பொழுது யாழ்ப்பாணத்தில் உங்களுக்கு

உங்களுடைய அபிவிருத்திக்குக் கை கொடுக்க கொமர்ஷல் லீசிங் நிறுவனத்தின் புதிய கிளை இன்று சுபவேளையில் யாழ்ப்பாணத்தில் திறக்கப்படுகின்றது.
எமது புதிய நிலையத்திற்கு வாருங்கள் உங்களுடைய அபிவிருத்திக்காக அதி சிறந்த பல்வேறு நிதிச் சேவைகளையும் ஒரே கூரையின் கீழ் பெற்றுக் கொள்ளுங்கள்.

நீங்கள் பெறக் கூடிய சேவைகள்

குத்தகைச் சேவை (லீசிங்)
வாடகைக் கொள்வனவு (ஹயர் பேர்சஸ்)
வர்த்தக நிதி உதவிகள் (பெக்டரிங்)

CLC கொமர்ஷல் லீசிங்
இல. 105, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி.: 021 4922446 / 077 2663902
தொலைநகல் 021 4590823


## ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் வருமானத்தில் பாரியளவு வீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கையின் தேசிய தொலைக்காட்சி சேவையான ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் வருமானத்தில் பாரியளவு வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

நிர்வாகத்தில் காணப்படும் பல்வேறு முரண்பாடுகளினால் இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

2006ஆம் ஆண்டு 137 மில்லியனாகக் காணப்பட்ட வருமானம் 2009ஆம் ஆண்டில் 4.7. மில்லியன் ரூபாவாக வீழ்ச்சியடைந்துள்ளதெனத் தெரிவிக்கப்படுகிறது.


நிறுவனத்தின் தேறிய லாபம் பாரியளவு வீழ்ச்சியடைந்துள்ளதாக கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. 2005ஆம் ஆண்டின் பின்னர் செயற்பாட்டுச் செலவுகள் வெகுவாக உயர்வடைந்துள்ளதெனவும் நிதி முகாமைத்துவம் மற்றும் ஆளணி நிர்வாகம் போன்றவற்றில் காணப்படும் குறைபாடுகளே வருமான வீழ்ச்சிக்கான பிரதான காரணி எனவும் குறிப்பிடப்படுகிறது.

உரிய அனுமதியைப் பெற்றுக்கொள்ளாது கடந்த 4 வருடங்களில் 79 புதிய பதவிகள் உருவாக்கப்பட்டுள்ளதுடன் 39 பணியாளர்கள் புதிதாக இணைத்துக் கொள்ளப் பட்டுள்ளதாகவும் இலங்கை ரூபவாஹினிக் கூட்டுத்தாபனத்தின் மொத்த நிர்வாகச் செலவில் 69 வீதம் ஊழியர் சம்பளத்திற்காக ஒதுக்கப்படுவதாகவும் குறிப்பிடப்படுகிறது.

கடந்த சில வருடங்களாக சமர்ப்பிக்கப்பட்ட கணக்கு விபரங்கள் இலங்கை கணக்கீட்டு நியமனங்களுக்கு அமைவாக மேற்கொள்ளப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ)

## காசநோய்க்கு துரித பரிசோதனை

ஒருவரது உடலில் காசநோயை உண்டாக்கக்கூடிய பக்டீரியா இருப்பதை ஒரே மணி நேரத்தில் கண்டறியக் கூடிய புதிய விசேட பரிசோ தனை ஒன்றை தாம் உருவாக்கியுள்ளதாக ஐக்கிய ராஜ்ஜியத்தின் விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.



காசநோயை உண்டாக்கக் கூடிய அனைத்துலக வகை பக்டீரியாவையும் இந்தப் பரிசோதனை கண்டுபிடித்துவிடும் என்று இதனை உருவாக்கியுள்ள ஹெல்த் புரொட்கெஷன் ஏஜென்ஸி என்ற அமைப்பும் அதன் ஆராய்ச்சியாளர்களும் தெரிவிக்கின்றனர்.

காசநோயை உண்டாக்கக்கூடிய பக்டீரியாவானது மனிதர்களிலே குடிகொண்டிருக்கத்தான் செய்கிறது. என்றாலும் இந்த பக்டீரியாவை உடலில் பெற்றுள்ளவர்களிலே ஐந்து முதல் பத்து சதவீதம் வரையிலானோருக்குத்தான் இது நோயாக உருவெடுக்கிறது. ஆனாலும் ஒவ்வொரு ஆண்டும் உலகில் பத்து இலட்சத்துக்கு அதிகமானோரை இந்த நோய் பலிகொண்டு வருகிறது.

இது வரையில் ஒருவர் உடலில் அந்த பக்டீரியா இருப்பதை கண்டறிய எட்டு வார காலம் வரையில் அவகாசம் தேவைப்பட்டது. அந்த காலப் பகுதியில் நோய் ஒருவரிடம் இருந்து மற்றவருக்கு ஏன் மற்ற கண்டங்களுக்கே கூட பரவி விடுகின்ற ஆபத்துள்ளது. ஆனால் தற்போது பிரிட்டனில் கண்டு பிடிக்கப்பட்டுள்ள புதிய பரிசோதனையானது பக்டீரியாவை மிக வேகமாகக் கண்டறிந்துவிடுகின்றது. அனைத்து வகை காசநோய் பக்டீரியாவுக்கும் பொதுவான ஒரு மரபணு அடையாளத்தை இனம் காணுவதன் மூலம் இந்த பரிசோதனை செயல்படுகிறது.

பரிசோதனைக்கூடத்துக்கு சென்று கொஞ்ச நேரம் காத்திருந்து முடிவை தெரிந்து கொள்ளலாம் என்கிற அளவுக்கு இப் பரிசோதணையில் துரிதமாக முடிவு தெரிந்துவிடும் என்று ஹெல்த் புரொட்டெக்ஷன் ஏஜென்ஸியின் டாக்டர் கேத் அர்னால்ட் தெரிவித்துள்ளார்.

2008ஆம் ஆண்டில் மட்டும் உலகில் 13 இலட்சம் பேர் காசநோயால் உயிரிழந்துள்ளதாக ஐ.நா.மன்றத்தின் உலக சுகாதார கழகம் மதிப்பிட்டுள்ளது.

மேற்குலகத்திலும் காசநோய் வருவோரின் எண்ணிக்கை மீண்டும் அதிகரித்து வருவதாகத் தெரியும் நிலையில் இந்த புதிய பரிசோதனை முறைகள் வெளிவந்துள்ளன. (ஸ்ரீ)

## ஒன்றுகூடலும் பிரிவுபசார வைபவமும்

இலங்கை மின்சார சபையின் யாழ். நகர மின் பாவனையாளர் சேவை நிலைய நலன்புரிச்சங்கத்தின் ஒன்றுகூடலும் பிரிவுபசார வைபவமும் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை காலை 10.30 மணிக்கு யாழ். நகர மின் பாவனையாளர் சேவை நிலையத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண பிரதிப்பொது முகாமையாளர் ஆர்.முத்துரட்ணாணந்தம் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (ஸ்ரீ-4-31)


Mega கொம்ப்யூட்டர் புலமைப்பரிசில்



ஏசியன் மெகா - அமோக வரவேற்பு காரணமாக மீண்டும் ஓர் அரிய வாய்ப்பு

அனேக மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் இம்முறை உயர்தர பரீட்சை எழுதிய மாணவர்களின் விருப்பத்திற்கும் வேண்டுகோளிற்கும் இணங்க மெகா புலமைப்பரிசில் திட்டம் நீடிக்கப்பட்டுள்ளது என்பதை மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம். எதிர்வரும் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9.00 மணிமுதல் நடைபெறும் கொம்ப்யூட்டர் பாடநெறிகளைத் தெரிவுசெய்வதற்கான இலவச புலமைப்பரிசில் பரீட்சையில் பங்குபற்றி வெற்றிபெறுங்கள்.

சர்வதேச கற்கைநெறிகள் மற்றும் சான்றிதழ்களுக்கான ஓர் ஆரம்பம்.

பரீட்சைகள் எமது யாழ்.நகர், நெல்லியடி, சாவகச்சேரி கிளைகளில் நடைபெறும். செப்டெம்பர் 19 ஞாயிறு

CSC-ASIAN COMPUTER EDUCATION

Win 75% Schol.

2G, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். T.P : 021-222 5677
கொடிகாமம் வீதி, நெல்லியடி. T.P : 021-2262399
230, 1ம் மாடி, கண்டி வீதி, சாவகச்சேரி. T.P : 021-2270267

# விண்டோஸ்-7 தீர்வுகள் கைவசம்



விண்டோஸ் 7 ஏறத்தாழ அனைவரும் விரும்பிப் பயன்படுத்தும் ஓர் ஒப்பரேட்டிங் சிஸ்டமாக மாறி வருகிறது.கணனி திறன் இந்த சிஸ்டத்தினை ஏற்றுக் கொள்ள, அதிகமாக இருக்க வேண்டும் என்றாலும் நவீன வசதிகளை நாமும் அனுபவிப் போமே, ஏன் அவற்றை விலக்க வேண்டும் என பலரும் விண்டோஸ் 7 சிஸ்டத்திற்கு மாறி வருகின் றனர். விண்டோஸ் 7 சிஸ்டத் தில், பல சின்னஞ்சிறு வசதிகள் நேரடியாக அறிந்துகொள்ள முடியாத வகையில் தரப் பட்டுள்ளன. இவை நம்முடைய பல பிரச் சினைகளுக்கு தீர்வு தருவதாய் அமைந் துள்ளன. அவற்றில் சிலவற்றை இங்கு காணலாம்.

♦ **பிரச்சினைகளை பதிவு செய்:**
**(PSRProblems Step Recorder)**

நாம் கணனி பயன்படுத்துகையில் ஏதே னும் ஒரு பிரச்சினையை எதிர்கொள்கி றோம். அது எதனால் ஏற்படுகின்றது, அல் லது அந்த பிரச்சனை தான் என்ன என்று நம்மால் விளக்க இயலவில்லை. இதற் கான தீர்வு தான் (Problems Step Recorder) என்னும் வசதி. பிரச்சனைகள் ஏற்படுகிறது எனத் தெரிந்தால், அந்த அப்ளிகேஷன் புரோக்ராமினை இயக்கும் முன், ஸ்டார்ட் கிளிக் செய்து, PSR என டைப் செய்து என்டர் தட்டவும். அதன் பின்னர் Start Record என்பதில் கிளிக் செய்தி டவும்.

இதன்பின்னர், நீங்கள் கணனியில் என்ன செய்தாலும், செலக்ட் செய்தாலும், கிளிக் செய்தாலும், டைப் செய்தாலும் அவை அனைத்தும் பதியப்படும் ஒவ்வொரு திரை மாற்றத் தினையும் காட்சிகளாக எடுத்துப் பதிந்து கொள்ளும். இவை அனைத்தையும் சுருக்கி ஒரு MHTL பைலாக உங்களுக்கு மின்னஞ்சலில் அனுப்பி வைக்கும். இதனை திறந்து பார்த்து எங்கு பிரச்சினை ஏற்பட்டு எனத் தெரிந்துகொள்ளலாம். அல்லது பிரச் சினையைத் தீர்க்க வரும் கணனி டெக்னீ ஷியனிடம் காட்டி தெரிந்துகொள்ளலாம்.

♦ **'சிடி' யில் இமேஜ்**

மற்ற ஒப்பரேட்டிங் சிஸ்டங்களில் பல ஆண்டுகளாக இருந்துவரும் ஒரு வசதியை, இம்முறை மைக்ரோசொப்ட் தன் விண்டோஸ் 7 சிஸ்டத்தில் தந்துள்ளது. அது சிடி மற்றும் டிவிடிக்களில் I.S.O இமேஜ்களை பதிவது தான். கணனியில் உள்ள ஐ.எஸ்.ஓ.இமேஜ் மீது டபுள் கிளிச் செய்து, காலியாக உள்ள சிடி வைத்திருக்கும் ட்ரைவரைத் தேர்ந் தெடுத்து, Burn என்பதில் கிளிக் செய்தால், டிஸ்க்கில் இமேஜ் எழுதப்படும.

♦ **பிரச்சினைகளைத் தீர்க்க**

விண்டோஸ் 7 சிஸ்டத்தில் ஏதேனும் ஒரு பிரிவில் பிரச்சினை ஏற்பட்டால், ஏடா கூடமாக அது செயல்பட்டால், அதன் காரணம் உங் களுக்குத் தெரியவில்லை என்றால், Control Panel>Find fix problems(or Trou bleshooting'எனச் சென்று பிரச்சினைக ளைக் கண்டறியும் பல சிறிய தொகுப்புக் களைக் காணலாம். இவற்றைக் கிளிக் செய்து பிரச்சினைகளைக் கண்டறிந்து, நீங்கள் அமைத்த செட்டிங்ஸ் சரி செய்து, சிஸ்டத்தை கிளீன் செய்தால், சிஸ்டத்தின் பிரச்சினைக் குரிய செயல்பாடு தானாகவே சரிசெய்ப் படும்.

♦ **ஆபத்துக்கால "சிடி"**

நீங்கள் விண்டோஸ் 7சிஸ்டத்தினை மைக்ரோசொப்ட் தளத்திலிருந்து டவுண் லோட் செய்து இன்ஸ்டோல் செய்திருந் தால், சிஸ்டத்தில் பிரச்சினை ஏற்பட்டு இயங்கா நிலை ஏற்படும் காலங்களில் பயன்படுத்த, சிஸ்டம் பூட் செய்திட சிடி ஒன்றை மிக எளிதாக உருவாக்கி வைத்துக்கொள்ளலாம். Click Start>Maintenance>Create a System Repair Disc எனச் சென்று, ஆபத்துக் காலத்தில் கணனிபூட் செய்திட சிடி ஒன்றைத் தயார் செய்து வைத்துக் கொள்ளலாம்.

♦ **கணனியைச் சிறுவர்களிடமிருந்து காப்பாற்ற**

நீங்கள் இல்லாதபோது, சிறுவர்கள், சில வேளைகளில் பெரியவர்களும்கூ,பல புரோ கிராம்களை இன்ஸ்டோல் செய்து, பிரச்சி னையை உருவாக்குகின்றனரா? அல்லது இயக்கிப் பார்க்கக்கூடாத அப்ளிகேஷன் புரோ கிராம்களை இயக்குகிறார்களா? இவை உங்கள் நிறுவனம் நீங்கள் பயன்படுத்தத் தந்த நிறுவனத்தின் நிர்வாகத்திற்கான புரோ கிரமாக இருக்கலாம். இவற்றைத் தடுக்க, AppLocker என்ற ஒரு புரோகிராம் வசதி, விண்டோஸ் 7 சிஸ்டம் கொண்டுள்ளது. GPEDIT.MSC என்ற புரோகிராமினை இயக்கி, Computer Configuration> Windows Settings>Security Setting> Application Control Policies>AppLocker எனச் சென்று எப்படியெல்லாம், அப்ளிகேஷன் களை இயக்குவதை நிங்கள்தடுக்கலாம் மற்றும் அனுமதிக்கலாம் என்று பாருங்கள்.

♦ **கூடுதலாகக் கணக்கிடும் வசதி**

விண்டோஸ் 7 தரும் கல்குலேட்டர் பார்ப் பதற்கு, விஸ்டாவில் இருந்த கல்குலேட்டர் போல இருந்ததாலும், இதன் Mode என்ப தைக் கிளிக் செய்து பார்த்தால், இந்த கல் குலேட்டர் தரும் கூடுதல் வசதிகளை அறிந்து கொண்டு பயன்படுத்தலாம்.

♦ **மேம்படுத்தப்பட்ட சிஸ்டம் ரெஸ்டோர்**

முந்தைய நாள் ஒன்றில் இருந்த நிலை க்கு, நம் கணியைக் கொண்டு செல்லும் வசதிதான் சிஸ்டம் ரெஸ்டோர்.

இதனால், ஏதேனும் வைரஸ் தாக்குதல் கள், அப்ளிகேஷன் சொப்ட்வெயர் இயக்கப் பிரச்சினைகள் இருந்தால், அவை எதுவும் இல்லாத நாள் ஒன்றுக்கு உங்கள் கணனி யைக் கொண்டுசென்று இயக்கலாம். ஆனால் எந்த அப்ளிகேஷன் மற்றும் ட்ரைவர் பைல் கள் இதனால் பாதிக்கப்படும் என நமக்குக் காட்ப்பபமாட்டாது. இது விண் டோஸ் 7 சிஸ் டத்தில் மேம்படுத்தப்பட்டு நவீனப்படுத்தப் பட்டுள்ளது.

மை கொம்பியூட்டரில் ரைட் கிளிக்செய்து, பின்னர் Properties>System Protection> System Restore> Next எனச் சென்று நீங்கள் செல்லவிருக்கும் ரெஸ்டோர் பொய்ண்ட், அதாவது எந்தநாளில் இருந்த நிலைக்குச் செல்ல ரெஸ்ரோர் பாய்ண்ட் ஏற்படுத்தினீர்களோ, அந்த நிலையில் கிளிக் செய்திடலாம். பின்னர், புதியதாகத் தரப்பட்டி ருக்கும் 'Scan for affected programs ' என்பதில் கிளிக் செய்தால், விண்டோஸ் எந்த புரோகிராம்கள் மற்றும் ட்ரைவர்கள் அழிக் கப்படும் அல்லது சரிசெய்யப்படும் என்று பட்டியலிட்டுக் காட்டும்.

♦ **எக்ஸ்பி வகை இயக்கம்**

பல இலட்சக்கணக்கானவர்களால், பல ஆண்டுகள் மிகப் பிரியமுடன் இயக்கப்பட்டு வந்த சிஸ்டம் விண்டோஸ் எக்ஸ்பி. ஏன், இன் னமும் கூட அதுதான் பெரும்பாலான மக்க ளால் பின்பற்றப்படுகிறது. இதற்குக் காரணம் பல அப்ளிகேஷன் சொப்ட்வெயர் தொகுப் புகள், இதில் மட்டுமே இயங்கும்படி அமைக் கப்பட்டிருப்பது தான்.

அப்படியானால், விண்டோஸ் 7 இயக் கத்திற்கு மாறிவிட்டால் என்ன செய்வது? என்ற கேள்வி பலருக்கு எழும்.இதற்காகவே விண்டோஸ் 7 இயக்கத்தில், எக்ஸ்பி வகை இயக்கத்திற்கு மாற்றிக் கொள்ள ஒரு வசதி தரப் பட்டுள்ளது.மைக்ரோசொப்ட் தளத்திலி ருந்து (http:// www. microsoft. com/windows/virtualpc/domnload.aspx)எக்ஸ்பி மோட் என்பதன் நகல் ஒன்றை டவுண்லோட் செய்து பதிந்து வைத்துக் கொண்டு தேவைப் படும் போது இயக்கிப் பயன்படுத்தலாம்.

♦ **சகலமும் ரைட்கிளிக்**

இந்த வசதி விண்டோஸ் 7 சிஸ்டத்தின் முற்றிலும் புதுமையான முறையாகும். டெக்ஸ்டொப்பில் காலியாக உள்ள இடத்தில் ரைட் கிளிக் செய்திடுங்கள். உங் கள் ஸ்கிரீன் ரெசல்யூசனை செட் செய்திட இடம் கிடைக்கும்.முன்பு போல டிஸ்பிளே செட் டிங்ஸ் என்றெல்லாம் செல்ல வேண்டி யதில்லை.அதேபோல டாஸ்க்பாரிஸ் உள்ள எக்ஸ்புளோரர் ஐகன் மீது ரைட் கிளிக் செய் தால்Documents, Pictures, the windows Folder போன்ற பல சிஸ்டம் போல்டர்களுக்கு நேரடியாகச் செல்லலாம்.

உங்களுக்கு இன்டர்நெட் எக்ஸ்புளோரர் பயன்படுத்துவதில் நாட்டம் இல்லையா! அப்படியானால் அந்த ஐகனை டாஸ்க் பாரில் இருந்து நீக்கிவிடலாம். பயர்பொக்ஸ் அல்லது குரோம் இன்ஸ்டோல் செய்து பயன் படுத்தலாம்.

♦ **மாறும் வோல் பேப்பர்**

விண்டோஸ் 7 சிஸ்டத்தில் பல அழகான வோல் பேப்பர்கள் தரப்பட்டுள்ளன. எனவே எவற்றை விடுத்து எதனை நம் வோல் பேப் பராக அமைப்பது என்று நம்மால் முடிவு செய்திட முடியாது. இதற்காகவே அந்த வோல் பேப்பர்கள் அனைத்தையும் அல்லது நீங்கள் விரும்பும் சிலவற்றை மட்டும் ஒரு ஸ்லைட் ஷோவாக அமைக்கும் வசதி தரப் பட்டுள்ளது.

டெஸ்க்டோப்பில் காலியாக உள்ள இடத் தில் ரைட் கிளிக் செய்து Personalise >Desktop back ground என்பதைத் தேர்ந் தெடுக்கவும்.

பின் கொண்ட்ரோல் கீயை அழுத்திக் கொண்டு நீங்கள் விரும்பும் வோல் பேப் பருக்கான படங்களை மட்டும் தேர்ந்தெடுக் கவும். பின்னர் எவ்வளவு நேரத்திற்கு ஒரு முறை இந்த படங்கள் மாறிக் காட்சியாகத் தெரிய் வேண்டும் என்பதனை முடிவு செய்து அமைக்கவும்.

இது 10 விநாடிகள் முதல் ஒரு நாள் வரை இருக்கலாம். இவை வரிசையாக இல்லாமல் மாறி மாறி வர வேண்டும் எனில் Shuffle என்பதனைத் தேர்ந்தெடுக்கலாம். மேலே குறிப்பிட்டவை போல விண்டோஸ் 7 சின்னஞ்சிறு வசதிகள் இன்னும் பலவற் றைக் கொண்டுள்ளது. இவற்றை வரும் வாரங்களில் பார்ப்போம்.




# தகவல் துளிகள்

(சென்றவாரத் தொடர்ச்சி)

- கணனி கேம்ஸ்களில், மிக அதிகமாக விற்பனை செய்யப்பட்டது The Sims என்ற கேம்.
- உங்களையும் அறியாமல் உங்களிடம் உள்ள ஒரே நகல் உள்ள ஒரு கோப்பினைக் கணனியிலிருந்து அழித்துவிட்டால் உடனே ரெகுவா போன்ற கோப்பு மீட்டுத் தரும் அப்ளிகேஷன் புரோகிராமினைப் பயன்படுத்த வேண்டும். எனவே, இதனை உங்கள் கணனியில் பதிந்து வைப்பது நல்லது.
- ஒரு பிரிண்டரை வெகுநாள் சிக்கனமாகப் பயன்படுத்த வேண்டும் என நீங்கள் திட்ட மிட்டால் பிரிண்டரை வாங்கும் முன் ஒரு பக்கம் அதில் அச்சடிக்க எவ்வளவு செலவாகும் என்பதனையும் கணக்கிட்டுப் பார்க்கவும்.
- 'Hotswapping' என்பது கணனியுடன் ஒரு சாதனத்தை இணைத்துப் பயன்படுத்திய பின்னர் கணனியை ஷட் டவுண் செய்திடாமல் அல்லது ரீபூட் செய்திடாமல் இணைப்பை நீக்குவதனைக் குறிக்கும்.
- அப்ளிகேஷன் புரோகிராம் ஒன்றினைக் கணனியில் இன்ஸ்டோல் செய்த பின், சிஸ்டம் முடங்கினாலோ, மிக மெதுவாக இயங்கினாலோ, உடனே சிஸ்டம் ரெஸ்டோர் போய்ண்ட் மூலம் அந்த அப்ளிகேஷன் பதிந்த நாளுக்கு முன்னர் இருந்த நிலைக்குக் கணனியைக் கொண்டு வருவதுதான் சிறந்த வழியாகும்.
- ஒரு பிழைச் செய்தியைக் காட்டிய பின்னர் கணனி முடங்கிப் போனால் அதற்கான தொழில் நுட்ப வல்லுனரை அழைக்கும் முன் அந்த பிழை செய்தி என்ன என்று குறித்து வைத்துக் கொள்வது சிறந்த வழி முறையாகும்.முடியுமானால் அதனை செலக்ட் செய்து கொப்பி செய்து ஒரு டெக்ஸ்ட் பைலில் பேஸ்ட் செய்திடலாம். இயலாவிட்டால் அதனைப் பார்த்து எழுதிக் கொள்ளலாம். அதுவும் முடியாவிட்டால் அப்படியே அந்த பிழைச் செய்திக்கான திரையை ஒரு இமேஜாக சேவ் செய்து பின்னர் அதனைத் திறந்து அதில் இருப்பதைப் பார்த்து டெக்ஸ்ட் பைலாக சேவ் செய்து வைக்கலாம்.
- FAT16,FAT32, மற்றும் NTFS ஆகியவை வெவ்வேறு வகையான பைல் கட்டமைப்புகளாகும்.
- விண்டோஸ் என்.டி.(Windows NT) யில் உள்ள என்.டி.என்பது New Technology என்ற சொற்களைக் குறிக்கிறது.
- 1977 ஆம் ஆண்டு பில் கேட்ஸ் ஒரு முறை மிக வேகமாகக் காரை ஓட்டியதற்காக கைது செய்யப்பட்டார்.
- விண்டோஸ் எக்ஸ்பியின் திரைத் தோற்றத்தில் மாற்றப்படா நிலையில் மிகப் பெரிய பச்சைப் புல்வெளி மேடும் பின்னணியில் மலையும் உள்ளதல்லவா? இதனை விண்டோஸ் பிளிஸ் (Bliss) எனப் பெயரிட்டுள்ளது. இந்த அழகான காட்சியைப் போட்டோவாக எடுத்தவர் பெயர் சார்ள்ஸ் ஓ ரியர் ( Charles O Rear) கலிபோர்னியாவில் சொனாமா கவுண்ட்டி என்ற இடத்தில் இந்த போட்டோ எடுக்கப் பட்டது. இதனைப் பின்னர் மைக்ரோசொப்ட் பணம் கொடுத்து விலைக்கு வாங்கி தன் எக்ஸ்பி சிஸ்டத்தில் மாறா நிலையில் உள்ள டெஸ்க்டொப் இமேஜாகப் பயன்படுத்தியது.

# கவனத்திற்கு

**Taskbar : (டாஸ்க்பார்)**

விண்டோஸ் இயக்கத்தில் மொனிட்டர் திரையில் கீழாக இயங்கும் நீள்கட்டம். இதில் ஸ்டார்ட் மெனு, விரைவாக அப்ளி கேஷன் புரோகிராம்களை இயக்க ஐகன்கள் அடங்கிய தொகுப்பு, இயங்கிக் கொண்டிருக் கும். அப்ளிகேஷன் புரோகிராம்களின் பைல்களுக்கான கட்டங்கள்மற்றும் கடி காரம், பின்னணியில் இயங்கிக் கொண் டிருக்கும். புரோகிராம்களின் ஐகன்கள் ஆகியவை இருக்கும். இவற்றைத் தேவைப் படும் போது கிளிக் செய்து பெறலாம்.

**Registry : (ரெஜிஸ்டரி)**

விண்டோஸ் இயக்கத்துடன் இணைந்த ஒரு டேட்டா பேஸ் (தகவல் தளம்) . இதில் அனைத்து ஹார்ட்வெயர் மற்றும் சொப்ட் வெயர் குறித்த தகவல்கள் எழுதப்பட்டு பதியப் பட்டிருக்கும். இவற்றுடன் பயன்படுத்துபவ ருக்கான விருப்பங்கள், செயல்பாடுகளுக் கான நிலைகள் உருவாக்கப்பட்டு பதியப் படும். விண்டோஸ் இயக்கம் இந்தத் தகவல் தளத்திலிருந்து தகவல்களைப் பெற்று செயல் படுவதால் சற்று கவனமாகவே இதனைக் கையாள்வது நல்லது.

# அருமந்த உயிர்களைக் காவுகொள்ள விதி 'விபத்து' வடிவில் புறப்பட்டுவிட்டதா?

அண்மைக்காலமாக வாகன விபத்துக்கள் அதிகரித்துச் செல்கின்ற போக்கு ஆரோக்கியமற்றதும் துரதிர்ஷ்டவசமானதுமாகும். போர் ஓய்ந்துவிட்டதாகவும் அநியாய உயிர்ப்பலிகள் தவிர்க்கப்பட்டுவிட்டதாகவும் கூறப்படுகின்ற இவ்வேளையில், உயிர்களைக் காவுகொள்ளவோ அங்கவீனர்களாக்கவோ விதி வீதிவடிவில் புறப்பட்டு விட்டதோ என எண்ணத் தோன்றுகிறது.

வாகனவிபத்துக்களைத் தவிர்ப்பதற்கு நாம் என்ன செய்யலாம்? போக்குவரத்திலே சம்பந்தப்படுகின்ற அனைவரும் அவரவர் கடமைகளை ஒழுங்காகச் செய்தாலே போதும் மிகச் சுலபமாக இதனைத் தவிர்த்துவிடலாம். சட்டம்போட்டுத் தடுப்பதிலும் மக்களின் உணர்வு பூர்வமான பங்களிப்பே உறுதியான பலனைத்தரும்.

போக்குவரத்திலே, பாதசாரிகள், மக்கள் போக்குவரத்து வாகனங்கள் (தனியார், அரச), தனியார் வாகனங்கள், சரக்குப்போக்குவரத்து வாகனங்கள் போன்றனவும், இவ்வாகனங்களின் தகுதி அறிந்து அவற்றிற்கான அனுமதிப்பத்திரம் வழங்குவோரும் அவற்றைச் செலுத்துவோருக்கான அனுமதிப் பத்திரம் வழங்குவோரும் அவற்றைப் பரிசோதித்து உறுதிப்படுத்தும் போக்குவரத்துப் பொலிசாரும் வீதிகளை நல்ல நிலையில் பேணுவோரும் நேரடியாகவும் மறைமுகமாகவும் அடங்குவர்.

இது தவிர இளமைப் பருவத்திலேயே கல்லில் எழுத்துப் போல் வீதி ஒழுங்குகளைப் பற்றிய விழிப்புணர்வினை ஏற்படுத்த வேண்டிய பாரிய பொறுப்பு ஆசிரியர் களையும் பெற்றோர்களையும் சாரும். எல்லாவற்றிற்கும் மேலாக இதுபற்றிய விழிப் புணர்வை ஏற்படுத்துவதில் ஊடகங்களின் பங்களிப்பு அளப்பரியது.

ஒன்றிலும் பட்டுக்கொள்ளாமலும், பொறுப்புகளைத் தட்டிக்கழித்தும், நமக்கேன் வீண் வம்பு என்றவகையிலும் நம் தமிழினம் வாழப் பழகிவிட்டது. மூன்று தசாப்தகாலமாக நாம் பட்ட துன்பங்கள், துயரங்கள், நம்பிக்கை யீனங்கள் இவற்றிற்குக் காரணமோ அல்லது தமிழினத்தின் பரம்பரை அலகுகளில் மட் டுமே காணப்படும் அதிசிறப்பியல்போ தெரிய வில்லை. தொடர்ந்தும் இத்தகைய போக் கைக் கடைப்பிடிக்கத்தான் வேண்டுமா? வர லாறு எம்மை மன்னிக்குமா? தமிழ் மக்க ளாகிய நாம் வீதி விபத்தின் கொடுமை, அத னைத் தடுப்பதற்காக நாம் கடைப்பிடிக்க வேண் டிய வீதி ஒழுங்குகள் பற்றி ஓரளவாவது அறிந்திருந்தும், அதனைக் கடைப்பிடிப்பதற்கான மனப்பாங்கு மிகவும் குறைவு என்பதனை ஒப்புக்கொண்டே ஆக வேண்டும். நாம் வீதி ஒழுங்குகளைக் கடைப் பிடிப்பதன் மூலம் எம்மைப் பாதுகாப்பது மட்டுமல்லாது வீதியில் பயணிக்கும் மற்றவரின் உயிரிற்கோ உறுப்புகளுக்கோ தீங்கிழைக்காது தவிர்க்க முடியும். ஒருவர் வீதி விபத்திலே உயிரிழந்தாலோ அங்கவீனமுற்றாலோ அவரது குடும்பத்திற்கு அது ஈடுசெய்ய முடியாத இழப்பாகும். அவர் பற்றிய எத்தனை கற்பனைகளைக்கொண்டதாக அக்குடும்பம் இருந்திருக்கும். சிலரது இழப்பு நாட்டிற்கே பேரிழப்பாகும். ஆகவே, வீதி ஒழுங்குகளைக் கடைப்பிபிடித்தல் போக்குவரத்துப் பொலிஸாரிற்காக என்ற

## தடுக்கும் மன நிலை எங்களிடமே இருக்கிறது

மனப்பாங்கு முதலிலே மாறவேண்டும். தலைக்க வசம் அணிந்து செல்லல் பொலிஸாரிற்கு 500/= தண்டம் கட்டாமலிருப்பதற்காக அல்ல, "எம் இனிய உயிரைப் பாதுகாப்பதற்காக" என்ற உண்மை உணர்வு உண்டாக வேண்டும். தற்செயலாகப் பொலிஸாரின் கண்ணில் பட்டுவிட்டால் தண்டம் கட்டாமல் தப்பித்து ஓட நினைத்து உயிரைப் பறிகொடுக்கும் பரிதாப நிலை அதிகரித்துச் செல்கிறது. உயிரின் விலை வெறும் 500 - 1000/= தானா? இது அவசர உலகம் தான். ஆனால் 5 அல்லது 10 நிமிடம் முந்திச் செல்வதற்காக வேகமாகச் சென்று உயிரைப் பறிகொடுப்பதா? 5 நிமிடம் முந்திப் புறப்படுவதற்காக எம்மைத்திட்டமிட்டாலென்ன?

கைத்தொலைபேசியில் பேசிய வண்ணம் வாகனத்தைச் செலுத்துதல் அனேக துவிச்சக்கரவண்டிகளில் சமாந்தரமாகச் செல்லு தல் என்பவற்றைத் தவிர்த்திடலாம் தானே. இதனால் பலவிபத்துக்களைத் தவிர்க்கலாம்.

தூக்கக் கலக்கத்தில், மது போதையில் வாகனம் செலுத்துவதால் அனேக விபத்துகள் ஏற்படுகின்றன. வாகனம் கட்டுபபாடு இல்லாது ஓடும். தெறிவினைகள் மந்தமாகும். இதனால் ஓட்டுபவர் மட்டுமல்லாது ஏனையோரும் பாதிக்கப் படுகின்றனர்.

வீதிகளிலே வாகன நெரிசல் அளவுக்கதிகமாகிவிட்டது. யாழ்ப்பாண மக்களின் வாகனங்களின் எண்ணிக்கை பன்மடங்கு அதிகரித்தது மட்டுமல்லாது தென்பகுதிகளில் இருந்து வருபவர்களின் வாகனங்களும் சேர்ந்து வீதிகளை நிரப்பி நிற்கின்றன. தென்பகுதியிலிருந்து வரும் பெரிய வாகனம் வீதியில் திருப்புகின்றபோது சிறிது நேரம் காத்திருக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை அண்மைக்காலமாக காணப்படுகின்றது. வாகன எண்ணிக்கை அதிகரிக்கும் வேகத்திற்கேற்ப வீதிகளை அகலமாக்கலோ அல்லது மாற்று ஒழுங்குகளோ மந்தகதி யிலேயே நடைபெறுகின்றது என்பதை ஒப்புக் கொண்டே ஆகவேண்டும்.

எமக்கு முன்னாலே ஒரு வாகனம் சென்று கொண்டிருக்கும்; திடீரென அது திரும்பும். எந்தவித சைகைகளும் காட்டப்படுவதில்லை. அந்த வீதியில், தான் மட்டும்தான் பிரயாணிக்கிறார் என்று நினைக்கிறாரோ அல்லது பக்கக் கண்ணாடி அழகிற்காகவே பூட்டப்பட்டிருப்பதாக நினைக்கிறாரோ தெரியாது. பெரும்பாலும் வீதிகளிலே சாதாரணமாக நடக்கின்ற ஒருவிடயம்.

தனியார் சிற்றூர்திகள் செய்யும் சேவை பற்றிக் குறிப்பிட்டே ஆக வேண்டும் . அவர்கள் கடந்த கடினமான காலங்களில் ஆற்றிய சேவைகள் அளப்பரியன . இருந் தும் சில விடயங்களில் கவனம் செலுத்தி னால் சமூகம் அவர்களுக்கு மேலும் நன் றியுடையவர்களாக இருக்கும்.

குறிப்பாக தமது வாடிக்கையாளர்களை அவர்களின் வீட்டு வாசலிலே ஏற்றி வாசலிலே இறக்கி விடும் பணியை மாற்றிக் கொண்டால் நன்றாய் இருக்கும் முன்பு தான் பஸ் தரிப்பு நிலையம் கண்ணுக்குத் தெரிவதில்லை. இப்போது அப்படி இல்லை. எல்லோரும் ஒன்றிணைந்து சிறிது காலத்திற்கு முயன்றால் மக்கள் பழகி விடுவர்.

மேலும், குறிப்பிட்ட தூரத்திற்கு உருட்டிச் செல்லல் , பின் விட்ட நேரத்தை ஓடிப்பிடித்தல் அல்லது துரத்துப்படுதல் என்பதே முக்கியமான பிரச்சினை.இப்படி வேகமாகச் செல்லும் தனியார் சிற்றூர்திகளை பார்க்கின்ற போது யமதர்மராஜன் பாசக்கயிற்றுடன் வீதியுலா வருவது போன்ற காட்சி தெரிகிறது.

அடுத்த பிரச்சினை வீதி விபத்துடன் நேரடியாகச் சம்பந்தப்படாவிட்டாலும் நீண்ட கால நோக்கில் எமது சமூகத்தை கொல்லவல்ல வாகனப்புகை. சில வாகனங்கள் கரிப்புகையை கக்கிய வண்ணம் பயணிக்கின்றன. சூழல் மிகவும் மாசுபடுவதோடு நுரையீரல் புற்றுநோய் நிச்சயம் வந்தே தீரும். மனது வைத்தால் முடியாதது என்று ஒன்றுமே இல்லை. தனியார் சிற்றூர்திகள் சம்பந்தப்பட்டவர்களே, சம்பந்தப்பட்ட அதிகாரிகளே இதற்கு ஒரு தீர்வைக் காணுங்கள் ; பாவப்பட்ட தமிழ்ச்சமூகத்தின் பெயரால் கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும் வீதிகள் குன்றும் குழியுமாக காணப்படுவதுடன் பல்வேறு காரணங்களுக்காக வீதிகள் வெட்டுப்படுகின்றன. அவை மீண்டும் மூடப்படுவதை சிலரே உறுதி செய்கின்றனர். வீதி விபத்துக்கள் ஏற்படுவதற்கும் இவையும் ஒரு காரணம். சம்பந்தப்பட்டவர்

வைத்திய கலாநிதி
எஸ்.கண்ணதாசன்
சிரேஷ்ட விரிவுரையாளர்,
மருத்துவ பீடம்,
யாழ்.பல்கலைக்கழகம்.

கள் கவனித்தால் நல்லது.

பாதசாரிகளும் நினைத்த மாத்திரத்தில் கண்ட கண்ட இடங்களிலேயே வீதிகளை கடக்க முயல்கின்றனர். வலம் பார்த்து , பின் இடம்பார்த்து , மீண்டும் வலம் பார்த்து , வாகனம் வராததை உறுதி செய்த பின்பே வீதியை கடக்க வேண்டும் என்று படித்த ஞாபகம். கற்றாங்கு ஒழுகுவதே நாம் சமூகத்திற்கு செய்யும் கடமையாகும்.

முடிவாக இன்றிலிருந்து வீதி விபத்தினால் ஒரு உயிர் தன்னும் போகாது பாதுகாப்போம் என்று உணர்வு பூர்வமாக உறுதி பூணுவோம். ◆

## வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து மேலும் பல திட்டங்களுக்கு நிதி ஒதுக்கீடு

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அப்பாத்துரை விநாயகமூர்த்தி இவ்வருடத்திற்கான தனது வரவு செலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து மேலும் பல அபிவிருத்தி விடயங்களுக்காக நிதி ஒதுக்கீடு செய்துள்ளார்.

இதில் மட்டுவில் கமலாசினி வித்தியாலயத்திற்கு பல்லூடகத்தொகுதி மற்றும் உபகரணங்ள் வழங்குவதற்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் கரணவாய் சிந்தாமணி விநாயகர் பாடசாலைக்கு விளையாட்டு மற்றும் கல்வி உபகரணங்கள் வழங்குவதற்கு ஒரு இலட்சம் ரூபாவும், கோப்பாய் வடக்கு சன சமூக நிலையத்திற்கு கணனி மற்றும் புத்தகங்கள் வழங்குவதற்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

மேலும் சரசாலை வடக்கு சனசமூக நிலைய கட்டடம் கட்டுவதற்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், இணுவில் பொது நூலகத்திற்கு புத்தகம் வழங்குவதற்கு 2 இலட்சம் ரூபாவும், மட்டுவில் தெற்கு வளர்மதி விளையாட்டுக் கழகத்திற்கு மலசல கூடம் கட்டுவதற்கு 50 ஆயிரம் ரூபாவும், கைதடி நாவற்குழி வள்ளி அம்மன் கோவில் கட்ட திருத்த வேலைகளுக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும், கரவெட்டி சிந்தாமணி விநாயகர் அபிவிருத்தி சங்க கட்டட திருத்த வேலை மற்றும் தளபாடம் வழங்குவதற்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாவும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதாக செயலாளர் சோ. சந்திரசேகரம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)



செலிங்கோ இன்சூரன்ஸ் பி.எல்.சி.யாழ்.கிளையினால் இழப்பீட்டுக்கொடுப் பனவு வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் இக்கிளையில் ஒரு இலட்சம் ரூபா காப்புறுதி ஒப்பந்தத்தை பெற்றிருந்த வாடிக்கையாளரான பாலகிருஸ்ணன் சிவச்செல்வன் என்பவர் நீரில் மூழ்கி மரணமடைந் தமையினால் இவருக்கான இழப்பீட்டுத்தொகையாக நான்கு இலட்சத்து 9ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையை உதவி அபிவிருத்தி முகாமையாளர் பா.நந்திக்குமார் உறவினரிடம் கையளிப்பதையும் அருகில் விற்பனை நிறைவேற்று அதிகாரி க.சிவாகரன் மற்றும் விற்பனை ஆலோசகர் த.கஜதீபன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம்.

# புரட்டாதி மாத இராசி பலன்கள்

## மிதுனம்

(மிருகசீரிடம் 3, 4 ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ஆம் பாதங்கள்)

**மற்றவர்களை தன்வசம் ஈர்க்கும் ஆற்றலைக் கற்று வைத்திருக்கும் மிதுன ராசி நேயர்களே!**

சொல்லை செயலாக்கி காட்டுவதில் வல்லவர் நீங்கள். விலங்குகளையும் பழக்கி வைத்திருப்பீர்கள். வித்தியாசமான மனிதர்களையும் பழக்கி வைத்திருப்பீர்கள். ஸ்திரமான எண்ணங்கள் உங்களுக்கு இருக்குமா? என்பது சந்தேகம்தான். திடீர் திடீரென எண்ணங்களை மாற்றிக் கொள்வீர்கள். உங்களிடம் தொடர்பு வைத்திருப்பவர்கள், "உங்களிடம் நான் அப்படி சொன்னேனே, நீங்கள் இப்படிச் செய்து விட்டீர்களே?" என்று வாதிடுவர். சமயோசித புத்தி அதிகம் இருப்பதால் சாமர்த்தியமாகச் சொல்லி சமாளிப்பீர்கள்.

புரட்டாசி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, அர்த்தாஷ்டம சனியுடன் சூரியனும் இணைந்து அச்சுறுத்தல்களையே கொடுக்கிறது. என்றாலும், குருவின் பார்வை உங்களுக்குக் கொஞ்சம் நல்ல மாற்றத்தைக் கொடுக்கிறது. மலைபோல் வந்த துயர் பனிபோல் விலகும். மனக்கலக்கம் தந்த வழக்குகளில் திசை மாற்றம் ஏற்படும். மலைப்பாகத் தோன்றிய சில காரியங்களை எளிதில் முடித்து வெற்றி காண்பீர்கள்.

உங்கள் இராசியிலேயே கேது சஞ்சரிப்பதால் கொடுத்த வாக்கை ஒரு சில சமயங்களில் காப்பாற்ற இயலாமல் போகலாம். எனவே நாளைய பாதிப்புகள் உருவாகாமல் இருக்க நாவில் கவனம் செலுத்துவது நல்லது. பொதுவாகவே அஷ்டமத்துச் சனியின் தாக்கத்தில் பாதிப்பங்கு அர்த்தாஷ்டமச் சனிக்கு உண்டு.

எனவே, வரவைக்காட்டிலும் செலவு கூடும். வம்பு, வழக்குகள் வாயில் கதவைத் தட்டும். தெம்பு இருந்தாலும் திடீரென நோய்க்கான அறிகுறிகள் தோன்றும். பொன், பொருளை சேமித்து வைக்க இயலவில்லையே என்ற கவலை மேலோங்கும்.

எனவே, சனீஸ்வர வழிபாட்டில் முறையாகக் கவனம் செலுத்தினால் சந்தோஷங்களை தினமும் சந்திக்கலாம். காக வாகனத்தானை திருப்திபடுத்தகாகத்திற்கு சோறு இடுவது நல்லது. அதன் மூலம் உங்கள் தேக நலன் கூட சீராகலாம்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி ...**

எதிர்வரும் 26 ஆம் திகதி கன்னி இராசியில் புதன் சஞ்சரிக்கப் போகிறார். இதன் விளைவால் ஓரளவு நல்ல மாற்றங்கள் ஏற்படும். இராசி நாதன் உச்சம்பெறும் நேரத்தில் யோசிக்காது செய்த காரியங்களில் கூட வெற்றி கிடைக்கும். யோகங்களில் இருந்த தடைகளும் அகலும். வாகன மாற்றம் செய்ய முன்வருவீர்கள். வீட்டுபராமரிப்புச் செலவு கூடும். தொழில் வளம் முன்பு இருந்ததைக் காட்டிலும் முன்னேற்றம் தரும் விதத்தில் இலாபம் கிடைக்கும்.

**புத – சுக்ர யோகம்!**

எதிர்வரும் ஒக்டோபர் 13ஆம் திகதி துலாம் இராசியில் புதனும், சுக்ரனும் சேரப்போகிறார்கள். புத்திர ஸ்தானத்தில் 5, 12-க்கு அதிபதியான சுக்ரன் வலுப்பெற்று இராசிநாதனுடன் இணைவதால் பிள்ளைகள் வழியில் முன்னேற்றத்திற்காக எடுத்த முயற்சி வெற்றி பெறும்.

அவர்களின் கல்யாணக் கனவுகளை நனவாக்குவீர்கள். பூர்வீகச் சொத்துகளில் இருந்த தகராறுகள் அகலும். உத்யோகம் மற்றும் தொழிலில் எதிர்பார்த்த பதவி உயர்வுகள் வருவதற்கான அறிகுறிகள் தோன்றும். வாழ்க்கைத் தேவைகள் பூர்த்தியாகும் நேரமிது.

மாதத் தொடக்கத்தில் கேதுவின் சஞ்சாரம் வலுவடைகிறது. இதனால் அர்த்தாஷ்டமச் சனி பாதிப்புகள் தலைதூக்கும். எனவே, சனிக்கிழமை தோறும் விநாயகர் வழிபாடும், சந்திரனோடு இராகு இணைவதால் சர்ப்ப சாந்தியும், முறையாகச் செய்தால் இன்னல்களில் இருந்து தப்பித்துக் கொள்ள இயலும்.

**பெண்களுக்கான சிறப்புப் பலன்கள்**

இம்மாதம் நிதானமாக செயல்பட வேண்டிய மாதமாகும். பிறரை விமர்சிப்பதை தவிர்ப்பது நல்லது. மருத்துவச் செலவுகள் ஏற்படாமல் இருக்க ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்ட வேண்டும். மாதத்தின் மையப்பகுதியில் விலகிச்சென்ற ஒரு சிலர் விரும்பி வந்து சேருவர். குடும்ப உறுப்பினர்கள் குறைகளைக் கேட்டு நிவர்த்தி செய்யுங்கள். விட்டுக்கொடுத்துச் செல்வதன் மூலம் கணவன் – மனைவி உறவில் கனிவு கூடும். வியாழன் விரதம் விருப்பங்களை நிறைவேற்றும்.

## கடகம்

(புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம் )

**நினைவுத்திறனால் நினைத்ததை உடனடியாக செய்து காட்டும் கடக ராசி நேயர்களே!**

வசதி வாய்ப்போடும், வருங்கால தலைமுறைகளுக்கு வழிகாட்டியாகவும் வாழ வேண்டுமென்று விரும்புவீர்கள். வீட்டுப் பற்று மிக்கவர்களுக்கு மத்தியில் நாட்டுப் பற்றுமிக்கவர்களாக விளங்குவீர்கள். குடும்ப பொறுப்பினை பிறரிடம் ஒப்படைத்து விட்டு அலட்டிக் கொள்ளாமல் அடுத்தவர்களின் காரியங்களை முடித்துக் கொடுப்பவர்களும் நீங்கள் தான்.

புரட்டாதி மாத கிரக நிலைகளை ஆராய்ந்து பார்க்கும் பொழுது, வக்ர குருவின் பார்வை உங்கள் மீது பதிகிறது.எனவே, திடீர் இடமாற்றம், வீடுமாற்றங்கள், உத்தியோகமாற்றங்கள் உருவாகலாம். பொதுநலத்தில் ஈடுபட்டிருப்பவர்களுக்கு பொறுப்புகள் கூட மாறலாம். சந்திர பலம் குறைந்து சூரிய, சனி சேர்க்கை மூன்றாமிடத்தில் நிகழ்வதால், சகோதர வழியில் ஒற்றுமை குறையாமல் பார்த்துக் கொள்வது நல்லது.

விரயாதிபதி தன ஸ்தானத்தில் சஞ்சரிப்பதால் விரயத்திற்கேற்ற பொருளாதாரம் வந்து சேரும். கல்யாணம் முதல் கட்டிடம் கட்டும் பணி வரை காசு பணத்தை கையில் வைத்துக் கொண்டு வேலை பார்க்க முடியவில்லையே என்று கவலைப்பட வேண்டாம். காரியத்தை தொடங்கி விட்டால் ஏற்பாடு செய்த இடத்திலிருந்து பணம் தானாகவே வந்து சேரும். எல்லாவற்றிற்கும் நல்ல வழிபிறக்க குரு வழிபாடும், அம்பிகை வழிபாடும் உங்களுக்கு அவசியம் தேவை.

எனவே, வாரந்தோறும் வியாழக்கிழமை விரதமிருந்து, குருவுக்கு முல்லைப் பூ மாலை அணிவித்து, சுண்டல் நைவேத்தியம் செய்து, மஞ்சள் வண்ண வஸ்திரத்தை மங்களகரமாகச்சூட்டி, திசை மாறிய தென்முகக் கடவுளின் சந்நிதியில் "வானவர்க்கு அரசனான வளம் தரும் குருவே" என்று குரு கவசம் பாடி வழிபட்டு வாருங்கள். தேனான வாழ்க்கையும் உங்களுக்கு வந்து சேரும். திக்கெட்டும் உங்கள் புகழ் பரவ வழி பிறக்கும்.

**பொன்னான புதனின் பெயர்ச்சி!**

புதன் இம்மாதம் இரண்டு முறை பெயர்ச்சியாகிறார். முதலில் எதிர்வரும் 26ஆம் திகதி கன்னி இராசியில் சஞ்சரிக்கப்போகிறார். இதன் விளைவாக, விரயங்கள் கூடினாலும் சுப விரயங்களாகவே ஏற்படும். பயணங்கள் அதிகரிக்கும். விலகிச் சென்ற உறவினர்கள் விரும்பி வந்து சேருவர். குடும்பச் சுமை கூடும். கொடுக்கல் – வாங்கல்களில் கொஞ்சம், விழிப்புணர்ச்சி உங்களுக்கு தேவை. இல்லையென்றால் சில ஏமாற்றங்களை சந்திக்க நேரிடும்.

**புத – சுக்ர யோகம்!**

எதிர்வரும் ஒக்டோபர் 13ஆம் திகதி துலாம் இராசியில் புதனும், சுக்ரனும் சேரப்போகிறார்கள். 3, 12-க்கு அதிபதியும், 4, 11-க்கு அதிபதியும் இணைவது நன்மைதான். சகோதர வழியில் திடீரென ஒத்துழைப்பு கிடைக்கும். தொழிலில் திருப்பு முனை உருவாகும். அந்நியதேச பயணம் கூட எண்ணியபடியே நிறைவேறும். வீட்டிற்குத் தேவையான விலை உயர்ந்த பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பிரபலமானவர்கள் உங்களுக்கு பின்னணியாக இருந்து பலகாரியங்களை முடித்துக் கொடுப்பர்.

என்ன இருந்தாலும் சனி, சூரியனின் சேர்க்கை சகாய ஸ்தானத்தில் இருப்பதால் ஒரு சில காரியங்களை யோசித்துச் செய்ய வேண்டிய சூழ்நிலை உருவாகலாம். ஆபத்திலிருந்து காப்பாற்றும் ஆற்றல் ஆதி பராசக்திக்கு உண்டு என்பதால், துர்க்கை வழிபாட்டை தொடர்ந்து செய்தால் துயரங்களில் இருந்து விடுபடலாம்.

## சிவல்புரி சிங்காரம்

**பெண்களுக்கான சிறப்பு பலன்கள்**

மாத தொடக்கத்தில் குடும்பச் சுமை கூடும். உறவினர்களின் வருகையால் ஒருசில பிரச்சினைகள் உருவாகலாம். வெளியூர் பயணங்கள் அதிகரிக்கும். வீடு மாற்றத்தால் மகிழ்ச்சி காண்பீர்கள். உடன்பிறந்தவர்கள் மாதக் கடைசியில் ஒத்து வருவர். கணவன், மனைவிக்குள் கருத்து வேறுபாடுகள் ஏற்படாமல் இருக்க நாவில் கவனம் செலுத்துவது நல்லது.

(தொடரும்)

# வடக்கு, கிழக்கு மக்களை இலங்கை பிரஜைகளாக அரசாங்கம் இன்னும் ஏற்றுக்கொள்ளவில்லை

## ரில்வின் சில்வா தெரிவிப்பு

வடக்கு, கிழக்கு மக்களை இலங்கை பிரஜைகளாக இன்னும் அரசாங்கம் ஏற்றுக் கொள்ளவில்லை. எனவேதான் இம்மக்களை இராணுவ ஆதிக்கத்தில் பெரும் அச்ச சூழலுக்குள் அரசாங்கம் சிறைப்படுத்தி வைத்துள்ளது என்று ஜே.வி.பி.யின் பொதுச் செயலாளர் ரில்வின் சில்வா தெரிவித்தார்.

வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போலவே யுத்தத்தால் பாதிக்கப்பட்ட அப்பாவி தமிழ் மக்களுக்கான அரசாங்கத்தின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன. இந்த நிலை எதிர்காலத்தில் பாரிய பிரச்சினைகளையே தோற்றுவிக்கும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

அண்மையில் மேற்கொண்ட கிளிநொச்சிக்கான விஜயம் தொடர்பாக நேற்று முன்தினம் தெளிவு படுத்துகையிலேயே ரில்வின் சில்வா மேற்கண்டவாறு கூறினார். இது குறித்து அவர் மேலும் கூறியதாவது, இலங்கையில் யுத்தம் முடிவடைந்து சமாதான சூழல் பிறந்து ஓராண்டையும் கடந்து விட்டது. ஆனால் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் வாழும் மக்கள் இராணுவ ஆதிக்கத்திலேயே வாழ்கின்றனர். இப்பிரதேசங்களில் வாழும் மக்கள் பொதுவான வாழ்விற்கு திரும்ப முடியாத வாறு அரசாங்கத்தின் நடவடிக்கைகள் அமைந்துள்ளன.

கடந்தகால போரின் போது கட்டடங்களுக்கு, வீதிகளுக்கு ஏற்பட்ட சேதங்களையும் இழப்புக்களையும் வேண்டுமானால் மீளக் கட்டியெழுப்பலாம். ஆனால் உறவுகளையும் உடைமைகளையும் இழந்து அநாதைகளைப் போல் வாழும் வடக்கு, கிழக்கு மக்களின் இதயங்களையும் அவர்களது பொதுவான வாழ்வையும் கட்டியெழுப்புவது என்பது கடினமான விடயமாகும்.

இவ்வாறானதொரு சூழ்நிலையில் பொறுப்புள்ள அரசாங்கம் என்ற வகையில் தேவையான ஒழுங்குகளை செய்யாது மேலும் இம்மக்களை சுதந்திரமாக செயற்படவிடாது கட்டுப்பாட்டிற்குள் வைத்திருப்பது பாரிய பின்விளைவுகளை ஏற்படுத்துவதோடு மனிதாபிமானமற்ற செயலும் ஆகும்.

நாட்டின் அவசரமான தேவைகள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தாமல் அரசியலமைப்பு திருத்தங்களை மேற்கொண்டுள்ளது. தேசிய பிரச்சினைக்கு திருத்த யோசனைகளில் தீர்வை முன்வைக்காதது அரசாங்கத்தின் சுயநல போக்கையே வெளிக்காட்டுகின்றது.

தேசிய பிரச்சினைகள் தொடர்பில் அரசாங்கத்தின் மௌனம் சர்வதேச அழுத்தங்களையும் தலையீடுகளையும் அதிகரித்துள்ளது. இன்று இந்தியா மற்றும் அமெரிக்கா போன்ற நாடுகள் வெளிப்படையாகவே உள்நாட்டின் தேசியப் பிரச்சினைகளில் தலையிடுகின்றன. தொடர்ந்தும் அரசாங்கம் சுயநலப்போக்குடன் செயற்படுமேயானால் பாரியளவிலான பிரச்சினைகள் உள்நாட்டில் ஏற்படும். (ஸ்ரீ)

## கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

சர்வதேச அளவில் வேலைவாய்ப்பை பெற்றுதரும் CIMA கற்கை நெறி பற்றிய கருத்தரங்கு நாளை சனிக்கிழமை காலை 10.30 மணி முதல் 1 மணி வரை இல 19, ஸ்ரான்லி வீதியில் அமைந்துள்ள மக்கள் வங்கியின் 2 ஆவது கட்டடத்தில் இயங்கும் Spectra School of Business என்ற நிறுவனத்தில் இடம்பெறவுள்ளது.

இதில் ஆர்வமுள்ள அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-4)

# வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் இந்தியாவிற்கு விஜயம் செய்யவுள்ளார்

(கொழும்பு)

வெளிவிவகார அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் அடுத்த மாதமளவில் இந்தியாவிற்கு விஜயம் செய்ய உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இடம்பெயர் மக்கள் மீள் குடியேற்றம் மற்றும் அரசியல் தீர்வுத் திட்டம் தொடர்பில் இந்த விஜயத்தின் போது கூடுதல் கவனம் செலுத்தப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை வெளிவிவகார அமைச்சர் மற்றும் இந்திய வெளிவிவகார அமைச்சர்கள் அடுத்தடுத்து பரஸ்பர விஜயங்களை மேற்கொள்ள உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்திய பிரதமர் மன்மோகன் சிங் உள்ளிட்ட முக்கியஸ்தர்களை ஜீ.எல்.பீரிஸ் சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார் எனக் குறிப்பிடப்படுகிறது. இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.எம்.கிருஸ்ணா எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 27 ஆம் திகதி இலங்கைக்கு விஜயம் செய்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

மீள் குடியேற்ற நடவடிக்கைகள், சிறுபான்மை மக்களுக்கான அரசியல் தீர்வுத் திட்டம் போன்றவை தொடர்பில் அரசாங்கம் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகள் குறித்து இந்திய பிரதமருக்கு வெளிவிவகார அமைச்சர் விளக்கமளிக்க உள்ளார். இதேவேளை இலங்கையில் பயிற்சி பெற்றதாக தெரிவித்த லக்ஸர் தொய்பா அமைப்பு உறுப்பினர் தொடர்பான விடயங்கள் குறித்து கலந்தாலோசிக்கப்பட உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ)

# அநேகமான அரச நிறுவனங்கள், அமைச்சுக்களில் தமிழ்மொழி பயன்படுத்தப்படுவதில்லை

## சமாதான செயலகத்தின் முன்னாள் செயலாளர் தெரிவிப்பு

அநேகமான அரசாங்க நிறுவனங்கள் மற்றும் அமைச்சுக்களில் தமிழ்மொழி பயன் படுத்தப்படுவதில்லை என சமாதான செயல கத்தின் முன்னாள் செயலாளர் நாயகம் ஜோன் குணரட்ன தெரிவித்துள்ளார்.

உத்தியோகபூர்வ மொழிக் கொள்கையை அமுல்படுத்துவதன் மூலம் நல்லிணக் கத்தை ஏற்படுத்த முடியும் என அவர் குறிப் பிட்டுள்ளார்.

1991 ஆம் ஆண்டு உத்தியோகபூர்வ மொழி ஆணைக்குழு நிறுவப்பட்ட போதிலும் உத்தியோகபூர்வ மொழிக்கொள்கைகள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என தெரி வித்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக்குழு விடம் சாட்சியமளித்த போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அரசியல் சாசனத்தின் கொள்கைகளில் சரியான முறையில் நடைமுறைப்படுத்தப் படுவதில்லை எனவும் அரசாங்க உத்தியோ கத்தர்கள் என்ற ரீதியில் அரசியல் சாசனத் திற்கு கீழ்ப்படிந்து செயற்பட வேண்டியது அவசி யமானதெனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தேசிய மொழிக் கொள்கை அமுல்படுத் தப்படுகின்றதா என்பது குறித்து கண்கா ணித்து அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டு மென அவர் வலியுறுத்தியுள்ளார்.

2002 ஆம் ஆண்டில் இலங்கையில் நில விய வித்தியாசமான அரசியல் சூழ்நிலையே யுத்த நிறுத்த உடன்படிக்கை தோல்வியைத் தழுவ ஏதுவாக அமைந்ததென அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ)

# சிரேஷ்ட பிரதித் தலைவர் பதவியை ஏற்றுக்கொள்ளத் தயாரில்லை

## சஜித் பிரேமதாஸ தெரிவிப்பு

(கொழும்பு)

சிரேஸ்ட பிரதித் தலைவர் பதவியை ஏற்றுக் கொள்ளத் தயாரில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் அம்பாந்தோட்டை மாவட்டத்தலை வர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

கட்சித் தலைவரைத் தெரிவு செய்யும் வாக்கெடுப்பில் மாகாண மற்றும் உள்ளூ ராட்சி மன்ற உறுப்பினர்களுக்கு சந்தர்ப்பம் அளிக்கப்படும் வரையில் எந்தப் பதவியை யும் ஏற்றுக்கொள்ளப் போவதில்லை என அவர் தெரிவித்துள்ளார்.

புதிய பதவிகளை உருவாக்கும் வழ மையான விளையாட்டையே இந்தத் தட வையும் கட்சித் தலைமை ஆரம்பித்துள் ளதாகச் சுட்டிக்காட்டிய அவர் கட்சியை ஜன நாயகமயப்படுத்துவதே மிகவும் அவசிய மானதென குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை கட்சியில் ஏற்பட்டுள்ள முறு கல் நிலைமைக்குத் தீர்வு காணும் நோக்கில் இந்தப் புதிய பதவி உருவாக்கப்பட்டுள்ளது டன் கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங் கவின் பதவிக்கு அடுத்து, அதிகாரம் கூடிய பதவியாக சிரேஸ்ட பிரதித் தலைவர் பதவி கருதப்படுகிறது. (ஸ்ரீ)

# ஐ.நா. மாநாட்டில் கலந்து கொள்ளும் ஐ.தே.க வின் சிரேஷ்ட உறுப்பினர்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப் பினர் ஒருவர் ஐக்கிய நாடுகளின் 65 ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் கலந்து கொள் ளவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தலைமை யிலான அரசாங்க பிரதிநிதிகள் குழுவில் குறித்த சிரேஷ்ட ஐக்கிய தேசியக்கட்சி உறுப் பினர் அங்கம் வகிப்பதாகக் குறிப்பிடப்படு கிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் சிரேஷ்ட உறுப் பினர் ஒருவர் அரசாங்கப் பிரதிநிதிகள் குழு வில் உள்ளடக்கப்பட்டமை அரசியல் வட்டாரத் தில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

குறித்த சிரேஷ்ட உறுப்பினர் ஐக்கிய தேசியக்கட்சியில் முக்கிய பதவியொன்றை வகித்து வருவதாகவும் அண்மையில் சுயாதீ ன மாக இயங்குவதாக அறிவித்த குழுவில் அங் கம் வகிப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகள் பொதுச் சபைக் கூட்டத் தில் கலந்து கொண்டு நாடு திரும்பியதன் பின்னர் குறித்த ஐக்கிய தேசியக்கட்சி உறுப் பினர் அரசாங்கத்தின் முக்கிய பதவி ஒன்று காக நியமிக்கப்படலாம் என அரசியல் வட் டாரத் தகவல்கள் சுட்டிக்காட்டுகின்றன. (ஸ்ரீ)

# மோதல் இடம்பெற்ற பகுதிகளில் அவசர நிர்வாக செயற்பாடுகள் அவசியம்

## கற்றுக்கொண்ட பாடங்கள் நல்லிணக்க ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

மீள் குடியேற்றப்பட்ட மக்களினதும் மோதல் இடம்பெற்ற பகுதிகளில் வாழும் மக் களிதும் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்து வதற்காக அவசர நிர்வாக செயற்பாடுகள் அவ சியமெனக் கற்றுக்கொண்ட பாடங்கள் மற் றும் நல்லிணக்கத்துக்கான ஜனாதிபதி ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இவ்வாறு முன் வைக்கப்பட்டுள்ள உட னடி யோசனைகளின் மூலம் மக்கள் தமது தாய் மொழியைப் பொது இடங்களில் பயன் படுத்துவதற்குரிய வசதிகள் உறுதிப்படுத் தப் பட்டுள்ளமை சிறப்பம்சமாகும்.

இதற்கமைய பொலிஸ் நிலையங்களில் தாய்மொழி மூலம் வாக்குமூலங்களை அளிப் பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்படுவது முக்கிய மானதாகும் எனவும் கற்றுக்கொண்ட பாடங் கள் மற்றும் நல்லிணக்கத்துக்கான ஜனாதி பதி ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரை யாடிய ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் இடைக்காலப் பரிந்துரையாக இதனை முன் வைத்துள்ளனர்.

ஜனாதிபதி ஆணைக்குழுவின் சாட்சி விசாரணைகள் ஆரம்பமான பின்னர் அதன் உறுப்பினர்கள் முதற் தடவையாக ஜனாதிபதியைச் சந்தித்துள்ளதாக ஜனாதி பதி ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல் லிணக்கத்துக்கான ஜனாதிபதி ஆணைக் குழு இதுவரை மேற்கொண்ட சாட்சி விசார ணைகளின் மூலம் அடையாளம் காணப் பட்ட விடயங்களின் அடிப்படையில் இந்த இடைக்காலப் பரிந்துரைகள் முன்வைக் கப்பட்டுள்ளன.

வடபகுதியில் மோதல் இடம்பெற்ற பகுதி களிலும் மக்களின் சாட்சியங்களை ஆணைக் குழு பதிவு செய்துள்ளதாக் ஜனாதிபதி ஊட கப் பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ)

# 17.09.2010

# இன்றைய நாளின் முன்னைய பதிவுகள்



# நிகழ்வுகள்

- 1630 - மசாசுசெட்ஸ், பொஸ்டன் நகரம் அமைக்கப்பட்டது.
- 1631 - ரோமப் பேரரசுடனான 30 ஆண்டுகள் போரில் சுவீடன் பிறைட் டென்ஃபெல்ட் என்ற இடத்தில் பெரு வெற்றி பெற்றது.
- 1787 - ஐக்கிய அமெரிக்க அரசியலமைப்பு பிலடெல்பியாவில் கையெழுத் திடப்பட்டது.
- 1789 - வில்லியம் ஹேர்ச்செல் மைமாஸ் என்ற துணைக்கோளைக் கண்டு பிடித்தார்.
- 1809 - பின்லாந்து போரில் சுவீடனுக்கும் ரஷ்யாவுக்கும் இடையில் அமைதி ஒப்பந்தம் ஏற்பட்டது. பின்லாந்து ரஷ்யாவிடம் கையளிக்கப் பட்டது.
- 1858 - ஆழ்கடல் தொலைத்தந்திச் சேவை இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையில் ஏற்படுத்தப்பட்டது.
- 1862 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: மேரிலாந்தில் கூட்டமைப்பினருக்கும் அமெரிக்கப் படைகளுக்கும் இடையில் இடம்பெற்ற போரில் 4ஆயிரம் பேர் வரையில் கொல்லப்பட்டனர். பல்லாயிரக்கணக்கானோர் காயமடைந் தனர். இதுவே அமெரிக்காவில் ஒரே நாளில் அதிக இரத்தக்கள ரியை ஏற்படுத்திய போராகும்.
- 1862 - அமெரிக்க உள்நாட்டுப் போர்: பென்சில்வேனியாவில் ஆயுதக் கிடங்கு ஒன்றில் ஏற்பட்ட பெரும் வெடி விபத்தில் சிக்கி 78 பேர் கொல் லப்பட்டனர்.
- 1908 - ஓர்வில் ரைட்டின் விமானம் தரையில் மோதியதில் அதில் பயணம் செய்த "தொமஸ் செல்ஃபிரிட்ஜ்" என்பவர் கொல்லப்பட்டார். விமான விபத்தில் உயிரிழந்த முதலாவது மனிதர் இவராவார்.
- 1928 - சூறாவளி தென்கிழக்கு புளோறிடாவைத் தாக்கியதில் 2ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.
- 1929 - லித்துவேனியாவில் இடம்பெற்ற புரட்சி ஒன்றில் ஜனாதிபதி ஆகுஸ் டீனஸ் வொல்டெமாரெஸ் பதவியிழந்தார்.
- 1939 - சோவியத் ஒன்றியம் போலந்தின் மீது படையெடுத்து கிழக்குப் பகுதியைப் பிடித்தது.
- 1939 - இரண்டாம் உலகப் போர்: பிரித்தானிய விமானம் தாங்கிக் கப்பல்ஒன்று ஜெர்மனியரால் தாக்கி அழிக்கப்பட்டது.
- 1943 - இரண்டாம் உலகப் போர்: ரஷ்யாவின் பிறயான்ஸ்க் நகரம் நாசிகளிடம் இருந்து விடுவிக்கப்பட்டது.
- 1949 - ரொறண்டோ துறைமுகத்தில் கனேடியக் கப்பல் ஒன்று எரிந்ததில் 118பேர் கொல்லப்பட்டனர்.
- 1956 - அவுஸ்திரேலியாவில் முதன் முதலாக தொலைக்காட்சி காண்பிக்கப் பட்டது.
- 1976 - நாசா தனது முதலாவது மீள் விண்ணோடமான எண்டர்பிறைசஸ் பற்றிய தகவல்களை வெளியிட்டது.
- 1978 - இஸ்ரேல், எகிப்து ஆகியன காம்ப் டேவிட் ஒப்பந்தத்தில் கையெழுத் திட்டன.
- 1980 - போலந்தில் சொலிடாரிற்றி தொழிற்சங்கம் உருவாக்கப்பட்டது.
- 1980 - நிக்கராகுவாவின் முன்னாள் ஜனாதிபதி அனாஸ்டாசியோ சொமோசா டெபாயில் பராகுவேயில் படுகொலை செய்யப்பட்டார்.
- 1991 - லினக்ஸ் இயங்குதளம் (0.01) இணையத்தில் கிடைத்தது.
- 1993 - கடைசி ரஷ்யப் படை போலந்தில் இருந்து வெளியேறியது.
- 1997 - பெரியார் பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது.
- 2004 - இந்தியாவில் தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்டது.

## பிறப்புகள்

- 1897 - வில்லியம் கோபல்லாவ, இலங்கையின் ஆளுநர், முதலாவது ஜனாதிபதி (இ.1981)
- 1989 - வ.ரா.மணிக்கொடி எழுத்தாளர்.
- 1906 - ஜே.ஆர்.ஜெயவர்த்தன, இலங்கையின் முதலாவது நிறைவேற்றதி கார ஜனாதிபதி (இ. 1996)
- 1944 - ரைன் மெஸ்னர், இத்தாலிய மலையேறுநர்
- 1950 - நரேந்திர மோடி, இந்திய அரசியல்வாதி
- 1974 - ரஷீத் வாலஸ், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

## இறப்புகள்

- 1665 - நான்காம் பிலிப், ஸ்பெயின், போர்த் துக்கல், இலங்கை மன்னன் (பி. 1605)
- 1953 - திரு.வி.க, தமிழறிஞர் (பி. 1883)
- 1959 - கு.வன்னியசிங்கம், இல்ங்கைத் தமிழரசுக் கட்சித் தலைவர் (பி. 1911)
- 1979 - எம்.ஆர்.ராதா, தமிழ்த் திரைப்பட, நாடக நடிகர் (பி. 1907)



**1879 - இல் இந் நாளில் தான் திரா விடர் கழகத் தந்தை ஈ.வே.ரா.பெரியார் பிறந்தார். (இ. 1973)**

# ஈழத்தவர் வரலாறு

38

1545 ஆம் ஆண்டு சீதவாக்கை, கண்டி, அரசர்களுடன் இணைந்து போர்த்துக்கேயருக்கு எதிராகக் கோட்டைக்குப் படையனுப்பிச் செயற்பட்டான். அதில் வெற்றி காண முடியவில்லை. 1552 இல் விதியபண்டாரா என்பவன் கோட்டை மன்னனுடனும் போர்த்துக்கேயருடனும் பகைத்துக் கொண்டு யாழ்ப்பாணம் வந்தபோது அவனைச் சங்கிலி தன்னுடன் இணைத்துக் கொண்டான். வீரமாகாளியம்மன் கோயிலில் நிகழ்ந்த ஒரு கலவரத்தில் விதிய பண்டார இறக்க நேர்ந்தது.

**போர்த்துக்கேயப் படையெடுப்பு**

மன்னாரில் நிகழ்ந்து முடிந்த துயரச் சம்பவத்திற்காகப் பழிவாங்கும் பொருட்டு, கி.பி.1543 இல் போர்த்துக்கேயப்படை யாழ்ப்பாணத்திற்குப் புறப்பட்டது. இப்படைக்கு மாட்டின் அல்போன்சோதே சௌசா என்பான் படைத்தலைவனாக வந்தான். அவனது கப்பல்கள் நெடுந்தீவில் ஒதுங்கிய போது, பரநிருபசிங்கன் வந்தான். அவனை நாடிச்சென்று உதவிகோரினான். சங்கிலி செகராசசேகரன் வழங்கிய திரவியத்தால் திருப்தியடைந்த மாட்டின் அல்போன்சோதே சௌசா படையுடன் திரும்பிச் செல்ல நேர்ந்தது. வக்கிர துக்குறி பண்டாரம் என போர்த்துக்கேயரால் அழைக்கப்பட்ட பரு நிருப சிங்கன்,சங்கிலி மன்னனுக்குப் பயந்து கோவை ஓடநேர்ந்தது. அரசுரிமையைப் பெற்றுக் கொள்ளும் நோக்குடன் பரநிருப சிங்கன் கத்தோலிக்க மதத்தையும் தழுவிக் கொண்டான். இருந்தும் யாழ்ப்பாண இராச் சியத்தின் சிம்மாசனத்தில் அமர அவனுக்கு இறுதிவரை சந்தர்ப்பம் கிடைக்கவில்லை.

## 6.சிங்கைப் பரராசசேகரன் தொட்டு சங்கிலி செகராசசேகரன் வரை

இரண்டாம் முறை கி.பி.1560 ஆம் ஆண்டு கொன்ஸ் தாந்தீனு தே பிறகண்சா என்றும் தளபதியின் தலைமையில் போர்த்துக்கேயப்படை 77 கப்பல்களுடன் கரையூரில் வந்திறங்கியது.

தமிழர்படை எவ்வளவு எதிர்த்தும் போர்த்துக்கேயப்படை நல்லூரை நோக்கி முன்னேறுவதைத் தடுக்கமுடியவில்லை. நல்லூர் நகரி முழுவதும் பறங்கிப் படைகளால் சூறையாடப்பட்டது. இளவரசனின் மனைவியும் அரண்மனைப் பெண்களும் போர்த்துக்கேயரினால் கைது செய்யப்பட்டனர்.

சங்கிலிமன்னன் கோப்பாய்க்குத் தப்பி ஓடி அங்கிருந்த காவலரணை அடைந்தான். போர்த்துக்கேயத்தளபதி பிறகன்சா சங்கிலி மன்னனைப்பிடிக்கும் நோக்குடன் கோப்பாய்க்குச் சென்றபோது, சங்கிலி மன்னன் பச்சிலைப்பள்ளிக்குப் பின்வாங்கிச் சென்றான். போர்த்துக்கேயப்படை தொடர்ந்து போரிட முடியாத நிலையில், சங்கிலி மன்ன னுடன் ஓர் உடன்படிக்கை செய்துகொள்ள நேர்ந்தது. அந்த ஒப்பந்தப்படி சங்கிலி போர்த்துக்கேயருக்கு திறையாக ஆண்டு தோறும் 12 கொம்பன் யானைகளையும் 1200 பதக்குப் பணமும் தர ஒப்புக் கொண் டான். அத்துடன் மன்னார் தீவை போர்த்துக்கேயரிடம் விட்டுக்கொடுக்கவும் ஒப்புக்கொண்டான். இந்த ஒப்பந்தப்படி சங்கிலி மன்னன் திறை செலுத்தியதாகத் தெரியவில்லை.



நல்லூரிலுள்ள மந்திரிமனை

பிறகன்ஸா மன்னாரைக் கைப்பற்றி அங்கு ஒரு கோட்டையைக் கட்டிக் கொண்டான்.

திருக்கேதீஸ்வரம் இடிக்கப்பட்டு, அதன் கற்களும் இக் கோட்டையமைக்கப் பயன்படுத்தப்பட்டன. மன்னாரில் கத்தோலிக்க மதத்தைப் பரப்புவது இலகுவாகியது. மன்னாரில் முத்துக்குளிக்கும் பகுதிகள் பறங்கிகள் வசமாகின.

முதலாம் சங்கிலி 1565 ஆம் ஆண்டு வரை ஆட்சி செய்தான் எனக் கொள்ளலாம். 1564 ஆம் ஆண்டு சீதவாக்கை மன்னன் மாயாதுன்னைக்கு ஆதரவாகவும் போர்த்துக்கேயருக்கு எதிராகவும் வடக்கர் படையொன்றினைச் சங்கிலியனுப்பியிருந்தான்.

எவ்வாறாயினும் போர்த்துக்கேயரிடம் இறுதிவரை சங்கிலி போராடியுள்ளான். அவனை அவர்களால் கைப்பற்ற முடியவில்லை.

### (கி.மு 5 ஆம் நூற்றாண்டிலிருந்து கி.பி. 1621 ஆம் ஆண்டு வரை)

சங்கிலி செகராசசேகரனுக்குப் பின் புவிராசபண்டாரம், காசிநயினார் அல்லது குஞ்சுநயினார் (1565), பெரியபிள்ளை செகராசசேகரன் (1570), புவிராசபண்டாரம் பரராசசேகரன் (1582), எதிர்மன்னசிங்க குமாரன் (1591), சங்கிலிகுமாரன் செகராச சேகரன் (1616) ஆகிய ஆறு மன்னர்கள் யாழ்ப்பாணத்தின் ஆட்சியாளர்களாக விளங்கினர். யாழ்ப்பாண இராச்சியத்தில் நிகழ்ந்த உள்நாட்டுக் குழப்பத்தினாலும், போர்த்துக்கேயரின் அரசியல் தலையீட்டினாலும் இந்த மன்னர்கள் நிலையாகத் தொடர்ந்து ஆள முடியாது போனது. புவிராச பண்டாரம், இரு தடவைகள் மன்னாரைத் தாக்கிப் போர்த்துகேயரைத் துரத்த முயன்றும், இயலாது போயிற்று.

**சங்கிலிகுமாரன் செகராசசேகரன்**

கி.பி 1591 இல் போர்த்துக்கேயர் 3ஆவது தடவையாக அந்திரே பூர்த்தாடு தே மென்டோன்சா என்னும்படைத்தலைவனை பெரும் படையுடன் யாழ்ப்பாணத்திற்கு அனுப்பி வைத்தனர். தமிழர் படையுடன் பறங்கியர் படையும் நல்லூர்க்கந்தசுவாமி கோயிலுக்கும் வீரமாகாளிஅம்மன் கோவிலுக்குமிடையில் மோதின. தமிழர்படை தோல்வியைத் தழுவ நேர்ந்தது. பூர்த்தாடு, பெரியபிள்ளையின் மகனாகிய எதிர்மன்னசிங்கனை மன்னனாக்கி மீண்டான். எதிர்மன்னசிங்கன் கி.பி.1616 இல் மரணமடைய சங்கிலி குமாரன் செகராசசேகரன் அரியணையில் அமர்ந்து கொண்டான் இவனே யாழ்ப்பாண இராச்சியத்தின் கடைசி மன்னனாவான்.

கி.பி 1620 ஆம் ஆண்டு போர்த்துக்கேயரின் இறுதிப்படையெடுப்பு நிகழ்ந்தது போர்த்துக்யே படையெடுப்புக்கு பிலிப்தே ஒலிவேறா என்பவன் படைத்தலைமை தாங்கினான். இப்படையெடுப்பில் தமிழ் வீரர்கள் கொடூரமாகத் தாக்கப்பட்டார்கள். சங்கிலி குமாரன் குடும்பத்துடன் சிறைபிடிக்கப்பட்டு கோவைக்கு அனுப்பப்பட்டான்.

கலாநிதி க.குணராசா
செங்கை ஆழியான்


அங்கு அவனை சிரச்சேதம் செய்தார்கள்.ஆரிய அரச பரம்பரை அவனது மரணத்துடன் அழிந்துபோனது. யாழ்ப்பாண இராச்சியத்தின் தேசாதிபதியகா பிலிப்தே ஒலிவேறா தன்னை நியமித்துக் கொண்டான்.

அவன் காலத்தில் நல்லூர் கந்தசாமி கோயில் உட்பட பல சைவக் கோயில்கள் அழித்து தரைமட்டமாக்கப்பட்டன. அவற்றைக் கொண்டு யாழ்ப்பாணக் கோட்டை கட்டப்பட்டது. பலநூற்றாண்டு காலமாக சுதந்திரத்தைப் பேணிப் பாதுகாத்து வந்த தமிழர் இராச்சியத்தில் கி.பி 1621 ஆம்ஆண்டு சுதந்திர சூரியன் அஸ்தமித்தது. (தொடரும்)

**ஈழத்தவர் வரலாறு என்னும் தலைப்பில் கலாநிதி க.குணராசா (செங்கையாழியான் ) எழுதிய தொடரில் நாளை முதல் வன்னிச் சிற்றரசுகள் என்னும் தொடர் பிரசுரமாகும்.**

# இலக்கிய வகைமை நோக்கில் கையறு நிலை

03



மன்னன் இறப்பை எண்ணி வருந்தும் புலவர்கள் இறப்பிற்குக் காரணமான கூற்றுவனையும் கடிந்து பாடும் நிலையை "அதியமான் இறந்ததால் வருத்தமுற்றுக் கிடக்கும் இவ்வுலகினை விடவும் அறமற்ற கூற்றே நீ மிகப் பெரிதாக இழந்தாய்; ஏனெனில் வாழ வேண்டும் என்பதற்காக வயலிடத்தே விளையும் வருவாயை அறியாத உழவன் விதையினை உண்டாற்போல அதியமான் உயிருடன் இருந்தால் போர்க்களத்தில் போரிட்டு மிகுதியான உயிர்களைத் தருவான் என்பதை அறியாமல் நீ அதியமான் உயிரை உண்டாய்" என அரிசில்கிழார் பாடுவது குறிப்பிடத்தக்கது.(புறம்:230)

...லும் மன்னன் இறந்தவுடன் தாமும் ...மாயவில்லையே என்று வருந்தும் நிலையில் "உலகத்தார் பலருடன் கூடி உண்டவன் இன்று பிடியின் அடி போன்ற சிறிய இடத்தை மெழுகித் தனக்காக புல் மேல் வைக்கப்பட்ட சிறிய பிண்டத்தை எவ்வாறு உண்டானோ; அவன் இறந்தமைக்கு நான் வருந்துகின்றேன்; நானும் இறப்பதாக" என்று வேள் எவ்வியின் இறப்பை எண்ணி வெள்ளெருக்கிலையார் பாடுகின்றார்.

**கையறு நிலைப் பாடல்களின் ஓசையமைதி**

கையறு நிலைத்துறைப் பாடல்கள் ஒப்பாரி என்னும் நாட்டுப்புற வாய்மொழி இலக்கியத்தின் சாயம் படிய அமைந்துள்ளன. அடிதோறும் இயைபுத்தொடை அமைதல், சொல் - தொடர் திரும்பத் திரும்பப் பயிலுதல் ஆகியன ஒப்பாரிப் பாடல்களில் காணும் கூறுகளாகும். அதியமானின் இறப்பிற்கு வருந்தும் ஔவையர் பாடிய பாடலில்,

"சிறியகட் பெறினே எமக்கீயும் மன்னே
பெரியகட் பெறினே
யாம்பாடத் தான்மகிழ்ந்துண்ணும் மன்னே"
(புறம்:235)

### செம்மொழி மாநாட்டு ஆய்வுக்கட்டுரை

என்று தொடர்ந்து அமையும் பாடலடிகளில் மன்னே என்ற கழிவிரக்கப் பொருண்மை கொண்ட இடைச்சொல் மீள மீளப் பயின்று அமைந்தமையைச் சுட்டலாம். இவ்வமைப்பிலே புறப்பாடல்கள் 65, 221, 239 ஆகியனவும் அமைகின்றன.

**சிலம்பில் கையறுநிலை**

தனிப்பாடல் அமைப்பில் அமைந்த கையறு நிலைப்பாடல்கள் காப்பியம் என்ற புதிய வகையிலும் பயின்றுள்ளமையைச் சிலம்பு முதலான காப்பியங்கள் வழி அறியலாம்.

சிலம்பின் ஊர் சூழ் வரியில் கோவலன் கொலையுண்டதை அறிந்த கண்ணகி கணவன் உடலைக் காணச் செல்கையில்,

"பெண்டிரும் உண்டுகொல்? பெண்டிரும் உண்டு கொல்?
கொண்ட கொழுநர் உறுகுறை தாங்குறும்
பெண்டிரும் உண்டுகொல் பெண்டிரும் உண்டுகொல்" (சிலம்பு -ஊர்-51-53)

என்ற அடிகளும் துன்பமாலையில் "கணவன் இறந்ததால் துயர்ப்படும் மகளிர் போல் அவலம் கொண்டு நான் அழிவேனோ" என்று பாடும் அடிகளும் கையறு நிலைத் துறையின் பொருண்மையினவே.

**சீவகசிந்தாமணி**

இறப்பில் பாடும் பொருண்மையதான கையறுநிலைகூற்றைச் சீவகன் பிறப்பொடு பொருத்தி வசையை பாடும்

"வெவ்வாய் ஓரி முழவாக விளிந்தார் ஈமம் விளக்காக
ஒவ்வாச் சுடுகாட்டு உயர் அரங்கில் நிழல் போல் நுடங்கிப் பேயாட
எவ்வாய் மருங்கும் இருந்திரங்கி கூகை குழறிப் பாராட்ட
இவ்வாறாகிப் பிறப்பதோ இதுவோ மன்னர்க்கு இயல்வேந்தே" (சீவக.309)

என்ற பாடல் அரண்மனையின்பத்தையும் தந்தை சச்சந்தனையும் இழந்து சுடுகாட்டில் பிறக்கும் சீவகனின் நிலையை உணர்த்துகின்றது.

**கம்பராமாயணம்**

கம்பராமாயணம் நீண்ட கதை அமைப்பில் பல கதைத் திருப்பங்களைக் கொண்டுள்ளதால் அதன் கண் கையறுநிலை இடம் பெறக்கூடிய நிகழ்வுகள் பல உள. இராமன் முடி சூடாமல் 14 வருடம் காட்டிற்குச் செல்கின்றான் என்ற நிலையில் கோசலை, தசரதன், ஊர்மக்கள் ஆகியோர் பலவாறாகப் புலம்பிப் பாடுவதை நகர் நீங்குபடலம் பல பாடல்களில் வெளிப்படுத்துகின்றது. சான்றாக,

முனைவர் பி.கரிகாலன்
தமிழ்த்துறைத்தலைவர்
ஸ்ரீமத் ஆண்டவன் கலை அறிவியல் கல்லூரி
திருவானைக்கோவில், திருச்சிராப்பள்ளி -5

"நஞ்சுமோ இனி நான் உயிர்வாழ் வெனோ
அஞ்சும் அஞ்சும் என் ஆருயிர் அஞ்சுமால்"
(கம்ப. அயோ.301)

என்ற கோசலையின் கூற்றைச் சுட்டலாம். இது இராமன் அரசுரிமை இழப்பையும் அவனைப் பிரிகின்ற துயரையும் வெளிப்படுத்துகின்றது. (தொடரும்)

# தமிழகம் வந்த வட - கிழக்கு விவசாயிகள் சோகக் கதை சொல்லவும் பெரிதே

இலங்கை விவசாயிகள் இங்கு வந்து சென்றிருக்கிறார்கள்! இலங்கையைச் சேர்ந்த 'மோன்லார்' (தேசிய நில சீரமைப்புக்கான இயக்கம்) என்ற அமைப்பு, யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதியில் இருக்கும் விவசாயிகளை கடந்த மாத இறுதியில் தமிழகம் மற்றும் கேரளாவுக்கு அழைத்து வந்தது. இதில் ஈழத்தமிழர் மற்றும் சிங்கள் விவசாயிகள் என சுமார் 40 பேர் கலந்து கொண்டார்கள். ஈழத் தமிழ் விவசாயிகள், கடந்த 30 ஆண்டுகளாகப் போரினால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு, முல்லைத்தீவு, மன்னார் மற்றும் கிளிநொச்சியைச் சேர்ந்தவர்கள். ஒரு காலத்தில் அந்த நாட்டுக்கே சோறு போட்டவர்கள், இன்று ஒரு வேளை சாப்பாட்டுக்கு பிறரை எதிர்பார்க்கும் நிலையில் இருக்கிறார்கள். இப்போதும் கூட தன்னார்வத் தொண்டு நிறுவனங்களின் உதவியால் தான் அவர்கள் இங்கு வந்திருக்கி றார்கள். அவர்களை சந்தித்துப் பேசினோம்.

கிளிநொச்சி விவசாயி ஒருவர், '20 நாளைக்கு முன்னாடிதான் முள்வேலி முகாமில் இருந்து எங்க குடும்பத்தை விடுவிச்சாங்க. எங்களுக்கு 10 குச்சிகள், ஒரு அலுமினிய ஷீட், பொலித்தீன் ஷீட் கொடுத்து நடுக்காட்டில் இறக்கிவிட்டு போயிட்டாங்க. அங்கே மார்க் பண்ணி இருந்த இடம் தான் எங்களுக்காம். அந்த இடத்தில் புதர் மண்டிக் கிடக்குது. அங்கு பாம்புகளும் தேள்களும் சர்வசாதாரணமாக திரிகின்றன. நிலத்தைப் பண்படுத்த எங்களிடம் எந்த விவசாயக் கருவியும் இல்லை. 10 நாட்களுக்கான உணவு தானியங்களே இருக்கின்றன. அந்தப் பக்கம் கடைகளும் கிடையாது. நிலத்தை உழுது பயிரிட்டால் தான் எங்கள் வயிற்றுக்கு உணவு கிடைக்கும்... என்றார்...' பரிதாபமாக.

அதே பகுதியைச் சேர்ந்த மற்றொருவர், 'நாங்கள் ஒரு பசு மாடு வாங்கக்கூட இயலாத வறுமையில் இருக்கிறோம். முன்பு என்னிடம் 120 ஏக்கர் விவசாய நிலம் இருந்தது. 20 பசு மாடுகள் இருந்தன. நெல், கரும்பு, வாழை, மா பயிரிட்டேன். இந்தியா, மலேசியாவுக்கு எல்லாம் ஏற்றுமதி செய்தேன். இந்தப் பாழாய்போன யுத்தத்தால் எல்லாம் போய்விட்டது. இப்போது இராணுவம் காட்டிய இடத்தில் அரை ஏக்கர் நிலம் மட்டுமே இருக்கிறது. அதுவும் பயிரிட முடியாத படி பாறை போல இறுகிக்கிடக்கிறது...' என்றார் கண்ணீருடன்!

மன்னாரைச் சேர்ந்த விவசாயி ஒருவருக்கு யுத்தத்தில்மிஞ்சியது தன் மகள் மட்டுமே! "இலங்கையின் மொத்த நெல் உற்பத்தியில் 80 சதவிகிதம் மன்னாரில் தான் விளைந்தது. யுத்தம் முடிந்ததும், 'இது தான் உன் இடம்...' என்று என்னிடம் காட்டினார்கள். அங்கே மூன்று அடி அளவு குழி.விவசாய பூமியில் இருந்த மண்ணைத் தோண்டி பங்கருக்கு பயன்படுத் தியதால் ஏற்பட்ட குழி அது. குழியில் பாறை தான் இருக் கிறது. அதில் என்ன பயிர் செய்ய? என் நிலமாவது பரவாயில்லை. பக்கத்தில் இன்னொருவருக்குக் கொடுத்த நிலத்தில் ஏராளமான கண்ணிவெடிகள் இருக்கின்றன. அவர் நிலத்தில் காலெடுத்து வைக்கவே பயந்து கொண்டு குடிசையில் கிடக்கிறார்..." என்றார்.

## நாட்டிற்குச் சோறுபோட்டவர்கள் இன்று ஒருவேளை சோற்றுக்கு கையேந்தும் பரிதாபம்





இலங்கை விவசாயிகள்

முல்லைத்தீவு விவசாயிகளோ, "எங்கள் நிலங்கள், கட்டடங் களை எல்லாம் இராணுவம் ஆக்கிரமித்து விட்டது. அவர் களை எதிர்த்து ஒரு வார்த்தை பேச இயலாது. கிணறு, குளங்களில் எல்லாம் கொத்து வெடிகளை வீசி ஒன்றும் இல்லாமல் ஆக்கிவிட்டார்கள். இருக்கும் கொஞ்சநஞ்ச நிலங்களிலும் வெடிமருந்து கலந்து கிடக்கிறது. அங்குள்ள 'கமநல சேவை திணைக்களம்' என்ற அமைப்புதான்எங்களுக்கு ஓரளவு உதவுகிறது.

அந்த அமைப்பு அரசாங் கத்திடம் போராடி சில டிராக்டர் களைப் பெற்றுக் கொடுத்து இருக்கிறது. 10 கிராமங்களுக்கு இரண்டு டிராக்டர்கள் வீதம் உழுகிறோம். விதைகளையும் அவர்களே கொடுக்கிறார்கள். ஆனால், இருக்கிற அரை ஏக்கர் ஒரு ஏக்கர் நிலத்தை வைத்து பெரிய அளவில் விவசாயம் செய்ய இயலாது. இப்போது நாங்கள் விளைவிப்பது எங்கள் வயிற்றுக்குத்தான்..." என்றார் குரல் கம்மி! ஆனால், மட்டக் களப்பில் நிலைமை பரவா யில்லை என்கிறார்கள் அப்பகுதி விவசாயிகள். "கருணா சரண்டர் ஆனதில் இருந்து கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்தப் பக்கம் பெரியதாக யுத்தம் நடக்கவில்லை. அரசாங்கம் எந்த உதவியும் செய்யவில்லை என்றாலும் சொந்த உழைப்பில் சுமாராக விவசாயம் நடக்கிறது. உரம் கிடைப்பது தான் சிரமமாக இருக்கிறது. இப்போது ஜீரோ பட்ஜெட் இயற்கை விவசாயம் பற்றி தெரிந்து கொண்டோம். அதோட மட்டுமில்லாமல் விகடன் பிரசுரத்தின் ஜீரோ பட்ஜெட் விவசாயப் புத்தகங்களை சென்னை சில்க்ஸ் நிறுவனம் எங்களுக்கு இலவசமாக வழங்கி இருக்கிறது. பிழைத்துக் கொள்வோம் என்ற நம்பிக்கை வந்து இருக்கிறது...." என்றார் சற்று ஆறுதலுடன்.

சிங்களத் தன்னார்வத் தொண்டு நிறுவ னத்தின் பிரதிநிதியான லீனஸ் ஜெயதிலக்க நம்மிடம் "போரினால் பாதிக்கடபட்ட நிலங்களைப் பண்படுத்த மட்டக்களப்பு கிழக்கு பல்கலைக்கழக விவசாயத்துறை மூலம் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. சுபாஷ் பாலேக்கரின் ஜீரோ பட்ஜெட் இயற்கை விவசாயம் மட்டுமே பாதிக்கப்பட்ட ஈழத் தமிழ் விவசாயிகளை விரைவில் மீட்டெ டுக்கும். அதற்கு எங்களால் முடிந்த உதவிகளையும் செய்து வருகிறோம்!" என்றார்.

### ஜீரோ பட்ஜெட் விவசாயம்?

"மண்ணில் மக்கும் இலைகள், சருகுகள், குப்பைகள், நாட்டு மாடுகளின் சாணம் மற்றும் மாட்டுச் சலம் போன்றவையே இயற்கை உரம். இதைப் பயன் படுத்தினாலே விவசாயத்தைச் செழிக்க வைக்கலாம். இதற்குப் பெரிய அளவில் மூலதனம் போட வேண்டாம். கூடவே யூரியா மற்றும் பூச்சிக் கொல்லி ஆகியவற்றையும் பயன்படுத்த வேண்டாம். இது தான் பாலேக்கரின் சித்தாந்தம். இதன் படி நுண்ணுயிர்ப் பெருக்கம், பூமியில் உபயோகம் உள்ள ஜீவராசிகளின் எண்ணிக்கையைக் கூட்டுவதால் மண் மேன்மை அடைகிறது. மேலும் மக்குவது தான் மண்ணின் சொத்து. மூடாக்கு போடுவதால் பூமியில் மக்கும் திறன் கூடுவதுடன் மண்ணில் காபன்சத்தும் கூடுகிறது.மக்கும் திறன் கூடக்கூட மண்ணின் வளம் கூடி இயற்கையான மண் ணாக மாறிவிடும்" என்கிறார்கள் விவசாய வல்லுநர்கள்!

ஜூனியர்விகடன்

டி.எஸ்.சஞ்சீவிகுமார்

# பயங்கரவாதத் தடைச் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டும்

## முன்னாள் தூதுவர் நந்த கொடகே கோரிக்கை

(கொழும்பு)

பயங்கரவாதத் தடைச் சட்டம் திருத்தி அமைக்கப்பட வேண்டுமென முன்னாள் தூதுவர் நந்த கொடகே கோரிக்கை விடுத்துள்ளார்.

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவிடம் சாட்சியமளித்த போது அவர் இதனைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை பயன்படுத்தி சில அநீதிகள் இழைக்கப்படுவதாகவும் நாட்டில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட தமிழ் இளைஞர்கள் பல பலவருடங்களாக எவ்வித குற்றச்சாட்டும் சுமத்தப்படாது சிறை களில் தடுத்து வைக்கப்பட்டள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

வெலிக்கடைச் சிறைச்சாலையில் 500 பேரும் பூசா தடுப்பு முகாமில் 800 பேரும் பயங்கரவாதத் தடுப்புப் பிரிவில் மேலும் 700 பேரும் இவ்வாறு பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கப்பட்டுள்ள்தாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு தமிழ் இளைஞர்களை தடுத்து வைப்பதன் மூலம் மேலும் பல பிரபாகரன்கள் உருவாக்கக் கூடும் என அவர் எச்சரிக்கை விடுத்துள்ளார். நீண்ட காலமாக தடுத்து வைக்கப்படுவதன் மூலம் இளைஞர்களின் மனதில் விரக்தி ஏற்படக் கூடிய சாத்தியம் காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

செல்வந்த புலம் பெயர் மக்கள் தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர் யுவதிகளை பயன்படுத்தி இலங்கையில் குழப்பங்களை ஏற்படுத்தவும் பழிவாங்கல்களை மேற்கொள்ளவும் கூடிய சாத்தியம் காணப்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நீண்ட காலமாக குற்றச்சாட்டுக்கள் எதுவுமின்றி தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர் யுவதிகளுக்கு எதிராக வழக்குத் தொடரப்படவேண்டும் அல்லது அவர்களை விரைவில் விடுதலை செய்ய வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

தடுத்து வைக்கப்பட்டுள்ள இளைஞர் யுவதிகளுக்கு உள ரீதியான ஆலோசனைகள் மற்றும் தொழிற்பயிற்சிகளும் தொழில் வாய்ப்புக்களும் வழங்கப்படவேண்டுமென அவர் தெரிவித்துள்ளார்.

1956ஆம் ஆண்டுமுதல் தமிழ் மக்கள் பல் வேறு சந்தர்ப்பங்களில் அடக்கு முறைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக சுட்டிக்காட்டிய அவர் 1987,88 ஆம் ஆண்டுக் காலப்பகுதியிலேயே தமிழ் மொழி அரச கரும மொழியாக அறிவிக்கப்பட்டதென தெரிவித்துள்ளார்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் பிறந்து வளர்ந்த மக்கள், சிங்களவர்களை கொடிய விலங்குகளாக நோக்கும் நிலைமை காணப்பட்டதாகவும் இதனை மாற்றியமைக்க நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

யதார்த்தபூர்வமாக தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டியதே தற்போதைய முதன்மைத் தேவை என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ)

# இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும்

(கரவெட்டி)

மாலுசந்தி மைக்கல் விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த விளையாட்டு விழாவின் இறுதிப் போட்டியும் பரிசளிப்பு விழாவும் இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ்விறுதி நிகழ்விற்கு பிரதம விருந்தினராக கரவெட்டி பிரதேச செயலர் எஸ். சத்தியசீலன் கலந்து சிறப்பிக்கவுள்ளார்.

சிறப்புவிருந்தினர்களாக கரவெட்டி பிரதேச சபைச் செயலர் எஸ்.குலநாயகம், நெல்லியடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ரி.காங்கரா, 3ஆவது சிங்க றெஜிமென்ற் கட்டளை அதிகாரி மேஜர் பெரகரா ,பருத்தித்துறை உதைப்பந்தாட்ட லீக் தலைவர் டி.எம். மேதாபர்ணம்,நெல்லியடி சிலிங்கோ நிறு வன முகாமையாளர் ரி.நிறோ சன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

உதைப்பந்தாட்ட இறுதிப்போட்டியில் இளவாலை யங்கென்றிஸ் அணியை எதிர்த்து வதிரி டயமன்ஸ் அணி மோதவுள்ளது.

(ஸ்ரீ-4-24)

# அரசாங்கத்தின் நடவடிக்கைகளினால் பாரியளவு சமூக பொருளாதார பின்னடைவு ஏற்படக்கூடும்

## ஐ.தே.க. எச்சரிக்கை

(கொழும்பு)

அரசாங்கத்தின் நடவடிக்கைகளினால் பாரியளவு சமூக மற்றும் பொருளாதார பின்னடைவு ஏற்படக் கூடிய அபாயம் காணப் படுவதாக ஐக்கிய தேசியக்கட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

அதிகாரத்தை மத்தியமயப்படுத்தும் அரசாங்கத்தின் திட்டம் ஆரோக்கியமானதல்ல என கட்சி சுட்டிக்காட்டியுள்ளது.

மாகாணசபைகளின் காணி மற்றும் காவல்துறை அதிகாரங்களை மத்திய அரசாங்கம் பொறுபேற்றுக்கொள்வதன் மூலம் பாரியளவு சமூக மற்றும் பொருளாதார பின்னடைவுகள் ஏற்படக் கூடுமென தெரிவிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்ட 18 ஆவது திருத்தச் சட்ட மூலத்தின் ஊடாக அதிகாரம் ஓர் நிலையில் மத்தியமயப்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் மாகாசபைகளின் கீழ் காணப்பட்ட சில விடயங்களை நிறைவேற்று அதிகார ஜனாதிபதி எடுத்துக்கொண்டுள்ளதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

காவல்துறை மற்றும் மனித உரிமை உள்ளிட்ட சகல முக்கிய நிறுவனங்களும் ஜனாதிபதியின் கட்டுப்பாட்டின் கீழ் நிர்வகிக்கப்படவுள்ளதாக ஐக்கிய தேசியக்கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

17 ஆவது திருத்தச் சட்ட மூலத்தின் ஊடாக மக்களுக்கு இருந்த ஜனநாயக உரிமைகள் 18ஆவது திருத்தச் சட்ட மூலத்தின் ஊடாக பறிக்கப்பட்டுள்ளதென அவர் குறிப்பிட்டுள்ளார். (ஸ்ரீ)

# பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை கால்நடை வளர்ப்போர் கூட்டுறவுச் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் எதிர்வரும் 22ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு வட்டுக்கோட்டை பால் கொள்வனவு விற்பனை நிலையத்தில் இ.கு. சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து உறுப்பினர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு சங்க செயலாளர் வே. சிவலிங்கம் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-4)

# உலகளவில் 100 கோடி மக்கள் பசியால் வாடுகின்றனர்

## ஐ.நா. உணவுக்கழகம் தெரிவிப்பு

(ரோம்)

மனிதன் வாழ்வதற்கு தேவையான சத்தான உணவு இன்றி உலக அளவில் 100 கோடி மக்கள் பசியால் வாடுவதாக ஐ.நா உணவுக்கழகம் தெரிவித்துள்ளது.

இன்றைய நவீன உலகில் வளர்ந்த மற்றும் வளரும் நாடுகள் பொருளாதார வளர்ச்சியை எட்ட போட்டி போட்டு முன்னேறுகின்றன. சில நாடுகளில் மனிதன் வாழ தேவையான உணவு கூடக்கிடைக்காமல் தவிப்பவர்கள் எண்ணிக்கை குறைந்தபாடில்லை.

தற்போது உலகில் வேகமான பொருளாதார வளர்ச்சியை எட்டி வரும் நாடுகளாக இந்தியா சீனா விளங்குகிறது. ஆனால் அந் நாடுகளில் பசியால் வாடும் மக்கள் அதிகமாக உள்ளனர் .இது குறித்து ஐ.நா.வின் உணவு மற்றும் விவசாய அமைப்பு (எப்ஏஓ) தகவல் ஒன்றை வெளியிட்டுள்ளது. அதன் விபரம் வருமாறு,

கடந்த சில ஆண்டுக்கு முன் சத்தான [illegible] உண்ண வழியில்லாதர்களின் எண்ணிக்கை 1.02 கோடியாக இருந்தது.

தற்போது 92.[illegible] மக்கள் உள்ளதாக கணிக்கப்பட்டுள்ளது.அதில் ஆசியா, [illegible] ஆகிய நாடுகளைச் சேர்ந்தவர் [illegible]. அன்றாடத் தேவையான சத்தான உணவு கிடைக்கப் பெறாதவர்களில் 40 சதவீதம் பேர் இந்தியா, சீனாவைச் சேர்ந்தவர்கள். மேலும் பங்களாதேசம், இந்தோனேசியா, பாகிஸ்தான், கொங்கோ, எதியோப்பியா ஆகிய நாடுகளிலும் அதிகமானோர் வாழ்வதாக தெரியவந்துள்ளது.

உணவு விவசாய அமைப்பின் அதிகாரி ஒருவர் கூறுகையில், வளர்ந்து வரும் நாடுகளில் 1990, 92 இல் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்ய இயலாதவர்களாக இருந்த 20 சதவீதம் பேரை 2015 ஆம் ஆண்டில் 10 சதவீதமாகக் குறைக்கவும் வருமான வளர்ச்சி அதிகம் உள்ள நாடுகளின் உதவி யுடன் நடப்பு ஆண்டில் உணவுத் தேவையை பூர்த்தி செய்ய முடியாதவர்களின் எண்ணிக் கையில் 16 சதவீதத்தைக் குறைக்கவும் முயற்சிகள் எடுத்து வருவதாக தெரிவித்தார்.

அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம் காரணமாகவும் சமுதாயத்தில் அடித்தட்டில் வாழும் மக்கள் தங்களுக்குத் தேவையானவற்றை வாங்க முடிவதில்லை.

எனவே இதை கருத்திற் கொண்டு எப்ஏஓ இம்மாதம் 24 ஆம் திகதி உணவுப் பண்டங்களின் விலையேற்றம் குறித்து பேச்சு வார்த்தை நடத்தவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (ஸ்ரீ)


# கோப்பாய் கோமான் தலைவர் கு.வன்னியசிங்கம்

## 51 ஆவது நினைவுதின சிறப்பு விழா

தலைவர் : திரு.க.சின்னத்துரை (உப தலைவர், இலங்கைத் தமிழரசுக்கட்சி)
இடம் : வாழைக்குலைச்சங்க மண்டபம், நீர்வேலி.
காலம் : 18.09.2010 சனிக்கிழமை பி.பகல் 4 மணி

### நிகழ்ச்சிகள்

1. மங்கல விளக்கேற்றல்
2. உருவப்படத்திற்கு மாலையணிவித்து மலரஞ்சலி செலுத்துதல்
3. அக வணக்கம்
4. தமிழ்த்தாய் வாழ்த்து
5. தலைமையுரை
6. வரவேற்புரை-திரு க.தர்மலிங்கம் J.P அவர்கள்-தலைவர், வலி கிழக்கு மகளிர் கி.அ. சங்க சமாசம்

### நினைவுரையாற்றுவோர்:

1. திரு அ.க.த.கிருஸ்ணராஜா அவர்கள்-ஓய்வுபெற்ற கிராம சேவையாளர்
2. திரு .பொ.சிவசுப்பிரமணியம் அவர்கள்-தலைவர், தமிழ்தேசிய கூட்டமைப்பு (லண்டன் கிளை)
3. திரு அ.பரஞ்சோதி அவர்கள்-யாழ்.மாநகரசபை உறுப்பினர்
4. கௌரவ ஈ.சரவணபவன் அவர்கள்-பாராளுமன்ற உறுப்பினர்
5. திரு. சி.வி.கே.சிவஞானம் அவர்கள்-முன்னாள் ஆணையாளர், யாழ்.மாநகரசபை
6. திரு .இ.சங்கர் அவர்கள்-"சுதந்திரன்" முன்னாள் உதவி ஆசிரியர்
7. பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் அவர்கள்
8. கௌரவ சி.சிறீதரன் அவர்கள்-பாராளுமன்ற உறுப்பினர்
9. கௌரவ க.சுரேஸ் பிரேமச்சந்திரன்-பாராளுமன்ற உறுப்பினர்
10. கௌரவ மாவை சோ.சேனாதிராஜா-பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் பலர்

நன்றியுரை : திரு.சி.திருநாவுக்கரசு , செய்லாளர், வாழைக்குலைச் சங்கம், நீர்வேலி

*அபிமானிகள் ஆதரவாளர்கள் அனைவரும் திரண்டு வாரீர்*

இங்ஙனம்
விழாக் குழுவினர்
கோப்பாய் தொகுதி

(2480)

உயர்ந்த இலட்சியத்தை அடைய பல காதங்கள் பயணம் செல்லவேண்டும்.
~ கார்லைல்

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# யாழ்ப்பாணத்திலும் ஒரு நாலாம் மாடி

நேற்றைய தினம் யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் இயங்கும் தொழிற் திணைக்களத் திற்குச் (Labour Department) செல்ல வேண்டி யிருந்தது.

யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஆரியரத்னவின் சர்வோதயத்தில் நடந்த "கைகேயி படலம்" தொடர் பில் தொழிற்திணைக்களத்தின் உதவி ஆணையா ளரிடம் சில தகவல்களைப் பெறுவதற்காகவே அங்கு செல்லவேண்டியிருந்தது.

கீழ்த் தளங்களில் இருந்து ஒவ்வொரு படிகளாக ஏறி மூன்றாம் மாடிக்குச் சென்றாயிற்று.

மூன்றாம் மாடியில் ஓர் அன்பர் எதிர்கொண்டார். ஐயா! தொழிற்திணைக்களம் எங்கே இருக்கிறது...

தொழிற்திணைக்களமா? அது நாலாம் மாடியில் என்றார்.

ஓ! நாலாம் மாடியில் வைத்து விசாரணை என்று சொல்வார்களே! அது இது தானா என்று அவரிடம் கேட்டேன்.

அவர் மெல்லிய புன்சிரிப்போடு மாடி இறங்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

ஒரு மாதிரியாக நாலாம் மாடிக்கு ஏறிச் சென்றாகிவிட்டது. மேல்மூச்சு, கீழ் மூச்சு வாங்கிக் கொள்ள கதிரையில் உட்கார்ந்து கொண்டேன்.

அங்கிருந்த முகாமைத்துவ உதவியாளர் ஒருவர் என்ன? என்று கேட்டார். இப்போது பதிலளிக்க முடியாது என்று சைகையால் காட்டினேன்.

சில நேரங்கள் கழிந்தன. என்னிடம் வினவிய முகாமைத்துவ உதவியாளரிடம் சென்றேன்.

இது என்ன கொடுமை "லிவ்ற்" எதுவுமில்லை. வீரசிங்கம் மண்டபத்தின் நாலாம் மாடி என்பது உச்சிப்பிள்ளையார் கோவில் கொண்ட திருச்சி மலை உயரத்தில் உள்ளது. என்ன இது என்றேன்.

நாங்கள் என்ன செய்வது நான்கு மாடி ஏறி வருபவர்கள் மிகவும் களைத்துப் போவார்கள் என் பது நன்கு தெரியும். அதற்காக நான்காம் மாடியின் வாசலில் கதிரைகளை வைத்துள்ளோம். கூடவே குடி தண்ணீர். படி ஏறி வருகின்றவர்கள் கதிரையில் இருந்து இருதயத்தின் வேகமான துடிப்பிற்கு ஓய்வு கொடுத்து பின்னர் தண்ணீரைக் குடித்துவிட்டு கதைக்க வருவார்கள் என்றார்.

இறைவா! அந்த நாலாம் மாடியை விட இந்த நாலாம் மாடி மிகவும் மோசமானது அங்கு விசாரிப்ப தால் சீவன் போகும். இங்கோ படி ஏறினாலே சீவன் போகும் என்று முணுமுணுத்தேன்.

ஆமாம், அப்படி ஒருவருக்கு சீவன் போனது என்றார் அவர். என்ன?...

இருதய வியாதி உடைய ஒருவர் தொழிற் திணைக் களத்திற்கு மாடிப்படி ஏறி வந்தார். வந்தவர் நிரந்தர மாய் போய் விட்டார். அவரின் உடல் மாடிப்படிகளில் சரிந்தது மட்டும்தான் மிச்சம் என்றார்.

எப்படி இருக்கிறது நிலைமை. எத்தனையோ அமைச்சர்கள் வந்து போகிறார்கள். தமிழ் பாராளு மன்ற உறுப்பினர்களும் இருக்கிறார்கள். ஆனால் தொழிலாளர்களின் நலன்களைக் கவனிக்கும் ஓர் அமைப்பிடம் இருக்கக் கூடிய வசதியீனங்களை எவ ரும் கவனிக்கவில்லை. நிலைமை இதுவாயின் அந்த அமைப்பினால் தொழிலாளர்களின் நலன் களை எங்ஙனம் பெற்றுக் கொடுக்க முடியும்?

யாழ்ப்பாணம் பண்ணையில் சிறிலங்கா ரெலிக் கொம் நிறுவனத்திற்கு வடக்குப் பக்கமாக தொழிற் திணைக்களத்திற்கு சொந்தமான காணி இருக்கிறது. கட்டிடம் கட்டுவதற்குத்தான் எவரும் உதவவில்லை.

இறைவா நீதான் உதவ வேண்டும்.

அது சரி கைகேயி படலம் என்றால் என்ன என்று நீங்கள் கேட்பதும் எம் செவிகளை துளைக்கிறது.

முடிசூட்டப்படவேண்டிய இராமர்களுக்கு முடி சூட்டாமல் பரதர்களுக்கு முடிசூட்டுவதான் கைகேயி படலம்.

# சிறைச்சாலைகளில் இடநெருக்கடியே பெரும் பிரச்சினையாக உள்ளது

## அமைச்சர் டியூ குணசேகர தெரிவிப்பு

சிறைச்சாலைகளில் இட நெருக்கடியே தற்போது பெரும் பிரச்சினையாகியுள்ளதாகவும் 11 ஆயிரம் பேரை வைக்கக் கூடிய இடத்தில் 23 ஆயிரம் பேரை அடைத்து வைக்கும் நிலை ஏற்பட்டுள்ளதாகவும் புனர்வாழ்வு சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு அமைச்சர் டியூ குணசேகர தெரிவித்துள்ளார்.

இதுபற்றி அமைச்சர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில், போதைப்பொருள் குற்றச்செயலுடன் சம்பந்தப்பட்ட சிறைக் கைதிகளுக்குத் தனியான சிறைச்சாலையொன்றை ஆரம் பிக்கவுள்ளோம்.

சிறைச்சாலைகளில் தண்டனை அனுபவிக்கும் கைதிகளில் 40 வீதமானோர் போதைப்பொருள் பாவனையுடன் சம்பந்தப் பட்டவர்களாவர் அவர்களைத் தனியாகப் பிரித்து அவர்களுக் குப் புனர்வாழ்வளிப்பதே அரசாங்கத்தின் நோக்கமாகும்.

அத்துடன் சிறைச்சாலைகளின் குறைபாடுகளை நிவர்த் திக்கும் திட்டத்தின் கீழ் முதற்கட்டமாக வெலிக்கடை சிறைச் சாலையில் 50 மலசலகூடங்களை அமைக்க நடவடிக்கை எடுத்துள்ளோம். குழந்தைகளுடன் உள்ள பெண் சிறைக் கைதிகளுக்காக சகல வசதிகளையும் கொண்ட சிறைச்சாலை அமைக்கப்பட்டுள்ளது. மேலும் சிறைச்சாலைகளை புனர மைக்கும் செயற்திட்டங்கள் பல தற்போது முன்னெடுக்கப் பட்டுள்ளன. அத்துடன் சிறைக்கூடங்களுக்குள் இடம் பெறும் குற்றச் செயல்கள், தொலைபேசி பாவனைகள் பணப் புழக் கங்களைக் கட்டுப்படுத்துவதற்கான காத்திரமான வேலைத் திட்டங்களும் நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளன என்றார். (ஸ்ரீ)

# சர்வதேச விஞ்ஞான ஆய்வு நிலையத்தை இலங்கையில் நிறுவுவதற்கு தீர்மானம்

சர்வதேச விஞ்ஞான ஆராய்ச்சி மத்திய நிலைய மொன்றை இலங்கையில் நிறுவனத் தீர்மானித்துள்ளதாக தொழில்நுட்ப விஞ்ஞான ஆராய்ச்சித்துறை அமைச்சர் பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்துள்ளார்.

மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கு கருத்திட்டத்தின் கீழ் இலங்கையின் மின்வலு, கடல், வான், வர்த்தகத்துறைகளை விஞ்ஞானத்துறையுடன் இணைந்ததாக முன்னேற்றும் வகையில் மேற்படி சர்வதேச விஞ்ஞான ஆராய்ச்சி மத்திய நிலையம் இலங்கையில் அமைக்கப்படவுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

சர்வதேச மட்டத்திலுள்ள விஞ்ஞான ஆராய்ச்சித்துறை நிபுணர்களை இணைத்துக்கொண்டு துறைசார்ந்த புதிய கண்டுபிடிப்புக்களுடன் நாட்டின் பொருளாதாரத்தை மேம் படுத்தும் திட்டங்களை மேற்கொள்ளவும் கைத்தொழில் துறையை முன்னேற்றவும் இதன் மூலம் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அமைச்சர் மேலும் தெரிவித்துள் ளார். ஸ்ரீ



## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### கிருஷ்ணன், அர்ஜுனனுக்கு உபதேசம் கூறும் கீதைத் தேரில் 4 குதிரைகள் ஏன்?

கீதைத் தேரில் நான்கு வெள்ளைச் குதிரைகள் பூட்டப்பட்டு உள்ளன. அதற்கு உட்பொருள் உண்டு. கீதை கூறும் கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் ஆகிய மூன்றோடு இராஜயோகம் ஒன்றையும் நான்காவதாகச் சேர்த்து அந்த நான்கையும் கீதைத் தேரின் நான்கு குதிரைகளோடு ஒட்டிடுவதும் ஒரு மரபு.

வெள்ளை நிறம் தூய்மையைக் குறிக்கிறது. இயமம், நியமம் கூடிய மனத்தூய்மையுடன் யோக சாதனை புரிபவன் மட்டுமே ஒரு பரிபூரண மனிதனாகிய ஆத்மானுபவம் பெறமுடியும் என்பதைக் குறிப்பாக உணர்த்துகிறது.

# நவோதயா வாரநிகழ்வுகள்

(புன்னாலைக்கட்டுவன்)

யாழ். வயாவிளான் மத்திய மகாவித்தியாலயத்தின் நவோதயா வார நிகழ்வுகள் இன்று வெள்ளிக்கிழமை முதல் எதிர்வரும் 23ஆம் திகதி வரை வித்தியாலய அதிபர் தலை மையில் நடைபெறவுள்ளது.

இதில் இன்று வெள்ளிக்கிழமை ஆரம்ப நிகழ்வும் நாளை வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் சிரமதான நிகழ்வும நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை வித்தியாலய அபி விருத்தி சங்கத்தின் சிரமதானப்பணி நிகழ்வும் இடம்பெற வுள்ளன.

தொடர்ந்து 20ஆம் திகதி சமூகவிஞ்ஞான மன்றத்தின் நிகழ்வும் 21ஆம் திகதி சுகாதார மன்றத்தின் நிகழ்வும் 22ஆம் திகதி கணித, விஞ்ஞான மன்றத்தின் நிகழ்வும் 23ஆம் திகதி தமிழ் மன்றத்தின் நிகழ்வும் கண்காட்சியும் கலை நிகழ்வு களும் இடம்பெறவுள்ளன. மேலும் ஒவ்வொரு செயற் பாடுகளுக்கும் பொறுப்பாசிரியார்கள் நியமிக்கப்பட்டு அவர் களின் வழிநடத்தலின் கீழ் இச்செயற்பாடுகள் நடை பெறவுள் ளதாக வித்தியாலய அதிபர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-4-79)

# வெள்ளி நற்சிந்தனை 140

# பக்தியின் மொழி தமிழ்

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

ஊனமடைதல் என்பது மனித வாழ்க்கையில் பெரும் அவலத்தைத் தருவதாகும். பிறவிகளிலே உயர்ந்தது மானிடப் பிறவி. அதிலும் கூன், குருடு, செவிடு நீங்கிப் பிறத்தல் அரிது என ஔவையார் கூறியுள்ளார். சிலர் பிறக்கும் போதே சில உடலுறுப்புகளில் ஊனத்தோடு பிறக்கின்றனர். அவ்வாறு பிறந்த பலர் இன்றைய மருத்துவ வசதிகளால் அவ்வூனம் நீங்கப் பெறுகின்றனர். அன்று நவீன மருத்துவ வசதிகளற்ற காலத்தில் பலர் உடல் ஊனத்தோடு வாழ்நாள் முழுவதுமே துன்பப்பட்டனர். சிலருக்குப் பிறந்த பின்னர் ஏற்படுகின்ற நோய்களாலும் ஊனம் ஏற்படுகின்றது. செவிப்புலன், கட்புலன், வாய்மொழி என்பவற்றை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. கட்புலனை இடையிலே இழந்த அனுபவம் சுந்தரருக்கு உண்டு. அதனை அவர் பல பாடல்களிலே குறிப்பிட்டுள்ளார்.


இறைவன் உடல் ஊனம் தரும் நோய்களை நீக்கும் ஆற்றல் பெற்றவன். திருக்கோயில் வழிபாடு நோய் நீக்கும் மருந்தாகும். சிவன் கோயிலில் வழங்கப்படும் திருநீறு நோய்தீர்க்கும் அருமருந்தாகும். சம்பந்தர் மந்திரமாவது நீறு எனச் சிறப்பித்துப் பாடியுள்ளார். அப்பருடைய சூலை நோயையும் கூன் பாண்டியனுடைய வெப்புநோயையும் திருநீறே போக்கியது. இன்றும் கோயில்களிலே வழங்கப் படும் பிரசாதம் மருந்து என்று குறிப்பிடப்படுகின்றது. திருக்கேதீஸ்வரத்தில் உறையும் இறைவனும் ஊனமுற்ற அடியார்க்கு அருள் செய்வான் எனச் சுந்தரர் பாடியுள்ளார்.

மாதோட்டம் நகரைச் சுற்றியுள்ள கடல் பரந்திருப்பது சுந்தரர் பார்வையில் பரவசத்தை ஏற்படுத்துகிறது. வானத் துறு மலியுங்கடல் என்ற தொடர் இதனை விளக்கியுள்ளது. இயற்கையான மழைநீரால் கடலில் நீர்வளம் ஏற்படுகின்றது. அதே நீர்வளம் மீண்டும் ஆவியாகி மேலே சென்று மழை முகில்களாகி பொழிகிறது. எனவே இயற்கை வளத்தில் கடலின் பங்களிப்பு பெரியது. பெய்கின்ற மழை நீரை யெல்லாம் தன்னகத்தே கொண்டு நீர்வளம் நல்கும் தெய்வமாகவும் கடல் போற்றப்படுகிறது.

திருக்கேதீச்சரத்திலே அருள் பாலிக்கும் இறைவியைச் சுந்தரர் பானத்தூறும் மொழியாள் எனச் சிறப்பாகக் குறிப்பிட்டுள்ளார். அம்மையின் திருவாய் மொழி அமிர்தம் போல மிகவும் இனிமையானது. உலகத்து மக்கள் எல்லோருக்கும் தாய்மொழியே முதலில் செவிமடுக்கும் மொழியாகும். ஒரு குழந்தைக்கு பேச்சுப் பயிற்சியை முதலில் தாயே வழங்குகிறாள். அதனாலே குழந்தைபேசும் மொழி தாய் மொழி என உலகெங்குமே தனித்துவமாகச் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளது. இறைவி எல்லோருக்குமே தாயாக இருப்பவள். அவளுடைய மொழி எல்லோருக்குமே அமுதம் போன்றது. இத்தகைய பெருந்தேவியுடன் வீற்றிருக்கும் இறைவனுடைய திருக்கோல அழகிலே ஒரு சிறப்பான அணிகலனைப்பற்றிச் சுந்தரர் குறிப்பிட்டுள்ளார். ஏனத்து எயிறணிந்தான் என்னும் தொடர் இதற்குச் சான்றாக உள்ளது. பன்றியின் கூரான பற்களைக் கோர்த்த மாலையை இறைவன் அணிந்திருக்கிறான். அணி கலன்களின் அமைப்புப் பற்றிய சிறப்பானதொரு குறிப் பாகச் சுந்தரர் இதனைக் கூறி இறைவன் திருக்கோலத்தை நாமும் காண வைக்கிறார்.

**ஊனத்துறு நோய்களடி யார்மேலொழித் தருளி**
**வானத்துறு மலியுங்கடல் மாதோட்டநன் னகரிற்**
**பானத்துறு மொழியாளொடு பாலாவியின் கரைமேல்**
**ஏனத்தெயி றணிந்தான்றிருக் கேதீச்சரத்தானே**

# காஷ்மீருக்கு அனைத்துக்கட்சிக்குழுவை அனுப்ப இந்திய மத்திய அரசு முடிவு



இந்தியாவின் நிர்வாகத்துக்கு உட்பட்ட காஷ்மீர் பகுதிக்கு அனைத்துக் கட்சி குழுவை அனுப்புவதற்கு இந்தியாவின் மத்திய அரசு முடிவெடுத்துள்ளது. அங்கு தற்போது நிலவும் கள நிலமையை ஆராயும் விதமாகவே அனைத்துக் கட்சிக் குழுவினர் காஷ்மீர் பகுதிக்கான விஜயத்தினை மேற்கொள்ளவுள்ளனர்.

இந்திய உள்துறை அமைச்சகமும் ஜம்மு காஷ்மீர் மாநில அரசும் இதற்கான ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளன.

கடந்த சில வாரங்களாக ஜம்மு காஷ்மீர் பகுதியில் பாதுகாப்பு படையினர் மற்றும் பொலிசாருடன் ஆர்ப்பாட்டக்காரர்கள் மோதி வருகின்றனர்.

இந்த மோதல்கள் காரண மாக கடந்த மூன்று மாதங்க ளில் எண்பது பேருக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்துள்ளனர். இதையடுத்து மாநிலத்தின் பல பகுதிகளில் ஊரட ங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

ஜம்மு காஷ்மீரில் நிலவி வரும் பதற்ற நிலையை முடிவுக்கு கொண்டு வரும் முகமாக பிரதமர் மன்மோ கன்சிங் தலைமையில் புதுடில்லியில் அனைத்துக் கட்சிக் கூட்டம் புதன்கிழமை நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் ஆளும் கூட்டணிக்கு தலைமை வகிக்கும் காங்கிரஸ் கட்சி, பிரதான எதிர்கட்சியான பாரதீய ஜனதா கட்சி, இடது சாரிகள் மற்றும் காஷ்மீரில் ஆட்சியில் இருக்கும் தேசிய மாநாட்டுக் கட்சி மற்றும் எதிர்கட்சியான மக்கள் ஜனநாயகக் கட்சி உட்பட பல கட்சிகள் பங்கு பெற்றன.

காஷ்மீருக்கு அனைத்துக் கட்சி குழுவினர் செல்ல இந்தக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டாலும் ஆயுதப் படையினருக்கு சிறப்பு அதிகாரங்களை வழங்கும் சட்டத்தை திரும்பப் பெற்றுக் கொள்வது தொடர்பாகவோ அதை தளர்த்துவது தொடர்பாகவோ முடிவு கள் ஏதும் எட்டப்படவில்லை.

இந்தியாவின் அரசியல் அமைப்புக்கு உட் பட்டு உள்ளக பேச்சு வார்த்தைகள் நடை பெற வேண்டும் என்பதில் அனைத்துக் கட் சிக் கூட்டத்தில் ஒருமித்த கருத்து நிலவியது.

காஷ்மீருக்கான விஜயம் ஒன்றினை மேற் கொள்ளவுள்ள அனைத்துக் கட்சி உறுப்பினர்கள் அங்கு சமூ கத்தின் பல மட்டங்களில் உள்ள மக்களையும் சந்தித்து உரையாடி கருத்துக்களை பெறவுள்ளனர்.

இதேவேளை அனைத்துக் கட்சி குழுவி னரின் காஷ்மீர் பகுதிக்கான விஜயத்துக் கான திகதி இன்னமும் முடிவு செய்யப்படவில்லை. ஶ்ரீ

# அமெரிக்க மாணவர்களுக்கு ஒபாமா அறிவுரை

உலகபோட்டியை சமாளிக்க அமெரிக்க மாணவர்கள் கடும் போட்டி போட்டு கொண்டு படிக்க வேண்டும் என்று ஜனாதிபதி ஒபாமா தெரிவித்துள்ளார்.

அமெரிக்காவின் பென்சில்வேனியா மாகாணம் பிலடெல்பியாவில் உள்ள பள்ளி ஒன்றில் மாணவர்கள் மத்தியில் உரையாற்றிய ஒபாமா, கல்வி கற்றல் , வேலை வாய்ப்பு பெறுதலில் இந்திய சீன மாணவர்களின் போட்டியைச் சமாளிக்கும் வகையில் அமெரிக்க பள்ளி மாணவர்கள் தெளிவாக கற்க வேண்டும். இதன் மூலம் நீங்களும் மேன்மை பெறுங்கள். அமெரிக்காவின் மேன்மையை யும் நிலை நிறுத்துங்கள் என ஒபாமா அறிவுரை கூறியுள்ளார்.

மேலும் இந்த போட்டியான உலகை சமா ளிக்க ஒவ்வொரு மாணவர்களும் போட்டிக் போட்டி கொண்டு படிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தியுள்ளார். ஶ்ரீ

# மரண அறிவித்தல்கள்

## திருமதி செல்வரத்தினம் திருநாவுக்கரசு

### (இணுவில் கிழக்கு)



இணுவில் கிழக்கு, கே.கே.எஸ் வீதி, ''திருஸ்தானை'' பிறப் பிடமாகவும் கொழும்பு, வெள்ளவத்தையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி செல்வரத்தினம் திருநாவுக்கரசு கடந்த (14.09.2010) செவ்வாய்க்கிழமை சிவபத மடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்பையா திருநாவுக்கரசுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற நல்லதம்பி மாணிக்கம் தம்பதியரின் அருமை மகளும் காலஞ் சென்ற சுப்பையா -அபிராமிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும் காலஞ் சென்றவர்களான அன்னலிங்கம், திருமதி சிவக்கொழுந்து, இராசலிங்கம் , தர்மலிங்கம் ஆகியோரின் அருமை சகோ தரியும் காலஞ்சென்றவர்களான முருகையா (ஆசிரியர்),திருமதி தெய்வானைப்பிள்ளை இரத்தினசபாபதி ஆகியோரின் அன்பு மைத்துனியும் காலஞ்சென்ற கதிரவேலு , திருமதி யோகம்மா ஆகியோரின்அன்புச் சகலியும் புரந்திரதாசன் இளைப்பாறிய கிராம சேவையாளர், இணுவில் (Canada) , ஜெகதீஸ்வரன் (Ceican Travels-Canada),காலஞ்சென்ற செந்தில்வாசன், சர்வசொரூபி ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிவமலர் (Canada),கமலாதேவி (Ceican Travels-Canada ) சட்டத்தரணி குமாரசாமி சுப்பிரமணியம் (Director ,SJMS Associates,Chartered Accountant,Colombo) ஆகியோரின் அன்பு மாமியாரும் கனடாவை சேர்ந்த தவகோகுலன், அனந்தன், தர்சிகா, கவின் மற்றும் அபிராமி, விசாகன், பவித் திரா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் (16.09.2010) வியாழக்கிழமை காலை 9 மணி முதல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு பூதவுடல் கல்கிசை பொது மயானத்தில் தகனஞ்செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

30 , நெல்சன் பிளேஸ் ,
கொழும்பு-06
தொ.பே.0722703065

சி/1056

தகவல்
மக்கள் , மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

## கந்தையா குமாரசாமி



சரசாலை தெற்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் ,சரவணையை வசிப்பிடமாகவும், இந்தியா, மடிப்பாக்கத்தில் வசித்து வந்தவருமான கந்தையா குமாரசாமி (R.V.D.B உடவளவை) கடந்த (14.09.2010) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா-சின்னம்மா தம்பதியரின் கனிஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்- சின்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் திலகவதியின் அன்புக்கணவரும் இராசம்மா,காலஞ்சென்றவர்களான தியாகராசா, துரைமணி ஆகியோரின் அன்புச் சகோதரனும் காலஞ்சென்றவர்களான சிவானந்தன், செல்லையா,தியாகராசா (அளவெட்டி), விஜயலட்சுமி (சரவணை)மற்றும் சிவராசா (ஜேர்மனி), வேலாயுதபிள்ளை (இடைக்காடு), சண்முகரட்ணம் (கொக்குவில்) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ராகுலனின் (லண்டன்) அன்புச் சித்தப்பாவும் சத்தியபாமா (இந்தியா), சத்தியசங்கர், அனுஷா(கொழும்பு), தயாளன் (அவுஸ்திரேலியா),கவிதரன் (பிரான்ஸ்)ஆகியோரின் அன்பு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (14.09.2010) செவ்வாய்க்கிழமை தென்னிந்தியாவில் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்பட்டது.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

நா.சண்முகரத்தினம்
பழைய தபாற்கந்தோர் ஒழுங்கை,
கொக்குவில்.
021 3214320

சி/1057

தகவல்
திலகவதி(மனைவி)
இராசம்மா (சகோதரி)
0919894022970

# நடிகை சீதா இரண்டாவது திருமணம்; தொலைக்காட்சி நடிகரை மணந்தார்



ஆண்பாவம் என்ற படத்தில் அறிமுகமானவர் சீதா. தமிழ்-தெலுங்கு ஆகிய இரண்டு மொழிகளிலும் பல படங்களில் கதாநாயகியாக நடித்தார். பார்த்தீபன் கதாநாயகனாக நடித்து முதன்முதலாக இயக்கிய புதிய பாதை படத்தில் சீதா கதாநாயகியாக நடித்தார். அப்போது சீதாவுக்கும் பார்த்தீபனுக்கும் இடையே காதல் மலர்ந்தது. இந்த காதலுக்கு சீதா குடும்பத்தினர் எதிர்ப்பு தெரிவத்தார்கள்.

அதனால் சீதா வீட்டை விட்டு வெளி யேறினார். சீதாவும் பார்த்தீபனும் இரகசிய திருமணம் செய்து கொண்டார்கள். 20 வருடங்களுக்கு முன்பு இந்தத் திருமணம் நடைபெற்றது. சீதா-பார்த்தீபன் தம்பதிக்கு அபிநயா, கீர்த்தனா என்ற இரண்டு மகள்களும் ராதாகிருஷ்ணன் என்ற வளர்ப்பு மகனும் இருக்கிறார்கள்.


திருமணமாகி குழந்தைகள் பிறந்த சில வருடங்களிலேயே சீதாவுக்கும் பார்த்தீபனுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது.இருவரும் குடும்பநல நீதி மன்றம் மூலம் விவாகரத்து செய்து கொண்டார்கள். விவாகரத்துக்குப் பின் சீதா பெற்றோர்களுடன் வாழ்ந்தார். அவருடன் மூத்தமகள் அபிநயா மட்டும் இருக்கிறார். இளையமகள் கீர்த்தனாவும் வளர்ப்பு மகன் ராதாகிருஷ்ணனும் பார்த்தீபனுடன் இருக்கிறார்கள்.

கதாநாயகி வாய்ப்பு போன பின் சீதா டி.வி தொடர்களில் நடிக்க ஆரம்பித்தார். திரைப்படங்களில் அம்மா வேடங்களில் நடித்து வருகிறார். இந்த நிலையில் சீதாவுக்கும் டி.வி. நடிகர் சதீசுக்கும் இடையே காதல் ஏற்பட்டது. இருவரும் நெருங்கி பழகினார்கள்.

அதன்படி சீதாவும் சதீசும் இரகசிய திருமணம் செய்து கொண்டார்கள். சென்னை சாலி கிராமத்தில் உள்ள சீதா வீட்டில் அவருடைய பெற்றோர்கள் முன்னிலையில் இந்த திருமணம் நடந்தது. ஶ்ரீ

# தேசிய திரைப்பட விருதுகள் அறிவிப்பு சிறந்த நடிகராக அமிதாப்பச்சன்

## 'பசங்க' தமிழ் படத்துக்கு 3 விருதுகள்



2009 ஆம் ஆண்டிற்கான இந்திய தேசிய திரைப்பட விருதுகள் நேற்று முன்தினம் அறிவிக்கப்பட்டன. அகில இந்திய அளவில் சிறந்த நடிகராக அமிதாப்பச்சன் தேர்ந்து எடுக்கப்பட்டுள்ளார். ''பசங்க'' படம் தமிழில் சிறந்த படம் உட்பட 3 விருதுகளை வென்றுள்ளது. மம்முட்டி நடித்த மலையாள [illegible] ''குட்டி ஷ்ராங்க'', தேசிய அளவில் சிறந்த படமாக தேர்ந்து எடுக்கப்பட்டு உள்ளது.

''பா'' என்ற இந்தி படத்தில் சிறப்பாக நடித்ததற்காக நடிகர் அமிதாப்பச்சன் அகில இந்திய அளவில் சிறந்த நடிகருக்கான விருது பெறுகிறார். இளம் வயது சிறுவன் ஒருவன், முதுமை தோற்றத்தில் பாதிக்கப்பட்டு, புதுமையான மரபணு நோயால் அவதிப்படுபவராக அவர் நடித்து இருந்தார். இந்தப் படத்தை பால்கி என்ற தமிழ் இயக்குநர் இயக்கி இருந்தார். அகில இந்திய அளவில் சிறந்த நடிகர் விருதை அமிதாப்பச்சன் பெறுவது இது மூன்றாவது முறையாகும்.

சிறந்த தமிழ் படமாக ''பசங் க'' படம் தேர்ந்து எடுக்கப்பட்டு உள்ளது. இந்தப் படத்தில் நடித்த ஜீவன் மற்றும் அன்புக்கரசு ஆகிய இரு சிறுவர்களும், அகில இந்திய அளவில் சிறந்த குழந்தை நட்சத்திரங்களுக்கான வெள்ளித் தாமரை விருதும், தலா ரூ.50 ஆயிரம் ரொக்கப் பரிசும் பெறுவார்கள். இயக்குநர் பாண்டியராஜ் சிறந்த வசன கர்த்தாவுக்கான அகில இந்திய விருதையும் பெறுகிறார்.

நடிகர்கள் அமீர் கான், மாதவன் நடித்த ''3 இடியட்ஸ்'' இந்தி படம், அகில இந்திய அளவில் சிறந்த பொழுது போக்கு படமாக தேர்ந்து எடுக்கப் பட்டு உள்ளது.

இசையமைப்பாளர் இளைய ராஜா ''பழசிராஜா'' என்ற படத்தில் சிறந்த பின்ன ணி இசை அமைத்ததற்காக தேசிய விருது பெறுகிறார். ஶ்ரீ

# தேசிய மட்ட ஒலிம்பியாட் போட்டிக்குத் தெரிவானோர்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்வி வலயப் பயிற்சி நிலையத்தில் நடைபெற்ற தரம் 6 கணித விஞ்ஞான ஒலிம்பியாட் பயிற்சி நெறியில் கலந்து கொண்ட மாணவர்களில் மாகாண மட்டப் பரீட்சையில் தோற்றி தேசிய மட்டப் பரீட்சைக்குத் தெரிவானவர்களுக்கான பரீட்சை எதிர்வரும் 20 ஆம் திகதி மத்திய கல்வி அமைச்சில் நடைபெறும் என யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின்விபரம் வருமாறு,

அலெக்சாண்டர் கஸ்ரோ டிரோன் (சென். பற்றிக்ஸ் கல்லூரி), இராஜசேகரன் தட்சாயினி (வேம்படி மகளிர் கல்லூரி), பரமானந்தன் கஸ்தூரி (வேம்படி மகளிர் கல்லூரி), புஷ்பாகரன் பிருந்தாபன் (விக்னேஸ்வராக் கல்லூரி கரவெட்டி),

பவளசீலன் சர்மிகன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), முருகையா பிருந்தாபன் (இடைக்காடு மகா வித்தியாலயம், அச்சுவேலி), புலேந்திரன் தயாபரன் (ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை),

செல்வராஜா டசிகரன் (ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை),யோகலிங்கம் ரகீஸன் (நெல்லியடி மகா வித்தியாலயம்), விஜேந்திரன் அனுசியந்தன் (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி), சிவகுமார் லக்சிகா (நெல்லியடி மகா வித்தியாலயம்). (ச)

## பணம் கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு வந்த தனியார் சொகுசு பஸ் ஒன்றிலிருந்து ஒரு தொகைப் பணம் மீட்கப்பட்டு சித்தன் கேணி இளைஞர் மன்றத்தில் ஒப்படைக்கப் பட்டுள்ளது.

உரியவர்கள் ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## சாரணர்களுக்கான அணித் தலைவர் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

சாரணர்களுக்கான அணித்தலைவர் பயிற்சி இன்று பிற்பகல் 3 மணிக்கு கொக்குவில் இந்துக்கல்லூரியில் ஆரம்பமாகின்றது.

இப்பயிற்சி நாளையும், நாளை மறுதினமும் தொடர்ந்து நடைபெறுமென உதவி மாவட்ட சாரண ஆணையாளர் செ. தேவரஞ்சன் அறிவித்துள்ளார். (ச-3)

## தரம் 11 மாணவர்களுக்கு முன்னோடிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் ஜி.ரி.சட். அனுசரணையுடன் தரம் 11 இல் கற்கும் மாணவர்களுக்கான முன்னோடிப் பரீட்சை எதிர்வரும் 19 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை விஞ்ஞானம்,கணிதம், வரலாறு ஆகிய பாடங்களுக்கு நடைபெறவுள்ளது.

19 ஆம் திகதி நடைபெறவுள்ள விஞ்ஞானம் பகுதி1,2, கணிதம் பகுதி 2 பாடங்களுக்கான முன்னோடிப் பரீட்சையும் வினாத்தாள் பிரதி ஒன்று பாடசாலைகளுக்கு யாழ்.வலயக் கல்வி அலுவலக கல்வி அபிவிருத்திப் பகுதியில் வைத்துப் பரீட்சை தினம் அன்று காலை வழங்கப்படவுள்ளது.

மேற்படி வினாத்தாள் பிரதியைப் பெற்று பிரதி செய்து மேற்படி பயிற்சிப் பரீட்சையை நடத்து மாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி அ.வேதநாயகம் அறிவித்துள்ளார்.(ச)

## கொமர்ஷல் லீசிங் அலுவலகம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

கொமர்ஷல் லீசிங் நிறுவனத்தின் புதிய கிளை இன்று காலை 10.30 மணிக்கு யாழ்ப்பாணம் மின்சார நிலைய வீதியில் திறந்து வைக்கப்படுகின்றது.

பிரதம விருந்தினராக கொமர்ஷல் குழுமத்தின் நிர்வாக இயக்குனர் கபில ஜெயவர்த்தனவினால் இவ் அலுவலகம் திறந்து வைக்கப்படுகிறது.

இக்கிளையின் மூலம் குத்தகை சேவை (லீசிங்) வாடகைக் கொள்வனவு (ஹயர் பேர்சஸ்) வர்த்தக நிதியுதவிகள் (பெக்டரிங்) போன்ற சேவைகளை வாடிக்கையாளர்கள் பெற்றுக்கொள்ளமுடியும். (ச-3)

## வன்னிப் பாடசாலைகளுக்கு ஆசிரிய இடமாற்றம் வழங்கப்படும்

### மாகாணக் கல்விப் பணிப்பாளர் அறிவிப்பு

வன்னி கல்வி வலயங்களுக்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்றுவதற்கு விரும்பும் ஏனைய மாவட்ட ஆசிரியர்களுக்கு இடமாற்றம் அளிக்கப்படும் என வடக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தருகையில்,

வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்துக்குட்பட்ட யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார் மாவட்ட பாடசாலைகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள் கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்ட பாடசாலைகளில் கடமையாற விரும்பி விண்ணப்பங்களை சமர்ப்பித்தால் சாதகமாக பரிசீலிக்கப்படும்.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மீள்குடியமரும் ஆசிரியர்கள் ஏற்கனவே விண்ணப்பங்களை அனுப்பிவருகின்றனர்.

இவர்களது கோரிக்கைக்கு அனுமதி வழங்கப்பட்டு கிளிநொச்சி, முல்லைத்தீவு, துணுக்காய் கல்வி வலயங்களுக்கு அனுப்பி வைக் கப்படுகின்றது.

குறித்த வலயக் கல்வி அலுவலகங்கள் ஆசிரியர்களுக்குரிய பாடசாலைகளைத் தெரிவு செய்து வழங்கும் என வடக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்தார். (ச-5)

### தென்மராட்சிப் பிரதேசத்தில்

## திருட்டு மின்சாரம் பெற்ற 25 பேர் நேற்று வசமாக மாட்டிக்கொண்டனர்

(யாழ்ப்பாணம்)

சாவகச்சேரி மின் பாவனையாளர் அலுவலகமும், சாவகச்சேரி பொலிஸ் விசேட பிரிவினரும் இணைந்து தென்மராட்சிப் பகுதியில் மேற்கொண்ட தேடுதலில் திருட்டு மின்சாரம் பெற்ற 25 பேர் வசமாக மாட்டிக்கொண்டனர்.

நேற்று அதிகாலை 2 மணி தொடக்கம் கொடிகாமம் தாவளை இயற்றலை, வரணி, மட்டுவில் மற்றும் தவசிக்குளம் ஆகிய பகுதிகளில் மேற்கொண்ட தேடுதலின் போதே 25 பேர் மாட்டிக்கொண்டனர். இவர்கள் 25 பேரும் நேற்றுக்காலை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு குற்றப்பணம் செலுத்திய பின் விடுதலை செய்யப்பட்டனர்.

மின்சாரசபைக்கு மூன்றுஇலட்சத்து 7 ஆயிரம் ரூபாவும் தலா 10 ஆயிரம் வீதம் நீதிமன்றத்துக்கு தண்டப்பணம் செலுத்திய பின் அவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர்.


திருட்டு மின்சாரம் பெறுவோரை பிடிக்கும் அதிரடி நடவடிக்கை சாவகச்சேரி பிரதேச மின் பொறியியலாளர் தலைமையில் பொலிஸாருடன் இணைந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

### ரெய்னா, விஜய் அதிரடி

## வயம்ப அணியை வீழ்த்தியது சென்னை சுப்பர் கிங்ஸ் அணி

(செஞ்சூரியன்)

சுரேஸ் ரெய்னா, முரளி விஜயின் அதிரடியான துடுப்பாட்டத்தின் மூலம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி 97 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வயம்ப அணியை வீழ்த்தியது.



தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் சம்பியன் லீக் இருபது-20 கிரிக்கெட் தொடரில் நேற்று முன்தினம் நடைபெற்ற லீக் சுற்றின் 9-வது போட்டியின் ஏ பிரிவில் இந்தியாவின் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி இலங்கையின் வயம்ப அணியும் மோதின.

இப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்றவயம்ப அணித்தலைவர் முபாரக் முதலில் களத்தடுப்பைத் தீர்மானித் தார்.

இதனடிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென்னை சுப்பர் கிங்ஸ் அணி ரெய்னா-விஜய் ஜோடியின் அதிரடியில் 20 ஓவர்கள் நிறைவில் 3 விக்கெட்டுக்களையிழந்து 200 ஓட்டங்களைக் குவித்தது.

இதில் சுரேஸ் ரெய்னா 44 பந்துகளில் (6பவுண்டரிகள், 6 சிக்ஸர்கள் உட்பட) 87 ஓட்டங்களையும் முரளிவிஜய் 46 பந்துகளில் (9 பவுண்டரிகள், ஒரு சிக்ஸ்ர் உட்பட) 68 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்து வீச்சில் வெலகெதர 2 விக்கெட்டுக்களையும் மெண்டிஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினார்.

பதிலுக்கு 20 ஓவர்களில் 201 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இமாலய இலக்குடன் துடுப்பெடுத்தாடிய வயம்ப அணி 17.1 ஓவர்களில் 103 ஓட்டங்களை மாத்திரம் எடுத்துச் சகல விக்கெட்டுக்களையுமிழந்தது 97 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது.

இதில் கருணாநாயக்க 25, மெண்டிஸ் 15, உடான 13 ஓட்டங்களையும் எடுத்தனர். பந்து வீச்சில் அஸ்வின் 4 விக்கெட்டுக்களையும் அல்பி மோர்கல் 3 விக்கெட்டுக்களை யும் பொல்லிங்கர், பாலாஜி, முரளிதரன் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.

இவ்வெற்றியின் மூலம் சென்னை சுப்பர் கிங்ஸ் அணி தான் விளையாடிய இரண்டு போட்டிகளில் வெற்றி பெற்றுத் தொடரில் 4 புள்ளிகளைப் பதிவு செய்தது.

இப் போட்டியின் ஆட்ட நாயகனாகச் சென்னை சுப்பர் கிங்ஸ்அணியின் சுரேஸ் ரெய்னா தெரிவானார்.

## புங்குடுதீவுப் பிரதேசத்துக்கு இன்றுமுதல் 24 மணி நேர மின் விநியோகம் ஆரம்பம்

(புங்குடுதீவு)

புங்குடுதீவுப் பிரதேசத்திற்கு இன்றுமுதல் 24 மணிநேர மின்சாரம் வழங்கப்படவுள்ளது. நீர்மின் தொழில்நுட்பத்தை இலங்கையில் அறிமுகப்படுத்தி வரும் நீர்மின்சாரத்தின் தந்தை என அழைக்கப்பட்டவரான டீ.ஜே.விமல சுரேந்திராவின் 136ஆவது பிறந்த தினத்தை முன்னிட்டு இன்று 24 மணிநேர மின்சாரம் வழங்கப்படுகின்றது.

இது தொடர்பில் இலங்கை மின்சார சபையின் உதவிப் பொதுமுகாமையாளர் (வடக்கு) வெளியிட்ட செய்திக் குறிப்பு வருமாறு,

நீர்மின் தொழில்நுட்பத்தை இலங்கைக்கு அறிமுகப்படுத்தியவரும் நீர்மின்சாரத்தின் தந்தை என அழைக்கப்படுபவருமான டீ.ஜே. விமலசுரேந்திராவின் (பொறியியலாளர்) 136 ஆவது பிறந்த தினத்தை இன்று இலங்கை மின்சார சபையின் சகல அலுவலகங்களிலும் விமரிசையாகக் கொண்டாடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனைக் குறிக்கும் வகையில் இலங்கை முழுவதும் 99 புதிய மின்விநியோகத் திட்டங்கள் ஆரம்பிக்கப்பட இருக்கும் என இவ் வைபவங்கள் வட மாகாணத்தில் உள்ள சகல மின்சார சபை அலுவலகங்களிலும் கொண்டாடப்படுவதோடு 18 மின்விநியோகத் திட்டங்களும் ஆரம்பித்து வைக்கப்படவிருக்கின்றன.

வவுனியா, மன்னார் மாவட்ட மின்விநியோகத் திட்டங்கள்; அமைச்சர் றிசாட் பதியுதீன், கிளிநொச்சி மாவட்ட மின்விநியோகத் திட்டங்கள்; நாடாளுமன்ற உறுப்பினரும் குழுக்களின் தலைவருமான ம.சந்திரகுமார், யாழ்.மாவட்ட மின்விநியோகத் திட்டங்கள்; பாரம்பரிய கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சரான கே. என்.டக்ளஸ்தேவானந்தா ஆகியோரால் ஆரம்பிக்கப்படவிருக்கின்றன.

இந்த வகையில் கோப்பாய் கைட்டிப்புலம் வீதி மின்விநியோகத் திட்டம் காலை 10 மணிக்கும் மறுவன்புலோ வடக்கு மின்விநியோகத் திட்டம் பகல் 12.30 மணிக்கும் புங்குடுதீவு மின்விநியோகத் திட்டத்தை மாலை 4 மணிக்கும் கே.என்.டக்ளஸ் தேவானந்தா ஆரம்பித்து வைக்கின்றார்.

புங்குடுதீவு மின் பாவனையாளர்கள் இன்று தொடக்கம் சுன்னாகம் மின்இணைப்புடன் தொடர்புபடுத்தப்படுவதனால் அவர்களுக்குத் தொடர்ந்தும் மின்சாரம் கிடைக்கும்.

மேலும் காலை 9 மணிக்கு யாழ்.மாவட்டத்திலுள்ள சகல மின்சார சபைக் காரியாலயங்களிலும் டீ.ஜே.விமலசுரேந்திரா அவர்களின் பிறந்த தின நிகழ்வுகள் நடைபெறும் என்றுள்ளது. (ச)

## வல்வெட்டி கடற் தொழிலாளர் கூ. சங்க அலுவலகம் மீது இனந்தெரியாதோர் தாக்குதல்



வல்வெட்டித்துறை ரேவடி கடற்கரையில் அமைந்துள்ள கடற் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம் அலுவலகம் நேற்று முன்தினம் இரவு இனம் தெரியாதோரால் சேதமாக்கப்பட்டதுடன் இங்கிருந்த தளபாடங்களும் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளன.

கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற வடமராட்சி கடற்தொழிலாளர் கூட்டறவுச் சங்க சமாசத்தில் நடைபெற்ற கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானங்களினால் ஏற்பட்ட கருத்து முரண் பாடுகளே இதற்கு காரணமாக இருக்கலாம் என தெரிவிக்கப்பட்டது. (எ-63)

## தமிழ் கட்சி...

என வினவியபோது, தமிழ்ச் சமூகத்தில் உள்ள புத்திஜீவிகளால் சில முன் மொழிவுகளை உள்ளடக்கிய தீர்வு யோசனை ஒன்று வரையப் பட்டுள்ளது.

இதனை அரங்கத்தில் உள்ள கட்சிகளும் ஆராயவுள்ளன. அதன் பின்னர் அரசாங்கத் திற்கு வழங்குவதற்கான தீர்வு யோசனையை நாங்கள் தயாரிப்போம். இதற்கு இன்னும் சில மாதம் தேவைப்படும் எனவும் அவர் கூறி னார். (ச-5)

## யாழ்தேவியில்...

விஸ்மித என்ற (வயது 16) ஜாஎல ஜயந்தி வித்தி யாலயத்தில் தரம் 11 இல் கற்கும் மாணவனே உயிரிழந்தவராவார்.

மாணவனது சடலம் கம்பகா வைத்தியசா லையின்பிரேத அறையில் வைக்கப்பட்டுள் ளதோடு பொலிஸார் விசாரணைகளை ஆரம் பித்துள்ளதாகவும் வைத்தியசாலை வட்டாரங் களிலிருந்து தெரியவருகிறது. (ச-5)

## நாடாளு...

யினால் நியமிக்கப்பட்டிருக்கும்.

பல வருட கால இடைவெளியின்பின் உத்தியோகஸ்தர்கள் தமது முறைப்பாடுகளை யும் மனக்குறைகளையும் வெளிப்படுத்த முடியும்.

நாடாளுமன்றச் சபையை சட்டப்பூர்வமாக ஸ்தாபிப்பதற்கான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும்.

ஐந்து பேர் கொண்ட இச்சபைக்கு பிரதமரும் எதிர்க்கட்சித் தலை வரும் தமது பிரதிநிதிகளை நியமித்தவுடன் 2011 ஆம் ஆண்டிலிருந்து இச்சபை செயற்படத் தொடங்கும் என அவர் கூறினார். (ச-5)

## ரணில் நியமித்தார்...

ஆணையாளர் மற்றும் மனித உரிமைகள் ஆணைக்குழு, பொதுச் சேவை, பொலிஸ் சேவை ஆகியவற்றிற்கான உறுப்பினர்களை நியமிப்பதற்குப் பொறுப்பாக இருந்து வந்த அரசியலமைப்புச் சபைக்குப் பதிலாக நாடாளு மன்ற சபை என்ற சபையை நியமிப்பதற்கு 18 ஆவது அரசியலமைப்பு திருத்தச்சட்டம் வழி வகுத்திருக்கின்றது.

இந்த நாடாளுமன்ற சபையில் பிரதமர், எதிர்க்கட்சித் தலைவர் மற்றும் சபாநாயகர் ஆகியோர் அங்கம் வகிப்பார்கள்.

அத்துடன் பிரதமரும் எதிர்க்கட்சித் தலை வரும் தமக்கு விருப்பமான தமது இனமல் லாத வேறு இனக் குழுமத்தைச் சேர்ந்த இரண்டு பேரை நியமிப்பதற்கு அதிகாரம் பெற்றிருக் கின்றார்கள். இவ்வாறு நியமிக்கப் படுகின்ற இருவர் உட்பட 5 பேர் கொண்ட தாக இந்த நாடாளுமன்ற சபை இருக்கும்.

இந்த சபையே நீதிச் சேவை, பொதுச் சேவை, காவல்துறை தேர்தல் ஆணையகம், மனித உரிமைகள் போன்ற துறைகளுக் கான ஆணை யாளர்களையும், ஆணைக் குழு உறுப்பினர் களுக்கான பெயர்களையும் ஜனாதிபதிக்கு சிபாரிசு செய்யும் அதிகாரத் தைப் பெற்றிருக் கின்றது.

இவ்வாறு சிபாரிசு செய்யப்படுகின்றவர் களை ஜனாதிபதி ஏற்க வேண்டும் என்ற கட் டாயம் 18ஆவது அரசியலமைப்புத் திருத்தச் சட்டத்தில் இல்லை.

இந்த அடிப்படையிலேயே நாடாளுமன் றச் சபை உறுப்பினராக தமிழ்த்தேசிய கூட் டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந் திரன் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்த நியமனத்தை நிராகரித்துள்ளது தொடர்பாக கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன்,

18 ஆவது அரசியலமைப்புத்திருத்தச் சட்டத்தை தமிழ்த்தேசிய கூட்டமைப்பு ஏற்றுக் கொள்ளாத நிலையிலேயே இந்த நியமனத் தைத் தானும் தமது கட்சியும் நிராகரித்துள்ள தாகக் கூறினார். (ச-5)

## பான் கீ மூனி...

நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூனை சந்தித்து பேச்சுவார்த்தை நடத்துவார் என எதிர் பார்க்கப்படுகிறது.

ஐக்கிய நாடுகளின் 65 ஆவது பொதுச் சபைக் கூட்டத்தில் உரையாற்றியதன் பின்னர் ஜனாதிபதி பான் கீ மூனை சந்திக்க உள்ளார்.

ஐக்கிய நாடுகளின் நிபுணர்கள் குழு இந்த வாரத்தில் பணிகளை ஆரம்பிக்கும் என தெரிவிக்கப்படுகிறது.

உண்மையைக் கண்டறியும் ஆணைக் குழுவினால் விசாரணைகள் முன்னெடுக் கப்பட்டு வருவதாகவும் ஐக்கிய நாடுகள் அமைப் பின் நிபுணர்கள் குழுவின் விசாரணைகள் அவ சியமில்லை எனவும் வெளிவிவகார அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (ச-5)

## வெளிநாடுகள் தலை...

களுடன் நேற்று இடம் பெற்ற கலந்துரையாட லில் கருத்துரைத்த ரணில் விக்கிரமசிங்க அரசாங்கத்தினால் நிறைவேற்றப்பட்டுள்ள 18ஆவது அரசியலமைப்பு சீர்திருத்தத்திற்கு உள்நாட்டில் மாத்திரம் இன்றி வெளிநாட்டி லும் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளதாக குறிப்பிட்டுள் ளார்.

இதற்கிடையில் புதிய அரசியல் சட்டத்தின் கீழ் நாடாளுமன்ற சபைக்கு எதிர்கட்க்சி தலை வரின் நியமிக்கப்பட வேண்டிய உறுப்பின ராக தமிழ் தேசிய கூட்டமைப்பின் நாடாளு மன்ற சுமந்திரன் பரிந்துரைக்கப்பட்டார்.

எனினும் தமிழ் கூட்டமைப்பு இதனை நிராகரிக்கும் என தாம் முன்னதாகவே அறிந் திருந்ததாகவும் ரணில் விக்கிரமசிங்க தெரி வித்துள்ளார்.

இதேவேளை நாடாளுமன்ற சபையில் தாம் கலந்து கொள்ளப் போவதில்லை என் பதுடன் தம்மால் நியமிக்கப்பட்டவரும் அதனை புறக்கணித்துள்ளார். இந்த நிலையில் நாடாளு மன்ற சபை குறித்த தீர்மானம் எடுப்பதற்கு அரசாங்கத்தினால் மற்றுமொரு சீர்திருத்தம் முன்வைக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ள தாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (ச-5)

## கிளிநொச்சி வலய ஆசி...

வடமாகாண கல்வி அமைச்சுச் செயலா ளரினால் 15.08.2010ஆம் திகதி வழங்கப் பட்ட அறிவுறுத்தலுக்கமைவாகவும் வடமா காண மாகாணக்கல்விப்பணிப்பாளரின் 16.08.2010ஆம் திகதி கடிதப்பிரகாரமும் யாழ். மாவட்டத்தில் இணைப்புப் பெற்று கடமை யாற்றும் கிளிநொச்சி வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள், உத்தியோகத்தர்களின் இணைப் புக்கள் அனைத்தும் 07.09.2010ஆம் திகதி யுடன் இடைநிறுத்தப்படுகின்றன.

அதற்கமைவாக தாங்கள் 07.09.2010 ஆம் திகதி தங்களுடைய நிரந்தரப்பாடசாலை களில் கடமையினை பொறுப்பேற்கவேண்டும். அவ்வாறு தாங்கள் தங்களுடைய நிரந்தர பாட சாலையில் கடமையைப் பொறுப்பேற்று அதி பரினால் உறுதிப்படுத்தப்பட்ட கடமையேற்றல் கடிதத்தை சமர்ப்பித்து கிளிநொச்சி வலயத் தில் தங்களது புரட்டாதி மாதச் சம்பளக் கொடுப் பனவை பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள் ளப்படுகின்றீர்கள் என்றுள்ளது. (ச)

## இறுதிப் போரின் இறு...

தலைவர் பிரபாகரன் சரண் அடைய விரும்பி இருக்கவில்லை.

அதனால் தான் தோற்கடிக்கப்படுகின்ற மைக்கு முதல்நாள் கூட புலிகள் பதில் தாக் குதல் ஒன்றை நடத்தித் தப்பிச் செல்கின்ற மைக்கு முயற்சித்தனர். அவர்கள் சரண் அடைந் திருந்தால் பிரச்சினை தீர்ந்திருக்கும்.

படையினர் ஏராளமான இழப்புகளுக்கு மத்தியில் உக்கிரமாகப் போரிட்டு வெற்றியை தொட்டுக் கொண்டிருந்தார்கள். அந்த இறுதி நிமிடத்தில் தான் புலிகள் யுத்த நிறுத்தத்துக்கு தயார் என்று தூது அனுப்பினார்கள்.

ஆகவேதான் அக்கோரிக்கையை நாம் நிராகரிக்க வேண்டி ஏற்பட்டது. புலிகள் சரண் அடைய வருகின்றார்கள் என்று எமக்கு எவ ரும் அறிவித்து இருக்கவில்லை. நாம் பொது மக்களுக்கு பாதிப்பு ஏற்படக் கூடாது என்பதில் பற்றுறுதியாக செயற்பட்டமையாலேயே புலி களை தோற்கடிக்க எமக்கு காலம் எடுத்தது.

பொதுமக்கள் நலனை முன்னிறுத்தி செயற்பட்டிருக்காவிட்டால் 24 மணித்தியா லங்களுக்குள்ளேயே புலிகளின் இடத்தைப் பிடித்திருப்போம். ஆனால் எமக்கு அந்த இடத் தைப்பிடிக்க இரு மாத காலம் எடுத்துள்ளது.

ஆகவே நாம் எதிர்கொண்டிருந்த சவால் களை சர்வதேச சமூகம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். பயங்கரவாதத்தால் பீடிக்கப்பட் டிருக்கும் நாடுகள் இலங்கையை கட்டாயம் முன்னுதாரணமாகக் கொண்டு செயற்படுத் தல் வேண்டும்.

அரச படையினர் மனிதாபிமானத்தை ஒரு கரத்திலும் ஆயுதத்தை இன்னொரு கரத் திலும் ஏந்திக் கொண்டுதான் சண்டையிட்டனர் என்றுள்ளார். (ச-5)


INFORMATION TECHNOLOGY PARK
Jaffna, Sri Lanka.
Under the purview of the
Ministry of Technology and Research
MPCS Building, 127, K.K.S.Road, Jaffna, Sri Lanka.
Office: 021 222 3641 Fax : 021 222 3643

அரச நிறுவனமான தகவல் தொழில்நுட்பப் பூங்காவில் கீழ்வரும் கற்கைநெறிகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

On-Line Class
Diploma in PC Application & Office Management
(MS Office syllabus included)

Diploma courses
Diploma in MS Office
Diploma in DTP

Work Shop Classes
Adobe Photoshop
Internet & E-mail

Certificate Courses

| | |
|---|---|
| Ms Word | Ms Excel |
| Ms Access | Visual Basic |
| CorelDRAW | PageMaker |
| Pascal | HTML & J Scripts |
| Java | C/C++ |


சகல கற்கை நெறிகளுக்குமான
பதிவுக் கட்டணம் : 250/-

விண்ணப்பப்படிவங்களுக்கும், பதிவுகளுக்கும் நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்.

வாரநாள் வகுப்புக்கள் ஆரம்பம் : 24/09/2010
வாரஇறுதி வகுப்புக்கள் ஆரம்பம் : 25/09/2010

- Centre for Information Technology -
- Executive Officer -


## மரண அறிவித்தல்



### நாகமுத்து கந்தசாமி

சுழிபுரம் பிரதான வீதியை பிறப் பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நாகமுத்து கந்தசாமி நேற்று (16.09.2010) வியாழக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் நாகமுத்து வள்ளி தம்பதிகளின் அன்புப் புதல்வரும் செல்வமணியின் அன்புக் கணவ ரும் கஜேந்திரன் (தனியார் சிற் றூர்தி சங்க (782) செயலாளரும், பஸ் உரிமையாளரும்), மோகனா, தர்சன்(சாரதி தனியார் சிற்றூர்தி 782), சுதாகரன் (லண்டன்) ஆகியோ ரின் பாசமிகு தந்தையும் சிறிகாந்தனின்(டுபாய்) பாசமிகு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் இன்று வெள்ளிக்கிழமை (17.09.2010) மதியம் 12.00 மணியளவில் நடைபெற்று தகனக் கிரியைக்காக பூதவுடல் திருவடிநிலை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

பிரதான வீதி,
சுழிபுரம்.

தகவல்
குடும்பத்தினர்.

(2486)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.09.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.